
தண்ணீரிலே
தாமரைப்பூ
ரமணிசந்திரன்

# தண்ணீரிலே தாமரைப்பூ

ரமணிசந்திரன்

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை
இராயப்பேட்டை, சென்னை–600 014.

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : தண்ணீரிலே தாமரைப்பூ |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| முதற் பதிப்பு | : டிசம்பர், 2002 |
| இரண்டாம் பதிப்பு | : ஜனவரி, 2004 |
| மூன்றாம் பதிப்பு | : ஏப்ரல், 2005 |
| நான்காம் பதிப்பு | : ஜூன், 2006 |
| ஐந்தாம் பதிப்பு | : செப்டம்பர், 2007 |
| ஆறாம் பதிப்பு | : ஜனவரி, 2009 |
| ஏழாம் பதிப்பு | : மே, 2010 |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| தாளின் தன்மை | : 11.6 Kg. வெள்ளைத் தாள் |
| மொத்தப் பக்கங்கள் | : 160 |
| அச்சு எழுத்து | : 10 புள்ளி |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |

**விலை: ரூ.60.00**

| | |
|---|---|
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |



# தண்ணீரிலே
# தாமரைப்பூ



# தண்ணீரிலே தாமரைப்பூ





## 1



அன்றையக் கூட்டத்தின் நிகழ்வுகள் அனைத்தையும், மனதில் வரிசைப் படுத்திக் கொண்டு, புவனேசுவரன், தன் கம்ப்யூட்டரின் முன்னே அமர்ந்தான்.

துணி மில் உரிமையாளர்கள் இன்றைக்கு என்னென்ன இடைஞ்சல்கள், இக்கட்டுகளைச் சமாளித்துத் தொழில் நடத்த வேண்டியிருக்கிறது என்பது பற்றி, சங்கத் தலைவர், வெகு அழகாகவே எடுத்துரைத்தார். அதிலும் ஆளும் கட்சிக்குக் கொஞ்சம் ஜால்ராப் போட்டுத்தான் பேசினார்.

தொழில் நடத்தும்போது, ஆளும் கட்சியை அணைத்துப் போக வேண்டியதும் கட்டாயம்தான். ஓரளவு எதிர்க் கட்சியையும்தான். இல்லாவிட்டால் அடுத்து ஆட்சிபீடத்தில் ஏறும்போது இவர்களை. ஏறக் கட்டிவிட மாட்டார்களா? எனவே அதில் ஒன்றும் தப்பு இல்லை.

ஆனால் தொழில் தொடர்பான இடைஞ்சல்களை அகற்றும் விதம், இக்கட்டுகளைச் சமாளிக்கும் விதம் பற்றி அவர் தெரிவித்த யோசனைகள்தான் கொஞ்சம் உப்புச் சப்பில்லாதவை களாக உபயோகம் சற்றும் அற்றவையாகப் புவனேசனுக்குத் தோன்றின.

சும்மா பொதுப்படையாக உழைக்க வேண்டும், ஒற்றுமையாய் இருக்க வேண்டும் என்று வெறும் வாக்கியங்களாகச் சொல்வதாலோ, ஒவ்வொரு வாக்கியத்தையும் அவர் சொல்லச் சொல்லப் பின்னால் ஒரு கூட்டத்தைக் கொண்டு ஆமாம் ஆமாம் என்று கோஷமிட வைப்பதாலோ என்ன லாபம்?

இந்தத் தொழிலில் உள்ள சிரமங்கள் அங்கு வந்திருந்த எல்லோருக்கும் தெரியும்.

பஞ்சின் விலை உயர்ந்துவிட்டது. வரி அதிகமாகி விட்டது. சங்கம் அமைத்துக் கொண்ட தொழிலாளர்கள், அதிக ஊதிய உயர்வு கேட்டார்கள். ஓரளவு செய்யலாம்தான். ஆனால் சங்கத் தலைவர்கள், அவர்களைப் பிடியில் வைத்திருந்த தாதாக்கள் மனச் சாட்சியே இல்லாமல் கண்டபடி பணம் கேட்டார்கள். போதாக் குறைக்கு, அரசியல்வாதிகள் வேறு. ஆற்றில் தண்ணீர் போகிறது, அய்யா குடி... அம்மா குடி என்கிற மாதிரி இதற்குக் கொடு... அதற்குக் கொடு என்று கண்ணை மூடிக் கொண்டு காசு பிடுங்க முயன்றார்கள்.

கேட்கக் கேட்க, எல்லோருக்கும் கொடுத்துக் கொண்டிருந்தால், கோடிக்கணக்கில் பணத்தைக் கொட்டி மில்லை நடத்தும் உடைமைக்காரன் நிலை என்ன ஆகும்?

எந்தத் தொழிலிலுமே, இப்படிப்பட்ட சிரமங்கள் உண்டுதான்.

சிரமங்களையும், இழப்புகளையும் தவிர்ப்பது எப்படி என்று கலந்து பேசித் தீர்வு காண்பதை விட்டுவிட்டு, பெரும் பான்மையோர் வெட்டிப் பேச்சு பேசிய போதும், புவனேசுவரனைப் போலத் துடிப்புள்ள இளைஞர்களும் பலர்

அங்கே இருந்தனர். அவர்களது மனப் போக்கை உடைய பெரியவர்களும் சிலர் இருக்கவே, இந்தக் கூட்டத்தினுள்ளே இன்னும் சில சிறு கூட்டங்களும் நடத்தப்பட்டன.

அவர்கள் பல்வேறு கருத்துக்களையும் ஒருவருக்கொருவர் ஜப்பானியர் போலப் பரிமாறிக் கொண்டனர்.

ஜப்பான்காரர்களிடம் ஒரு பழக்கம் இருக்கிறது. ஒரு நிறுவனத்தில் ஏதேனும் செய்வது என்றால் முக்கிய அதிகாரிகள் எல்லோரும் ஒன்றாகக் குழுமி, பிரச்சனை பற்றிய அவரவர் கருத்துக்களையும், அடுத்துச் செயல்பட வேண்டிய முறை பற்றியும், தயக்கமின்றிப் பேசுவார்கள். அதன்பின் பெரும் பான்மைக் கருத்தை ஏற்று அதன்படி, எல்லோருமாகச் செயல் படுவார்கள். அதனாலேயே அவர்கள் தொழில் துறையில் அவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்று ஒரு பொருளாதார மேதை எழுதியிருந்ததைப் பற்றி எடுத்துக் கூறி நாமும் அது போலச் செய்யலாம் என்று ஐடியாக் கொடுத்தது புவனனேதான்.

அதைத் துடிப்புள்ள மற்றவர்களும் ஏற்றுக்கொள்ள அவர்கள் எல்லோருக்கும் பயனுள்ள பல கருத்துக்கள் கிடைத்தன.

துண்டு துண்டாக, தந்தி வாசகம் போலச் சுருக்கமாக எழுதி வைத்திருந்தவைகளை வரிசைப்படுத்தி, தன் சின்னக் கம்ப்யூட்டரில் புவனஞ்சன் பதிவு பண்ணத் தொடங்கியபோது, அவன் அறையின் மணி ஒலித்தது.

மெல்ல யாரோ அதைத் தொட்டுவிட்டு உடனே விட்டுவிட்ட மாதிரி.

தயக்கமா? அல்லது வெகு பவ்வியமாக என்று எடுத்துக் கொள்ள வேண்டுமா?

யாரோ புதிதாக வேலைக்குச் சேர்ந்தவர்களாக இருப்பான். இரவு உணவு பற்றிக் கேட்க வந்திருப்பான் என்று எண்ணிய

புவனன், கம்ப்யூட்டரிலிருந்து பார்வையை உயர்த்தாமலே "யெஸ் உள்ளே வரலாம்" என்றான்.

கதவு திறக்கப்பட்டபோதும் கை வேலையிலேயே கவனமாக "நான் ரெஸ்டாரண்டுக்கே போய்ச் சாப்பிட்டுக் கொள்கிறேன்" என்று சொல்லும்போதே பார்வை வட்டத்துள் வந்த ஏதோ முரணாகப்படவே சட்டெனை விழியுயர்த்திப் பார்த்தான்.

பார்த்ததும் திகைத்தான்.

ஏனெனில், கதவை ஒட்டி நின்று கொண்டிருந்தது அந்த நட்சத்திர ஹோட்டலில் பணி புரிகிற யாரும் அல்ல. ஒரு பெண்.

கண்ணில் கவலை கலந்த பயத்துடன் ஆனால், அதைக் காட்டிக் கொள்ளாதிருக்கப் பெருமுயற்சி செய்தபடி திறந்தால் தானாகவே மூடிக்கொள்ளும் அறைவாயில் கதவருகேயே நின்று கொண்டிருந்தாள்.

இந்தக் கவலையும் பயமும் நடிப்பு என்றால் இவள் நடிக்க ஹாலிவுட் செல்ல வேண்டியவள்.

ஆனால் இந்த நேரத்தில் அவன் அறையில் அவளுக்கு என்ன வேலை?

அறை, அடையாளம் தெரியாமல் வந்துவிட்டேன் என்று சொன்னால் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ள வேண்டும். கதவைத் தட்டி அனுமதி கேட்டு உள்ளே வந்து விட்டு...

ஆனால் அவள் அப்படிப்பட்ட அசட்டுத் தனங்கள் ஏதும் செய்தாளில்லை. மாறாக "இப்படி உங்களைத் தொல்லை செய்வதற்காக என்னை மன்னிக்க வேண்டும்" என்று பணிவாகவே கேட்டுக் கொண்டாள்.

குரலில் தடுமாற்றத்தைக் கண்டு கொண்டவனுக்கு ஏனோ இரக்கம் உண்டாயிற்று.

ஆனால், அதைக் காட்டிக் கொள்ளாமல் "என்ன விஷயம்? இதற்கு முன் உன்னைச் சந்தித்த நினைவு எனக்கு இல்லையே" என்று கேட்டான்.

அதட்டாத போதும், சற்று எடுப்பாகக் கேட்டான் என்றுதான் சொல்ல வேண்டும்.

அதுவே அவளது முகத்தைக் கன்றவைக்கப் போதுமானதாக இருந்தது. "சா சாரி சார்" என்றாள் அவள் எழும்பாத குரலில் "நான்... நான் உங்களுக்கு அறிமுகம் ஆனவள் இல்லை. ஆனால்... நான் உங்களைப் பார்த்திருக்கிறேன்... அதற்காக நீங்கள் எனக்கு உதவி செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாதுதானே. ஆனால்... ஆனாலும் தயவு செய்து நீங்கள் எனக்கு இந்த உதவி செய்ய வேண்டும்... உதவி செய்யும்படி உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன் சார். எனக்கு இங்கே ரொம்பப் பயமாகவும், கவலையாகவும் இருக்கிறது. இந்த உதவியை நான் என் உயிர் உள்ள மட்டும் மறக்க மாட்டேன் சார்" என்று வெகு வினயமாக வேண்டினாள்.

இவள் உயிர் உள்ளவரை நினைத்திருப்பதாலோ அன்றி அடுத்த வினாடியே அவனை மறந்து போவதாலோ அவனுக்கு சாதகமோ, பாதகமோ என்ன விளைந்து விடப்போகிறது? அவள் எவ்வளவுதான் அழகான பெண்ணாக இருந்த போதும். தோளைக் குலுக்கிய போதும், என்னவென்று கூடக் கேளாமல், அனுப்ப அவனுக்கு ஏனோ மனம் வரவில்லை. எனவே "என்ன விஷயம்?" என்று எந்த உணர்ச்சியையும் காட்டாத குரலில், புவனேசுவரன் அமர்த்தலாக வினவினான்.

"சா...ர்..." என்றவளின் முகம் மறுபடியும் சிவந்தது. மனதில் இருப்பதைச் சொல்ல இயலாதவள் போலத் திணறினாள். ஆனால் சொல்லித்தான் ஆக வேண்டும் என்று முடிவு செய்தவள் போல அவள் ஒரு பெரிய மூச்சை எடுத்துக்கொண்டு நிமிர்ந்த போது "உட்கார்ந்து பேசு. உட்கார்ந்து பிரச்சனை என்னவென்று சொல்லு" என்றான் அவன்.

எதிர்பாராமல் அதிகப்படியாகப் பணம் செலவு செய்து விட்டேன். சில நூறுகளோ, ஆயிரமோ தாருங்கள் என்று கௌரவப் பிச்சை கேட்கப் போகிறாளா?

ஏற்கனவே கால்களில் பலவீனமாக உணர்ந்து கொண்டிருந்தவள் போல, அவனது ஒரு வார்த்தையில் டக்கென அமர்ந்து கொண்டாள் அவள் "ந நன்றி சார் வ வந்து..."

"அதுதான் வந்து விட்டாயே என்று பழைய ஜோக் அடிக்கலாம். ஆனால் அதைவிடச் சற்று சீக்கிரமாக நீ வந்த விஷயத்தைச் சொல்லி முடித்தால். எனக்குப் பேருபகாரமாக இருக்கும். எனக்கு நிறைய வேலை இருக்கிறது" என்று கம்ப்யூட்டரைக் காட்டினான் அவன்.

மீண்டும் அவள் முகம் குப்பெனச் சிவந்தது.

"சாரி, சார். எந்தவித உரிமையும் இல்லாதபோதும் உங்கள் வேலை நேரத்தில் குறுக்கிட்டு உங்களைத் தொல்லை செய்து கொண்டிருக்கிறேன். தயவு செய்து அதற்காக என்னை மன்னித்து விடுங்கள் சார், நான் நான் முதலில் விஷயத்தைச் சொல்லி விடுகிறேன் சார். இன்று... இன்று ஓர் இரவு மட்டும் என்னைக் காப்பாற்றுங்கள் சார். காப்பாற்றி விட்டால் நாளைக்கு நான் என் வழியே போய்விடுவேன்."

"தாராளமாய். ஆனால் உன்னை எதிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்று இன்னமும் நீ சொல்லவே இல்லையே" என்று சற்று கிண்டலாகவே கேட்டவன், அவளது தவிப்பைக் கண்டதும் இளகி, "சரிசரி, உன் வசதி போலவே சொல்லு. ஆனால் மணிக்கணக்காக ஆக்கிவிடாதே" என்றான் அவன்.

எவ்வளவு மோசமான விஷயம் என்றாலும் அதைச் சொல்லித்தான் ஆக வேண்டும் எனும்போது அனாவசியமாக எதற்கு நேரம் கடத்துவது?

ஒரு பெரிய மூச்சை எடுத்துக் கொண்டு அவள் சொல்லத் தொடங்கினாள்.

இந்த மாநாட்டுக் கூட்டத்துக்காக எம்டி அவளை பங்களூருக்கு அழைக்கும்போதே அவளுக்குச் சற்று உதைப்பு தான். ஆனால் எம்டி சொல்லுவதைக் குறிப்பெடுத்துத் தருவது தான் வேலை. அதற்குச் சம்பளம் போகக் கணிசமான ஒரு தொகைவேறு தரப்படும் என்றதோடு அவள் தங்கும் அறையில அவளைப் போலவே இந்த மாநாட்டுக்கு வந்திருக்கும், இன்னும் மூன்று பெண்களும் தங்குவார்கள் என்றதும் உதைப்பும் தயக்கமும் மறைந்து போயிற்று. தந்தையிடம் விவரம் சொல்லி விட்டுக் கிளம்பி வந்து விட்டாள்.

"ஆனால், சொன்னபடி, மற்ற மூவரும் அறையில் தங்கவில்லையாக்கும்?"

"தங்கினார்கள், சார் இது... இது ஐந்து நாள் கூட்டம் அல்லவா? நேற்று இரவு வரை, மற்ற மூன்று பேரும், அறையில் தான் சார் இருந்தார்கள். ஆனால் இ... இன்றுதான்..."

"இன்றென்ன? மற்ற மூவரும் மாயமாய் மறைந்து விட்டார்களா?"

"அதுதான் சார், வி...விஷயம்! மற்ற மூவரும் இன்று... இன்று அவர்கள் மூவரும், ஒரு மாதிரிச் சிரித்துவிட்டு, அதிகப்படி வேலை செய்து அதிகப்படியாகச் சம்பாதிக்கப் போவதாக சொல்லிவிட்டு எங்கோ போய் விட்டார்கள் சார். இனிமேல் அறை முழுவதும் உன் வசதிக்குத்தான் என்று ஒரு மாதிரிச் சிரித்துவிட்டுப் போய் விட்டார்கள். அத்தோடு... எ...எம்டி வேறு, இரவில் அந்த அறைக்கு வரப்போவதாகக் கூறுகிறார். இன்று வரை எடுத்த குறிப்புகளைச் சரி பார்க்கத்தான் என்று அவர் சொன்னாலும், அவர் பார்வையும் நடப்பும் சரியில்லை சார். சொல்லப்போனால் இங்கே பங்களூருக்கு வந்ததிலிருந்து அவர் பேச்சில் இரு பொருள் இருப்பதாகவே தெரிகிறது சார். அப்புறம்... பார்வையும் ஒரு மாதிரி... எல்லாம் எனக்குப் பயமாக இருக்கிறது சார். இன்று ஒரு நாள் காப்பாற்றி விட்டால், நாளைக்குச் சென்னைக்குக் கிளம்பி விடுவதால், தப்பி விடுவேன் சார். தயவு பண்ணுங்கள் சார்."

“ம்ம்ம்... எப்படி உதவ வேண்டும் என்கிறாய்?”

தொண்டையைத் தடவி விட்டுக் கொண்டு “கொ...கொஞ்ச நேரம் சார். எம்டி நான் இருக்கும் அறைக்கு வந்து. அங்கே ஆள் இல்லை என்று திரும்பிப் போகும்வரை. அங்கே உள்ளே பூட்டிக் கொள்ளக் கூட வழியில்லை சார். ஏதோ சின்னப் பார்ட்டி இருப்பதாகவும் அது முடிந்து வந்து கதவைத் தட்டிக் கொண்டிராமல் உள்ளேவர வசதியாக இருக்கட்டும் என்று சாவியையும் எடுத்துப் போய் விட்டார் சார்... “ என்று மீண்டும் ஒரு பெரிய மூச்செடுத்தாள் அவள்.

அவன் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்க “அதுவரை அவர் வந்து தேடிவிட்டுப் போகும்வரை இங்கே தங்கியிருக்க இடம் கொடுங்கள் சார். ப்ளீஸ்” என்று ஒருவாறு சொல்லி முடித்துவிட்டாள் அவள்.

அவன் முகத்தில் மாறுதல் இல்லை.

சரி இல்லை என்று எதுவும் கூறாமல் “யார் உன் எம்டி?” என்றும் மட்டும் கேட்டான்.

“மமல்லி மில்ஸ் சார்.”

அவளது பதில் அவனை நம்ப வைத்தது போலத் தோன்றியது. “அந்த மனிதரை நம்பி நீ வந்தது பெரிய தப்பு. அந்த அளவுக்குப் பணம் தேவைப்பட்டதா?”

அதாவது பணத்துக்காக எதற்கும் துணிந்து வந்தாயா என்கிறானா?

முகம் கன்றிய போதும் “பணம் அவசியம்தான் சார். ஆனால் மற்ற பெண்களோடு தங்குவது என்று அறை ஏற்பாட்டை அறிந்த பிறகுதான். நான் இந்தப் பயணத்துக்கு ஒத்துக் கொண்டேன் சார்” என்று சற்று அழுத்தமான குரலில் இயம்பினாள் அவள். இதையெல்லாம் விளக்கிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறதே என்ற குன்றல் அவளுக்கு.

லேசாகத் தோளைக் குலுக்கினான் அவன். அவளை நேராகப் பார்த்து "காப்பாற்றக் கேட்டு என்னிடம் வந்திருக்கிறாயே. நானும், அந்த மல்லி மில்காரர். மிஸ்டர் சுதனைப் போல இருக்க மாட்டேன் என்று உனக்கு என்ன நிச்சயம்?" என்று கேட்டான்.

முகம் தெளிவுற "நிச்சயம்தான் சார்" என்றாள் அவள் உறுதியான குரலில்.

அவன் புருவம் உயர்த்தவும், காரணத்தையும் சொன்னாள். "பங்களூருக்கு வந்ததிலிருந்தே எனக்கு உள்ளூர நெருடல் சார், இங்கு வந்தபின், எங்கள் எம்டிதான், வேறு மாதிரி நடக்கிறாரா? அப்படியின்றி... ஏதோ சொல்லுவார்களே சார். இந்த... 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்கிற மாதிரி. அந்த மாதிரி நாம்தான், இவரைத் தப்பாக நினைக்கிறோமா அல்லது, எல்லோருமே இங்கே இப்படித்தான் பழகுகிறார்களா என்று இதனால் கிடைத்த நேரம் எல்லாம், மற்றவர்களையும் கவனித்துக் கொண்டேதான் இருந்தேன். நீங்கள் மட்டும்... அதாவது இந்த ஹோட்டலில் தங்கிய ஆண்களில் நீங்கள் மட்டும்தான் பெண்களை ஒரு மாதிரிப் பார்க்கவே இல்லை சார்" என்று விளக்கினாள் அவள்.

தான் அறியாமல் தன்னை ஒருத்தி கண்காணித்து தன் இயல்பைக் கணித்திருக்கிறாள் என்பது அவனுக்கு அவ்வளவாகப் பிடித்தமாக இருக்கவில்லை.

எனவே அவளைக் கீழ்க்கண்ணால் நோக்கி "யாருடைய கண்காணிப்பை எதிர்பார்த்தோ, நான் இப்படி மகா உத்தமனாக நடித்திருந்தால்?" என்று ஏளனமாகக் கேட்டான் அவன்.

அதிர்ந்து போனாள் அவள்.

ஒரு வேளை அப்படி இருந்தால்?

அவள் மிரண்டு விழித்தாள்.



## 2



அவன்-புவனேசுவரன் கூறியது. அப்படி ஒன்றும் நடக்க முடியாதது அல்ல.

அவனுக்குத் திருமணப் பேச்சு நடந்து கொண்டிருக்கக் கூடும். பெண் கொடுப்பவர் யாராவது, அவனது நடவடிக்கை களைக் கண்காணிக்க ஏற்பாடு செய்வார்கள் என்று எதிர் பார்த்தே அவனே சொன்னது போல 'மகா உத்தமனாக நடித்திருந்தால்?' அல்லது அவன் ஆசைப்படும் பெண் உளவு பார்க்கிறாளே என்று கூட நல்லவன் வேஷம் பூண்டிருக்கலாம்.

ஏன் அவனுக்குத் திருமணமே ஆகியிருந்து அவன் மனைவிக்காகவே கூட இந்த மாதிரிப் பாவலா காட்டியிருக்கலாமே!

இப்படி ஒரு கண்காணிப்பை எதிர்பார்க்கிறவன் நிச்சயமாக அயோக்கியனாகத்தானே இருக்க வேண்டும்?

கண்மூடித் திறக்குமுன் இந்த உலகையே சுற்றி வந்துவிடக் கூடியது மனித மனம்.

அவள் மனமும் என்னென்னவோ எண்ணிக் கலங்கிப் போயிற்று.

வலைக்குத் தப்பிப் புலிக்கு இரையாகிற நிலையோ என்று பயந்தும் போனாள்.

ஏசி அறை சத்தம் போட்டாலும் வெளியே கேட்காது. என்ன பயங்கரம். அவளாகவே வந்து மாட்டிக் கொண்டாளே.

ஆனாலும், அவ்வளவு மோசமாகவா இருப்பான்? அப்படியே இருந்தால்?

கை, கால், மனது எல்லாம் ஓய்ந்து சோர்ந்து போய்விட, இங்கியிருந்து தப்பி ஓடுவது கூட முடியாது போல இருந்தது. செய்வது அறியாமல், "சா...ர்?" என்று தீனக்குரலில் முனகினாள்.

அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவனுக்குச் சிரிப்பு வந்தது. தன் சொந்த வாழ்வில் அனுமதியின்றி அத்து மீறிக் குறுக்கிட்டதற்குத் திருப்பிக் கொடுத்துவிட்ட மாதிரித் திருப்தியாகவும் இருந்தது. எனவே முறுவலித்து "பயப்படாதே. நான் அந்த வகை ஆள் அல்ல. ஆனால் என்னவோ பார்வையிலேயே கண்டுபிடித்த மாதிரிப் பேசினாயே என்று ஒரு சின்ன அதிர்ச்சி வைத்தியம் செய்தேன். அவ்வளவே" என்று அவளுக்கு விளக்கம் கொடுத்தான்.

கூடவே அவளைப் பற்றிய ஒரு தெளிவு அவனுக்கும் உண்டானதை அவன் உள்ளேயே வைத்துக் கொண்டான்.

அவளது முகம் முழுவதாகத் தெளியாவிட்டாலும் வெளுப்பு மாறி இயல்பு நிலைக்குத் திரும்பி வந்தது.

அவன் அறைக் கோடிக்குச் சென்று அங்கே இருந்த மினி ஃப்ரிஜ்ஜைத் திறந்து அதிலிருந்து ஒரு சிறு குளிர்பான பாட்டிலை எடுத்து வந்தான்.

அவளிடம் கொடுத்து "முதலில் இதைக் குடி. உன் பயத்தில் சாப்பாடு, தண்ணீர் எதையாவது நீ நினைத்தாயோ என்னவோ? பசித்தால் சொல்லு, அங்கே பழங்கள் கூட இருக்கின்றன" என்று காட்டினான்.

காய்ந்து போயிருந்த தொண்டைக்கு அந்தக் குளிர் பானம் அமுதமாக இருந்தது.

ஆனால் அவனிடம் எதைப் பேசவும் அவளுக்கு இப்போது பயமாக இருந்தது. மீண்டும் ஏதாவது அதிர்ச்சி வைத்தியம் செய்துவிட்டால்?

அவளது பேச்சை எதிர்பாராமல் அவனே தொடங்கினான். "பார் இந்த வீட்டில் மூன்று பகுதிகள் உண்டு. படுக்கையறை,

அதை ஒட்டிய வராண்டா. இந்த வரவேற்பு அறை. மற்ற இரண்டும் உனக்குச் சரியில்லை. உன் எம்டி வந்து போகும்வரை நீ இந்த சோஃபாவில் படுப்பதானாலும் உட்கார்ந்திருப்பதானாலும் அது உன் விருப்பம். ஆனால் என் வேலை முடிந்த பிறகுதான் நான் இங்கிருந்து போக முடியும். வேண்டுமானால் உனக்குப் பொழுது போவதற்காக டீவி வைத்துக்கொள்."

"வேண்டாம் சார். எதற்காக உங்கள் வேலையைக் கெடுத்துக் கொண்டு எனக்கு டீவி பார்க்க அப்படி ஒன்றும் ஆசையில்லை..."

"டீவி சத்தத்தில் என் வேலை கெடாது. இடையில் கூப்பிட்டுப் பேசி இடையூறு செய்யாதிருந்தால் போதும். அல்லது அந்த டீபாயில் பத்திரிகைகள், புத்தகங்கள் ஒன்றிரண்டு கிடக்கும். எடுத்துப்படி... மற்றபடி... முன்பே சொன்னேனே... உனக்குப் பசித்தால் அந்தப் பழங்களை எடுத்துச் சாப்பிடு. என்னிடம் கேட்கத் தேவையில்லை" என்றுரைத்துவிட்டு மீண்டும் வேலையில் ஆழ்ந்தான் அவன்.

இருக்க இடம் தருகிறேன். அதற்கு மேல் என்னைத் தொல்லை செய்யாதே என்று சொல்லாமல் சொல்லுகிறான். ஆனால் அவன் நல்லவனாகவே இருக்க வேண்டும் என்பதற்குச் சான்று இது. இது போதும் அவளுக்கு. அவனது அனுமதியே அவளுக்கு மாபெரும் உதவி.

நன்றி தெரிவிக்கலாமா என்று யோசித்துவிட்டு இப்போது கூப்பிட்டு வேலை நடுவில் கவனத்தைக் கலைப்பதை விட அறையை விட்டுக் கிளம்பும் போது அதைக் கூறுவதே சரி என்று முடிவு செய்தாள் அவள்.

வேலையில் முழுக்க ஆழ்ந்துவிட்ட அவனைப் பார்க்கையில் அவளுக்கு, அவளுடைய தந்தையின் நினைவு வந்தது. அவரும் கடும் உழைப்பாளியே! ஆனால் அவர் உழைத்தது அடுத்தவருக்காக. அவரது உழைப்பின் பயனை உணர்ந்து அவ்வப்போது உதவியும் வந்த பழைய முதலாளி

இறந்துவிட்டார். இப்போது அடுத்த தலைமுறை ரங்க நாதனுக்கே உடம்பு சரியில்லை எனும்போதும் உதவியேதும் செய்ய மறுக்கிறது.

ஊரில் உள்ள நோயாளிக்கு உதவ அவர்கள் தரும நிறுவனம் நடத்தவில்லையாம்.

மூன்று ஆண்டுகளுக்கு முன் தாயாருக்கு வந்த நோய், பெரும் பொருள் செலவுடன் அவளது உயிரையும் கொண்டு சென்றது. அதிலிருந்தே தந்தையும் சரியில்லை. அவரைப் பார்த்துக் கொள்ள அத்தை மட்டும் வந்திராவிட்டால் இந்த மகளால் சமாளித்திருக்கவே முடியாது.

எதையுமே வீட்டுப் பொறுப்பையும் சமாளித்திருக்க முடியாது. செலவையும் சமாளித்திருக்க முடியாது.

கணவர் இறந்தபின் வந்த பென்ஷன் பணத்தை வைத்துக் கொண்டு அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்தவள் பெரிய அத்தை சாவித்திரி. அத்தையுடைய பெண்கள் இருவரும் பெரியவர்கள். முன்பே திருமணமாகி ஒருத்தி புது டெல்லியிலும், ஒருத்தி வெளி நாட்டிலும் இருக்கிறார்கள்.

பொறுப்பு தீர்ந்தது என்று இருக்கும்போது தம்பி மனைவி சுகவீனப்படவும், அப்போது உதவி புரிய வென்றுதான் பவானியின் வீட்டுக்கு அத்தை வந்தது. அக்காவும் தம்பியும் அவ்வப்போது தேவைப்படும்போது ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்வது வழமைதான். சாவித்திரியுடைய மகள்களின் திருமண சமயங்களில் ரங்கநாதன் எவ்வளவோ உதவி செய்திருக்கிறார்தான். அதைப் போலவே உதவிக்கென்று வந்த சாவித்திரி தம்பி மனைவி இறந்து போய்த் தம்பியும் நோயாளியாகி விட தம்பியையும் வீட்டையும் பார்த்துக் கொள்ளவென்று அங்கே தங்கிவிட்டாள்.

தன் பணம் என்று ஒதுக்காமல் சாவித்திரி, அவளது பென்ஷன் பணத்தைக் கொண்டே வீட்டை நடத்தியது. பவானியை மிகவும் பாதித்தது. சிக்கனமாக நடத்த வேண்டிய கட்டாயம் வேறு.

சாவித்திரியின் சுமையைக் குறைப்பது அவளது கடமையல்லவா?

அவளது தகுதிக்குக் கிடைத்த வேலையில் மாதம் இரண்டாயிரம்தான் வந்தது. ஆனால் ரங்கநாதனின் உடல் நிலை காரணமாகத் திடீர் வைத்தியச் செலவுகளுக்குத்தான் அந்தப் பணம் பெரும்பாலும் செலவானது.

'சம்திங் இஸ் பெட்டர் தென் நத்திங்' என்று கிடைத்த வேலையை முழு ஈடுபாட்டுடனேயே செய்த போதும் கூடவே குறுக்கெழுத்து டைப் ரைட்டிங், கம்ப்யூட்டரில் அடிப்படை வேலைகள் எல்லாம் கற்றுத் தன் தகுதியை வளர்த்தாள். அதிகம் சம்பாதிக்க வேண்டுமே.

ஆனால் இதற்கெல்லாம் கூடப் பணம் வேண்டுமே.

அதனால்தான் இந்த பங்களூர்ப் பயணத்தைப் பவானி ஒத்துக்கொண்டதே.

ஆனால் மனிதர்கள் இவ்வளவு கேவலமாக இருக்கிறார்களே!

அல்லது அவள்தான் எம்டி சுதன் சாரைப் பற்றித் தப்பாக எண்ணிவிட்டாளா?

இல்லை. தப்பாக ஒன்றும் நினைக்கவில்லை. அவள் கன்னத்தைத் தட்டி 'இரவு வருகிறேன் தயாராயிரு' என்று சொல்லி ஒருவன் கண்ணை வேறு சிமிட்டிக் காட்டிய பிறகு அதைப் புரிந்து கொள்ளாவிட்டால் அதுதான் தப்பு.

ஆனாலும் ஐம்பது வயதைத் தாண்டியவர்.

தொலையட்டும், இன்று தப்பியாயிற்று. இது ஒரு பாடம். இனி இந்த மாதிரி நிலைமைகளில் மாட்டிக் கொள்ளாமல் கவனமாக இருக்க வேண்டும்.

எப்படி...

வேலை முடிந்த புவனேசுவரன் லாப்டாப்பை மூடி வைத்த போது மணி பன்னிரெண்டைத் தாண்டியிருந்தது.

அந்தப் பெண் என்ன செய்கிறாள் என்று திரும்பிப் பார்த்த போது அவள் உறங்குவது தெரிந்தது.

அயர்ந்த தூக்கம் போலும். தலை ஏதோ ஒரு கோணத்தில் சரிய, அதற்குச் சரியாக உதடுகள் லேசாகத் திறந்திருக்க, எப்படி உறங்குகிறாள் பாவம்.

இப்படியே தூங்கினால் நாளை கழுத்து வலிப்பது நிச்சயம். தலைக்குத் தாங்கலாக ஒரு தலையணையை வைத்துவிட்டால் பரவாயில்லாமல் இருக்கும் என்று எண்ணியவாறு அவன் எழுந்த போது அவளது இதழ்கள் அழகிய புன்னகையில் எழிலாய் வளைந்தன.

என்ன கனவிலோ என்று ரசனையுடன், நோக்கியவனின் முகம் சட்டெனக் கடுத்தது.

இப்படியே இரவு முழுவதும் இங்கேயே தங்கிவிடத் திட்டமா? அல்லது, இடையில் எழுந்து அவனிடம் ஏதாவது வம்பு பண்ண எண்ணமா?

அவள் யார் என்பது சொன்னதுதான். பெயர்கூடத் தெரியாது. இவளை இங்கே தங்க விட்டதே தப்போ என்னவோ?

அவளைத் தொட்டு எழுப்பப்பிடிக்காமல், அவள் காதருகே கைகளைத் தட்டி “ஹலோ!” என்று உரக்க அழைத்தான் புவனேசுவரன்.

அவனது அழுத்தமான கைதட்டலிலேயே தூக்கம் கலைந்து “எ...என்ன? என்ன.. யார்...” என்று அலையக் குலைய எழுந்தாள் அவள்.

திடுமெனத் தூக்கம் கலைந்து எழுந்து நின்றதில் அவளது கால்கள் தடுமாறின.

உதவிக்காக அவன் கைகள் நீட்ட, அனிச்சைச் செயலாய் அவள் பின்னடைவதைக் கவனியாதது போல “நன்றாகத் தூங்கிவிட்டாயே” என்றான் புவனன்.

கண்கள் தெளிவடைய கையைத்திருப்பி மணி பார்த்தாள் அவள்.

ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் "ரொம்ப நன்றி சார். இனிப் பயம் இராது" என்று குனிந்து தன் கைப்பையை எடுத்தாள்.

"மிஸ்டர் சுதன் மீண்டும் திரும்பி வந்தால்?" என்று சற்று முன் இருந்த எண்ணப் போக்கிற்கு நேர் விரோதமாகப் புவனின் வார்த்தைகள் வெளிவந்தன.

"மணி பன்னிரண்டரை சார். இன்னுமா..."

"வந்தால்?"

அவள் திகைப்புடன் நோக்க, "ஒரு வேளை, அவர் உன் அறையிலேயே காத்துக் கொண்டு கூட இருக்கக் கூடும்" என்றான் அவன் தொடர்ந்து...

அவள் முகம் மெல்ல மாறியது. கண்களில் ஐயம் படரப் புவனேசுவரனைப் பார்த்தாள் அவள்.

தோளைக் குலுக்கினான் அவன். "இதைத்தான் நல்லதிற்குக் காலமில்லை என்கிறார்கள் போல."

உதட்டைக் கடித்துக் கொண்டு தலை குனிந்து நின்றாள் அவள்.

சிறு அமைதியின் பின் "இவ்வளவு நேரம் இருந்த நம்பிக்கை இப்போது காணாமல் போவானேன்?" என்று புவனேசன் வினவினான்.

விழி உயர்த்தி அவன் முகத்தை நோக்கி "சாரி" என்றாள் அவள்.

மீண்டும் தோளைக் குலுக்கிவிட்டு அடுத்த அறையினுள் சென்றான் அவன். அவன் திரும்பி வந்தபோது, அவன் கையில் ஒரு தலையணையும் போர்வையும் இருந்தன.

அவைகளை சோஃபாவின் மீது வைத்துவிட்டு "முன்போல சோஃபாவில் தூங்குவதோ அன்றி உன் அறைக்குத் திரும்பிப் போவதோ உன் விருப்பம். போவதானால் கதவை லாக் போட்டுச் சாத்திவிட்டுப் போ. குட் நைட்" என்றவன் மீண்டும் உள்ளே சென்றுவிட்டான்.

தெரியாத திருடனுக்குத் தெரிந்த திருடன் மேல் என்பார்கள். ஆனால் புலிக் குகை நிச்சயமாகத் தெரிந்த பிறகு, உள்ளே புலி இருக்கிறதா என்று தெரியாத நிலையில் அதன் உள்ளே சென்று மாட்டிக் கொள்வதற்கு எதுவும் மேல்தான்.

அத்தோடு அவள் ஆராய்ந்த அளவில் இந்தப் புவனேசுவரன் நல்லவன்தானே?

திகைப்புடனே சற்று நேரம் நின்றுவிட்டு மெல்லப் பேரய் விளக்கை அணைத்தாள் அவள்.

ஆயினும், முன்போலத் தூங்க முடியவில்லை. ஒரு மணி நேரத்துக்கும் மேலாக அயர்ந்து உறங்கி விழித்துவிட்டது வேறு. மனிதன் கலக்கமும், குழப்பமும் சேர்ந்து கொள்ளத் தூக்கமின்றிக் கொஞ்ச நேரம், தூக்கமும் விழிப்புமாகக் கொஞ்ச நேரம் என்று இரவைக் கழித்துவிட்டு விடிகாலையில் மீண்டும் கண்ணயர்ந்தாள் பவானி.

மறுபடியும் அவன் எழுப்பும்படி ஆகிவிடக்கூடாது என்ற உறுதியோடு உறங்கத் தொடங்கியதால், அறையினுள் அரவம் உணர்ந்ததுமே எழுந்துவிட்டாள்.

புவனேசுவரனைக் கண்டதும், "இனி நான் என் அறைக்குப் போகிறேன் சார்" என்று கைப்பையை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

புருவ மத்தியில் சிறு முடிச்சுடன் புவனன் அவளைப் பார்த்தான்.

அவள் கேள்வியாய் நோக்கவும், "உன் அறை எண் ஐநூற்று ஒன்பதா? ஐந்தாவது தளம்?" என்று வினவினான்.

"ஆமாம் சார்" என்றாள் அவள் வியப்புடன். அவனுக்கு எப்படித் தெரியும் என்ற ஆச்சரியம் அவளுக்கு.

அவன் தெரிந்து கொண்டதில் பெரிய மர்மம் எதுவும் இல்லை.

துயிலச் செல்லுமுன், ஒன்றை நினைத்துவிட்டு, முரண்பாடாக வேறு ஒன்றைச் சொன்னதில், அவனுக்குத்

தன்னிடமே சிறு எரிச்சல். பலரையும் போல அழகான முகத்துடன் வந்து, பாவனையாகப் பேசவும் தலையாட்டி ஏற்றுக் கொண்டோமோ என்று உள்ளூர ஓர் உறுத்தல். தெளிவுப் படுத்திக் கொள்ள எண்ணி ரிசப்ஷனுக்கு போன் செய்தான்.

மாநாடு, முன்தினத்தோடு முடிந்துவிட்டது. எனவே மாநாட்டுச் செலவில், அறை வாடகை கொடுப்பதும், அன்றோடு முடிந்துவிடும். மேற்கொண்டு அந்த ஹோட்டலில் தங்கு வதானால், அவரவர் சொந்தச் செலவில்தான் தங்கியாக வேண்டும். அதாவது இந்த பெண் சொல்வது உண்மையானால் மல்லி மில்ஸ் சுதன்தான், இவளது அறையைத் தொடர்ந்து அன்றைக்கும் புக் பண்ணியிருக்க வேண்டும்.

அப்படித்தான் என்றது ஹோட்டல் நிர்வாகம். மல்லி மில்ஸ் பெயரில் இரண்டு அறைகள் தொடர்ந்து முன் பதிவு செய்யப் பட்டிருந்தன.

அவ்வப்போது வந்து தங்குகிறவன் என்பதால் அவன் கேட்ட விவரம் தர யாரும் தயங்கவில்லை.

இரு அறைகளின் எண்களையும் வாங்கிக் கொண்டு, இரண்டு இடங்களுக்குமே, புவனேசுவரன் போன் செய்து பார்த்தான். மிஸ்டர் சுதனின் சொந்தப் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த அதிகப்படி வசதிகள் கொண்ட ஏசி அறையில் டெலிபோன் அழைப்புக்கு யாரும் பதில் சொல்ல வில்லை.

ஆனால் மில் பெயரில் இருந்த அறையில் "எங்கே போய்த் தொலைந்தாய்?" என்று திருவாளர் சுதனின் எரிச்சல் மிகுந்த குரல் கேட்டது. அவர் இந்தப் பெண்தான் எங்கிருந்தோ போன் செய்வதாக எண்ணியிருக்கக் கூடும்.

ஆக இவள் பொய் சொல்லவில்லை.

அப்போதைக்கு ஒன்றும் பேசாமல் ரிசீவரை வைத்து விட்டான்.

எதற்கும் இருக்கட்டும் என்று காலையில் ஒரு தரம் போன் செய்ய முயன்றான். சுதன் அதே அறையில் இருக்காரா இல்லையா என்று தெரிந்து கொண்டு இவளை அனுப்புவது மேல் அல்லவா?

ஆனால் அந்த அறையில் யாரும் இல்லை. மல்லி மில்ஸ்காரர், இரு அறைகளையும் காலி பண்ணிப்போய் விட்டார் என்று, வரவேற்பிலிருந்து கிடைத்த தகவல், அவனையே அதிர வைத்து விட்டது.

இரண்டு அறைகளையும் காலி செய்து விட்டார் என்றால், இந்தப் பெண்ணின் நிலைமை என்ன?

## 3

சும்மாவே, புவனேசுவரனுக்கு அவள் பற்றிய யோசனைதான்.

கைப்பையை வைத்திருக்கிறாள். அந்த அளவில் சந்தோஷம்தான். குறைந்த பட்சமாக கொஞ்சம் பணமாக இருக்கும். ஆனால் அவளது துணிமணி மற்ற பொருட்கள்? டிக்கட்?

நட்டாற்றில் விட்ட மாதிரி, விட்டுப் போய்விட்டாரே, அந்த சுதன், என்ன மனிதர் அவர்?

பூட்டிய அறையின் முன் நின்று அவள் மலங்க விழிப்பது ஏனோ மனதிற்குப் பிடிக்காமல் "முகம் கூடக் கழுவிக் கொள்ளாமல் அப்படி ஓட வேண்டுமா? குளியல் அறையில் புதிய பிரஷ்ஷும் பேஸ்டும் இருக்கும். போய்ப் பல் துலக்கிக் கொண்டு வந்தாயானால் ஒரு கப் காபி குடித்துவிட்டுப் போகலாமே."

"வேண்டாம் சார். முன் பின் அறியாத எனக்கு நீங்கள் புகலிடம் கொடுத்ததே பெரிய உதவி. அதற்கு மேல் காபி வேறு செலவா?" என்ற பணிவாகவே மறுத்தாள் அவள்.

"காலைக் காபி அல்லது டீயுடன் காலை உணவு இந்த ஹோட்டலின் முதல் வகுப்பு அறைகளில் தங்குகிறவர்களுக்கு இலவசம். எனவே நீ காபி குடிப்பதால் எனக்கு இமாலயச் செலவு ஏதும் ஏற்பட்டு விடாது. பேஸ்ட் பிரஷ்ஷும் அப்படித்தான். எனவே பல் துலக்கிவிட்டு வந்து காபி குடித்து விட்டே போ. அப்படியே உன் பெயரையும் சொல்லிவிடு. சென்னையில் எங்காவது சந்திக்க நேர்ந்தால் ஏ பங்களூர் ஹோட்டலில் சந்தித்த பெண்ணே என்று அழைப்பது நன்றாயிராது பார்."

தன்மையறியாமல் அவனது முறுவலுக்குப் பதில் தந்தபடி குளியலறையை நோக்கிச் சென்றாள் அவள்.

முகத்தைத் துடைத்தபடிக் குளியலறையை விட்டு வெளியே வரும்போதுதான் வயிற்றுப் பசி தெரிந்தது.

அவளது பசியை ஊகித்தவன் போல அவளுக்கும் ஒரு தட்டில் ரொட்டியும் முட்டையும் பரிமாறி வைத்திருந்தான் அவன்.

முதல் நாள் சரியாகச் சாப்பிடாததற்கு, அமுதமாக இருந்தது உணவு.

ஒரு வார்த்தை கூடப் பேசாமல் மரியாதைக்குக் கூட மறுக்காமல் வேகமாக உண்டு முடித்ததை எண்ணி அவளுக்கு வெட்கமாக இருந்தது.

"உணவுக்கு ரொம்ப நன்றி சார். எப்படியோ பயங்கரமாகப் பசித்திருக்கிறது..." என்று கன்னம் சிவக்க சமாதானம் சொன்னாள்.

அவன் லேசான முறுவலுடன் காபியை ஊற்றவும் தன்னைப் பற்றிய விவரம் சொன்னாள், "என் பெயர் பவானி சார். அப்பா பெயர் ரங்கநாதன். ஆறு மாதங்களாக மல்லி மில்ஸில் வேலை பார்க்கிறேன். அப்பாவுக்கு கொஞ்சம் திடீர் திடீரென்று வைத்தியச் செலவு வரவே, செலவுக்குச் சற்று நெருக்கடியாகி விட்டது. அதனால்தான் இந்தப் பயணத்துக்கு வந்தேன்... ஆனால் இன்று கிளம்பி விடுவதால், இனிப்பிரச்சனை இராது

உங்கள் உதவிக்கும் ரொம்ப நன்றி சார்" என்று மனப்பூர்வமாக நன்றியுரைத்தாள்.

"காபியைக் குடி" என்றான் அவன் சுருக்கமாக.

யோசனையோடு காபியை அருந்தியவள், அவன் முகத்தைப் பார்த்துவிட்டு "என்ன சார்? ஏதாவது பிரச்சினையா? அதாவது, நான் உங்கள் அறையில்... தங்கியதால் உங்களுக்கு ஏதாவது தொல்லை நேர்ந்துவிட்டதா? அப்படி ஏதும் நடந்திருந்தால் உண்மையைச் சொல்லிச் சிக்கலைத் தீர்க்க, நான் தயார் சார்" என்று முன்வந்தாள்.

தலையசைத்து, "சிக்கல் எனக்கல்ல" என்றான் அவன். "மிஸ்டர் சுதன் உன் அறையைக் காலி செய்து சாவி கொடுத்துவிட்டுப் போய்விட்டார்..." என்று விஷயத்தைப் போட்டு உடைத்தான்.

'பாவம்' என்று எவ்வளவு நேரம்தான் தள்ளிப்போட முடியும்?

அவன் எதிர்பார்த்தது போலவே, பவானி திகைத்துப் போனாள். "பி...பின்னே என் சூட்கேஸ் டிக்கட்?... இப்போது நான் எப்படி சென்னைக்குப்போவது?" என்று மலைத்தாள்.

அவசரமாகப் பையைத் திறந்து ஆராய்ந்தாள், சற்றே நிம்மதியாகப் பெருமூச்சு விட்டாள்.

"டிக்கட்டுக்கு இந்தப் பணம் போதும். ஆனால் இந்த ஊரில் எனக்கு ஒன்றும் தெரியாதே... எப்படி எந்த வழியாகப் போவது... இன்றைக்குப் போக டிக்கட் கிடைக்குமா... ஒன்றும் புரிய..." என்று தன் போக்கில் சொல்லிக் கொண்டே போனவளின் முகம் சட்டெனக் கன்றிச் சிவந்தது.

"சா...ரி.. சார் மதுரைக்கு வழி வாயிலே என்கிற மாதிரி இதெல்லாம் பெரிய பிரச்சனை இல்லை. நானே யாரிடமாவது கேட்டுப் போய்க் கொள்ளுவேன். நீங்கள் இதுவரை செய்த உதவியே ரொம்பவும் பெரிது. ஈடு சொல்ல முடியாத பேருதவி அது. அதற்கு மேல் காபி டிபன் வேறு. இன்னமும் உங்கள்

நேரத்தை வீணாக்கிக் கொண்டு நான் இங்கே உட்கார்ந்திருப்பது கொஞ்சமும் நியாயமே இல்லை. வணக்கம் சார்" என்று எழுந்தாள்.

பேச்சு தைரியமாக காட்டியபோதும் பவானியின் கண்களில் ஒரு நிராசையை அவன் கண்டு கொள்ள முடிந்தது.

நிராசையும் தவிப்பும்.

இரண்டுமே, இன்றைய பிரச்சனைக்காக மட்டுமல்ல.

அவளே சொன்னது போலப் பழக்கமற்ற ஊரில் சற்று சிரமமாக இருந்தாலும் வழி கண்டு பிடித்துச் சென்னைக்குப் போய்ச் சேர்வது முடியாத காரியம் அல்ல.

ஆனால் அதன் பிறகு?

நள்ளிரவில் சற்றும் அறியாத ஊரில் தனியேவிட்டுச் செல்லுகிற அளவு வஞ்சம் உள்ள மனிதன் நிச்சயமாக அவளுக்குத் தொடர்ந்து வேலை தரப் போவதில்லை. அதை அவளும் உணர்ந்து கொண்டிருப்பாள். தந்தையின் வைத்தியச் செலவுகள் மற்ற தேவைகள் எல்லாம் இப்போது பூதாகாரமாய் உருவெடுத்து அவளை மிரட்டிக் கொண்டிருக்கும்.

யாரோ ஒருத்திதான். இன்றையத் தினத்துக்குப் பிறகு இந்தப் பவானியை அவன் சந்திக்கக்கூட நேராமலே போகக் கூடும். ஆனாலும் அவளது வேதனை அவனையும் உறுத்தியது. ஒழுக்கத்தைக் காப்பாற்றிக் கொள்ள முயன்றதுக்கு இந்தச்சிறு பெண்ணுக்கு இப்படியொரு தண்டனையா?

நீதி நேர்மையெல்லாம் பலன் தரும்... தர்மமே வெல்லும் என்றெல்லாம் அவன் எண்ணுவது இல்லைதான். இந்த ஏழு ஆண்டுகாலத் தொழில்வாழ்வு இந்த மாதிரி எண்ணங்களை எப்போதோ நசித்துப் போகச் செய்துவிட்டது.

ஆனாலும், அவள் பாடு என்று விட்டேற்றியாக இருக்க அவனால் முடியவில்லை.

“உட்கார்” என்றான் அவளிடம். “இங்கே டிக்கெட் வாங்குவது மிக எளிது. இந்த ஹோட்டலே, ஒரு டிராவல்ஸ் நடத்துகிறார்கள். கேட்டால் ரயில், விமானம் எந்த டிக்கட் வேண்டுமானாலும் எடுத்துத் தருவார்கள். இங்கே தங்குகிறவர் களுக்கு, அதற்காகத் தனிக் கட்டணம் வசூலிக்க மாட்டார்கள். பெயருக்கு ஓர் ஐந்து ரூபாய் மட்டும் கேட்பார்கள். அலைந்து திரிந்து டிக்கட் எடுப்பதற்கு அது மேல். இவர்களுக்கு என்று தனிக் கோட்டாவும் உண்டு. அதனால் டிக்கட் நிச்சயம் கிடைக்கும். ஆனால்... உன் சாமான்கள்... அவை கிடைப்பது கடினம்தான். சுதன் ஒரு மாதிரி ஆள். தன் திட்டம் நிறைவேறாத ஆத்திரத்தில் அவர் உன் பெட்டியைக் குப்பைத் தொட்டியில் கூட வீசியிருக்கக் கூடும். பெட்டியில் விலை உயர்ந்த பொருட்கள் இருந்தனவா?”

இல்லை என்பது போலத் தலையை அசைத்தாள் பவானி. “அம்மா அப்பா சேர்ந்து இருக்கும் படம் ஒன்று இருந்தது. அது கூட வீட்டில் இருப்பதை வைத்து வேறு பிரிண்ட் போட்டுக் கொள்ளலாம்.”

“இல்லாவிட்டால் அதே போசில் வேறு படம் கூட எடுத்துக் கொள்ளலாம்” என்று முறுவலித்தான் அவன்.

அவனை ஒரு தரம் பார்த்துவிட்டு மீண்டும் மறுப்பாய்த் தலையசைத்தாள் அவள். “முடியாது. அம்மா... அம்மா மறைந்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன.” என்றாள் மரத்த குரலில்.

அந்த மரத்த குரல் மறைத்த வேதனையை ஊகித்து உணர்ந்தவனுக்கு இன்னமும் சங்கடமாகிப் போயிற்று. “சற்றுப் பொறு. இதோ வருகிறேன்” என்று உள் அறைக்குச் சென்றான்.

டெலிபோனோ, செல்லோ உள்ளிருந்து அவன் தணிந்த குரலில் பேசுவது தெளிவற்றுக் கேட்டது.

அவனுக்கு ஆயிரம் வேலைகள் இருக்கும். அவளுக்குத் தானே வேலையில்லாது போய்விட்டது. சும்மா இங்கே இருந்து,

அவனுக்கு இடையூறாக இருக்கக் கூடாது. அவன் பேசி முடித்து வந்ததும் சொல்லிக் கொண்டு கிளம்பிட வேண்டும்.

செல்போனில் பேசி முடித்தவாறே வந்தவன் வேறு சொன்னான்.

"உனக்கு, அடுத்த ரயிலில் டிக்கட்டுக்கு ஏற்பாடு செய்தாயிற்று. அப்புறம்... மிஸ்டர் சுதனிடம் வேலை செய்வது, இனி உனக்குக் கடினம். அவரே வேலையில் நீடிக்க விட மாட்டார். ஆனால் அதற்காக, மனம் சோர்ந்துவிட வேண்டாம். அங்கே சென்னையில் நம் வீடு ஒன்றில் ஒரு பெண் மருத்துவர் குடியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லுவதைக் குறிப்பெடுத்து, அதைக் கம்ப்யூட்டரில் லோடு பண்ணி பிரிண்ட் அவுட் எடுத்துக் கொடுக்க வேண்டும். நல்ல சம்பளமே தருவார்கள். ஒரே ஒரு நிபந்தனை, அந்த டாக்டரோடு அதே வீட்டில் வசிக்க நேரும். பழைய மாமல்லபுரம் சாலையில் தனி வீடு. எனவே நகரத்துப் பரபரப்பு கிடைக்காது. ஆனால் வாரத்துக்கு ஒரு நாள் வீட்டுக்குப் போய் வரலாம் என்கிறார் டாக்டர். இந்த வேலை பற்றி யோசி. பிரச்சனை இராது. அந்த வீட்டில், சமையல் சுற்று வேலை செய்கிறவர்கள் தவிர டாக்டர் மட்டும்தான். வீட்டுக்குப்போய் உன் தந்தையுடன் கலந்து பேசி முடிவு பண்ணு. செய்யலாம் என்று தோன்றினால் இதிலிருக்கும் எண்ணுக்கு போன் செய். அந்த அம்மாவிடம் எப்படிப் போக வேண்டும் என்று நான் விவரம் தருகிறேன்" என்று தன் விசிட்டிங் கார்டைக் கொடுத்தான் புவனேசுவரன்.

பதில் சொல்ல மாட்டாமல், தொண்டை அடைத்தது அவளுக்கு.

அவளது பெரும் பிரச்சனையை ஊகித்து, அதற்குத் தீர்வும் சொல்லுகிறானே. மேலும் மேலும் நன்றிக் கடன் ஏறிக் கொண்டே போகிறதே.

தொண்டையில் அடைத்ததை விழுங்கிச் சீர் செய்து கொண்டு "வேலை போனதைச் சொல்லுமுன் அடுத்த வேலை

கிடைத்துவிட்டதைச் சொல்ல முடிந்தால், அப்பாவுக்கும் அத்தைக்கும் நிம்மதியாக இருக்கும் சார். அதனால் மீண்டும் ரொம்ப ரொம்ப நன்றி சார்'' என்றாள் பவானி.

"அதாவது வேலையை ஏற்கத் தயார். அப்படித்தானே?''

"ஆமா சார், நீங்கள் சொல்லுவதைப் பார்த்தால் பிரச்சனை இல்லாத, பிரச்சினை வரக் கூட முடியாத இடமாகத் தோன்றுகிறது. சம்பளமும் நன்றாகத் தருவார்கள் என்கிறீர்கள். மறுப்பதற்குக் காரணமே இல்லையே சார்?''

"பரவாயில்லை. நன்றி கூறுவது போலவே நல்ல சம்பளத்தை உறுதிப்படுத்திக் கொண்டாய். கெட்டிக்காரிதான். இப்போது டாக்டராகக் கொடுக்காவிட்டால் கூட நான் உனக்காக வாதாடி, வாங்கித் தந்தாக வேண்டும்.'' என்றுரைத்து வாய்விட்டுச் சிரித்தான் புவனன்.

அதற்கு முன்னரும் புவனேசுவரன். முறுவலித்தான். ஆனால் பல்வேறு கவலைகளின் காரணமாக அந்தச் சிரிப்பை அவளால் சரியாகக் கவனிக்கக்கூட இயலவில்லை. ஆனால் சிக்கல்களையெல்லாம் சீர் செய்துவிட்டு அவன் சிரிக்கவும், வேறு கவனம் இல்லாமல் அந்தச் சிரிப்பில் அவளால் முழுமையாக ஈடுபட முடிந்தது.

அத்தோடு அவன் சொன்னதைக் கேட்டு ரசிக்கவும் முடிந்தது.

அவனோடு கூடச் சேர்ந்து சிரித்துவிட்டு "அய்யோ அப்படியெல்லாம் இல்லை சார். நான் அந்த எண்ணத்தில் சொல்லவே இல்லை. இப்போதைய என் நிலையில் மல்லி மில்சை விட ஏதோ கொஞ்சம் சம்பளம் குறைவாகக் கொடுத்தால் கூடப் பேசாமல் அந்த வேலையில் சேர்ந்து விடுவேன். மற்ற மில்களுக்கு மல்லியில் சம்பளம் ரொம்பக் குறைவு என்பது, உங்களுக்குத் தெரியாமல் இராது...'' என்று அவள் இழுத்தபோது தெரியும் என்பது போலத் தலையாட்டினான் புவனன்.

தொடர்ந்து, "அந்தச் சம்பளமே குறைவு. அதைவிடக் குறைந்தாலும் பரவாயில்லை என்றால் புரியவில்லையே. செலவை எப்படிச் சமாளிக்க முடியும்?" என்று வினவினான்.

"அத்தையின் பென்ஷன்..." என்று தொடங்கியவளுக்கு வேறு யோசனை தோன்றிற்று. லேசாக முகம் சிவக்க, "சார் உங்கள் நேரத்தை நான் அதிகப்படியாக வீணாக்குகிறேனோ, என்று எனக்குக் கவலையாக இருக்கிறது. அப்படித்தான் என்றால் சும்மா, வெளிப்படையாகச் சொல்லி விடுங்கள். ஐயோ பாவம் என்று என்னுடன் நீங்கள் பேச்சுக் கொடுக்கத் தேவையே கிடையாது" என்றாள் அவள்.

பரிதாபப் படுகிறானோ என்ற குன்றல் அவளுக்கு. அவளது கஷ்டத்தை மறக்கடிப்பதற்காக வேண்டாததை எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறானோ என்ற எண்ணம்.

ஆனால் "விவரம் கூற விருப்பம் இல்லை என்று, சொல்லாமல் சொல்லுகிறாயா?" என்று அவன் மாற்றிக் கேட்கவும் பதறிப்போனாள்.

"ஐய்யோ, அப்படியெல்லாம் இல்லை சார். நான் ஒரு சாதாரணப் பெண். என் கதை உங்களுக்குப் போரடித்துப் போகுமே என்றுதான் சொல்லத் தயக்கமாக இருந்தது. அதனால் தான்..." அவன் தன்னைத் தவறாக எண்ணுவதை அவளால் ஏனோ தாங்க முடியவில்லை. எவ்வளவோ பெரிய உதவி செய்தவன். இன்னொருவர் என்றால் முன்தினம் இரவில் அறையின் உள்ளேயே விட்டிருக்க மாட்டார்கள். இவன் அதற்கு மேலும் உதவுகிறான்.

"சாதாரணப் பெண்ணா? நீயா? தேவுடா" என்றான் அவன். "அறிஞர் அண்ணாவின் ஓரிரவு சினிமாக் கதாநாயகி மாதிரி ஒரே நாளில் உன் வாழ்வில் என்னென்ன திகில் திருப்பங்கள் எல்லாம் நேர்ந்திருக்கின்றன. உன்னைப்போய்ச் சாதாரணப் பெண் என்று சொல்லலாமா?" என்று சிரித்தான்.

தன்னை மீறி அவளும் முறுவலிக்கவும், "சும்மா பொழுது போவதற்காகக் கேட்கவில்லை பவானி. இருபத்துநாலு மணி

நேரமும், டாக்டர் மேடத்தோடு, கூட இருக்கப்போகிறாய். என் சிபாரிசில் போகப் போகிறாய். உன்னைப் பற்றிய விவரம் தெரியாமல் என்னவென்று சிபாரிசு செய்வது? அதற்காகத்தான் கேட்டேன்'' என்று விளக்கினான் புவனேசுவரன்.

அவள் சொல்லி முடித்ததும் "உன் அத்தைக்கு மிகவும் பெரிய உள்ளம்'' என்றான்.

"நிச்சயமாய்'' என்றாள் அவள், நீர்த்திரையால் கண்கள் பளபளக்க. "அத்தை மட்டும் இல்லாவிட்டால், நான் அப்பாவையும் வீட்டையும் பார்ப்பேனா? அல்லது வேலைக்குப் போய் வருமானத்தைத் தேடுவேனா? அப்படியே தேடிய பொருளும், தேவைக்குக் கட்டி வராமல், என்ன பாடு பட்டிருப்பேனோ . அத்தை மட்டும் வராவிட்டால், நானும் அப்பாவும் என்றோ செத்திருப்போம்'' என்றாள் உணர்ச்சியால் கரகரத்த குரலில்.

"கதவை மூடினால் கடவுள் ஜன்னலைத் திறந்து வைப்பார் என்பது நிஜமாகத்தான் இருக்கிறது.'' என்று இதமாக ஒத்துப் பேசிவிட்டு, புவனன் விஷயத்துக்கு வந்தான்.

"நான் சிபாரிசுக் கடிதம் தருகிறேன். ஆனால் டாக்டரிடம் நீ உன் அப்பாவையும், அத்தையையும் அழைத்துக் கொண்டு போவதுமேல். டாக்டர் போன் செய்து கேட்டால் மேற்கொண்டு உனக்காகப் பேசுகிறேன்... என்ன?''

"இல்லை... உங்களுக்குத் தொந்தரவுதான். ஆனால் நீங்கள் கூட வந்தால் நன்றாக இருக்குமோ என்று நினைத்தேன்... உங்கள் சிபாரிசில்தான் வேலையே.''

"நிச்சயமாக நன்றாக இராது'' என்றான் அவன். "டாக்டரம்மா குணம் தெரிந்ததால்தான் சொல்லுகிறேன். தந்தையோடு நீ போவதே, டாக்டர் மேடத்தைப் பொறுத்தவரை ஒரு பெரிய நற்சான்றிதழ். அவர்களுடைய மகன் அவர்களை விட்டுப் பிரிந்து, ஒரு பெண்ணோடு போய்விட்டான். தன்னந்தனியே வாழும் அந்த அம்மாவுக்கு நீ குடும்பத்தோடு ஒன்றி வாழ்கிறாய் என்பதே பிடித்துப்போகும். அது, அங்கே உன் மதிப்பையும்

உயர்த்தும். நானும் நீயுமாகப் போனால் விளைவே வேறாகி விடும்."

"ஓ" என்றவளின் முகம் லேசாகக் கன்றியது.

அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவன், "ஊகூம்... அதைவிட மோசம்" என்றான். "கௌரவமான காதலர்கள் என்றெல்லாம் எண்ண மாட்டார்கள். இந்த வேலைக்காக, நீ என்னை மயக்கியிருப்பதாக முடிவே கட்டிவிடுவார்கள். பெற்ற மகனும் அவனுடைய காதலிகளும் கட்டிக் கொண்ட புண்ணியம்."

"காதலிகள்? பன்மையில் சொல்லுகிறீர்கள்" என்றாள் திகைப்புடன் அவள்.

"ஆமாம்.. குறைந்தது பத்து இருக்கும் என்று நினைக்கிறேன். பிள்ளையின் பதினெட்டு வயதிலிருந்து ஒன்றன் பின் ஒன்றாக வந்த காதலிகள். அம்மாவுக்கும் பிள்ளைக்கும் இதனாலேயே எப்போதும் தகராறுதானாம். கடைசிக் காதலோடு, தாய் மகன் பந்தமே முறிந்து விட்டதாகக் கேள்வி. அதன்பின் சின்ன வயதுக்காரர்கள் என்றாலே, டாக்டருக்கு ஒரு கைப்பு. குடும்பத்தோடு பின்னிப் பிணைந்தவர்கள் என்றால் ஒரு பிடிப்பு. அதனால்தான் அப்பாவோடு போய்ப் பார் என்றேன். பெற்றவரோடு செல்லும்போது அவருக்கு ஒளித்து எதுவும் செய்ய மாட்டாய் என்று ஆகிறதல்லவா?"

"பாவம் டாக்டர், மகனோடு பெரும்பாடு பட்டிருப்பார்கள் போல" என்று பரிதாபப்பட்டாள் பவானி.

விசித்திரமாய்ப் பார்த்துவிட்டு "அதிருக்கட்டும். உன் அப்பாவால் இந்தப் பயணம் முடியும் அல்லவா? அவருக்கு முடியாது என்றால் கட்டாயமாக உன் அத்தையையாவது உடன் அழைத்துப் போ."

"கட்டாயம் சார்." என்று பவானி சொன்ன தினுசில், புவனேசுவரன் மீண்டும் வாய்விட்டுச் சிரித்தான்.

இந்தச் சிரிப்பை உரிமையோடு உடனிருந்து கேட்டு ரசிக்கும் பாக்கியசாலி யாரோ என்று எண்ணும்போதே ஏனோ தானாகப் பெருமூச்சு வந்தது அவளுக்கு.



# 4



புவனேசுவரன் சொல்லி அனுப்பியது போலவே, டாக்டர் அகல்யாதேவியைப் பார்க்கச் சென்ற போது பவானி அவளுடைய தந்தை ரங்கநாதனையும், அத்தை சாவித்திரி யையும் தன்னோடு கூட்டிச் சென்றாள்.

அவர்களுமே, தங்கள் பெண் அந்த வீட்டிலேயே தங்க வேண்டும் என்பதால், வீட்டுச் சூழல் எப்படியிருக்கிறது என்று அறிந்து கொள்ள விரும்பினர்.

வீடு தனியாக இருந்தபோதும், கண்ணாடி பதித்த உயரமான சுற்று மதிலும் ராணுவத்தில் பணி புரிந்து, ஓய்வு பெற்றிருந்த வாயிற் காவலனும், மற்ற வேலையாட்களும் மற்ற அனைத்தையும் விட பவானிக்கு வேலை கொடுத்த டாக்டரின் முதிய மதிப்புக்குரிய தோற்றமும், இருவருக்கும் பிடித்துப் போயின.

அதேபோல, டாக்டர் அகல்யாதேவிக்கும், பவானியின் அலட்டல் அற்ற தோற்றம், அவரது விருப்பத்தோடு ஒத்துப் போயிற்று.

பேசிக் கொண்டிருந்தபோது, "நான் உங்களைப் பார்த்திருக்கிறேன்" என்றாள் சாவித்திரி. "டிவியில் உடல் நலம் பற்றிச் சொன்னீர்கள்... அதே போலப் பத்திரிகைகளிலும் எழுதுகிறீர்கள், இல்லையா?" என்று ஆர்வமாகக் கேட்கவும் டாக்டருக்கு முகம் மலர்ந்து விட்டது.

"அதெல்லாம் படிப்பீர்களா? வறட்டுத் தவளையின் கத்தல் போல, நான் எழுதுவதும், சொல்லுவதும் எல்லாம் வீணா என்று நினைத்தேன்" என்றார். சற்று வருத்தமான குரலில். "எவ்வளவோ சிரமப்பட்டுக் குறிப்பெடுத்து எழுதுகிறேன், ஸ்கிரிப்ட் தயார் பண்ணிச் சொல்லுகிறேன். உங்கள் பெண்ணின் வேலை கூட இதுதான். டீவி நிகழ்ச்சி பத்திரிகைக் கட்டுரை எல்லாம் என் குறிப்புகளில் இருந்து எழுதிக் கொடுப்பது. ஆனால் இதெல்லாம் யாரையாவது போய்ச் சேர்கிறதா என்று எப்போதுமே என் மனதில் சந்தேகம்தான்" என்று தன் குறையைச் சொன்னார்.

"ஐயோ, நான் பார்ப்பேன் டாக்டர். சொல்லப் போனால் அதில் ஒரு தரம் நீங்கள் சில சுலபமான உடல் பயிற்சிகள் பற்றிச் சொன்னீர்கள். அவைகளைச் செய்யத் தொடங்கிய பிறகுதான், தம்பி சற்று இலகுவாக நடமாடுகிறான்" சாவித்திரி கூற அதன் பிறகு ரங்கநாதனின் உடல் நிலை பற்றிப் பேச்சு தொடர்ந்தது.

ரங்கநாதனின் நோய்க்கான ஒரு டீவி நிகழ்ச்சியை டெக்கில் ஓடவிட்டுக் காட்டினார் டாக்டர்.

அக்காவும் தம்பியும் அதில் ஆழ்ந்திருந்தபோது, பவானிக்கு வீட்டைச் சுற்றிக் காட்டினார்.

இந்த வீட்டைக் கொஞ்சம் ஒழுங்குப் படுத்த வேண்டும் என்று பவானி உள்ளூர எண்ணிக் கொண்டு இருந்தபோது "உன் திருமணம் எப்போது என்று, ஏதாவது திட்டமிருக்கிறதா பவானி?" என்று திடுமென டாக்டர் கேட்கவும் சின்னவள் திடுக்கிட்டாள்.

அவளது திருமணம் பற்றி, இவர்களுக்கு என்ன வந்தது?

பவானி திகைப்புடன் நோக்கவும் "இல்லை... அப்படி ஏதும் சமீபத்தில் நடப்பதாக இருந்தால் என் வேலைக்குத் தடங்கலாகி விடும் பார். அதனால்தான் கேட்டேன்" என்று பெரியவர் விளக்கவும் அவளுக்குச் சமாதானமாகி விட்டது.

“அதெல்லாம் இப்போது ஒன்றும் கிடையாது மேடம். என் தந்தைக்கு உடம்பு குணமாகி அவர் என்றைக்கு வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கப் போகிறாரோ, அப்போதுதான், என் எதிர்காலத்தைப் பற்றி நினைக்கக் கூட முடியும். அதுவரை அந்தப் பேச்சுக்கே இடமில்லை” என்றாள்.

டாக்டரல்லவா? ரங்கநாதனின் உண்மை நிலை உணர்ந்திருந்ததால், “அது உன் அப்பாவால் முடியாமலே கூடப் போகலாம்” என்று குறிப்பாக உரைத்தார்.

“அப்படியானால், திருமணமும் முடியாதுதான்” என்றாள் அவள் உறுதியான குரலில்.

அதற்கு மேல், டாக்டரம்மா தூண்டித் துருவவில்லை. அவருக்கு வேண்டிய தகவல்தான் கிடைத்து விட்டதே. பாதி வேலையில் பவானி நின்றுவிடப் போவதில்லை. அது போதும், அவருக்கு, மற்றபடி இன்றைய இளைய தலைமுறை எப்படிப் போய்த் தொலைந்தாலும் அவருக்கு அக்கறையில்லை. இந்தப் பெண் கொஞ்சம் பரவாயில்லாமல்தான் தெரிகிறாள் என்றாலும், இது எத்தனை நாள் நிலைத்துவிடப் போகிறது? அத்தோடு வெறும் தோற்றத்தை வைத்து என்ன சொல்ல முடியும்? அவருடைய சுந்தரனை விடவா, அப்பாவியாய் ஒருவரால் தோன்ற முடியும்? குழந்தை முகம் அவனுக்கு. ஆனால் கடைசியாக என்ன ஆயிற்று.

டாக்டர் அகல்யாதேவிக்கு அவசரத்தேவை என்பதால் தன் காரிலேயே பவானியுடைய குடும்பத்தை வீட்டுக்குத் திருப்பி அனுப்பிவைத்தார். தன் பொருட்களை எடுத்துக் கொண்டு, பவானி, அந்தக் காரிலிலேயே திரும்பி விடுவதாக ஏற்பாடு. .

“இன்னொரு நூற்றைம்பது ரூபாய் எதற்காக ஆட்டோவுக்கு வீண் செலவு?” என்று டாக்டரம்மா கேட்ட போது எண்ணிச் செலவழிக்கும் பவானி வீட்டாருக்கு அதுசரியாகத் தான் பட்டது.

அத்தோடு, அந்த ஆள் நடமாட்டம் இல்லாத சாலையில் பவானி தனியாக வேறு வந்தாக வேண்டும். அதற்கு இன்றே எல்லோரையும் கொண்டுவிடச் செல்லும் காரிலேயே, கார் திரும்பி வரும்போதே வந்து விடுவது நல்லது.

மூவருமாக வந்து திரும்பிப் போவதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்டோ ரிக்ஷாவுக்கு பெரிய சாலை வரும் அளவு தூரத்துக்கு என்று தனியாகப் பணம் கொடுத்து அனுப்பி வைத்தார்கள்.

தேவைப்படும்போது காரை ஓட்டுவது வாட்ச்மேன்தான். லட்சுமணன் ராணுவத்திலேயே டிரைவராகத்தான் பணி புரிந்தவர். டாக்டர் வீட்டிலும் ஏழெட்டு ஆண்டுகளாகப் பணி புரிகிறவர். டாக்டர் வீட்டில்தான் வசிக்க வேண்டியிருக்கும் என்று ஏற்கனவே புவனேசுவரன் அவளிடம் தெரிவித்திருந்ததால் தேவைப்பட்ட பொருட்களைப் பவானி தயாராகத்தான் வைத்திருந்தாள்.

எனவே வீட்டுக்குப் போய்ப் பெரியவரிடம் விடைபெற்றுக் கொண்டு அவள் விரைவிலேயே கிளம்பிவிட்டாள். எச்சரிக்கை யோடும், கவனத்தோடும் இருக்கும்படி, ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டதில்தான் கொஞ்ச நேரம் ஆயிற்று. அதுவும் கூட, டாக்டர் இன்னார் என்று அறிந்த பின் சாவித்திரிக்குத் தைரியம்தான். அதுவரையிலும் அடுத்தவர் வீட்டில் இருப்பதா? ஆனால், வருமானம் தேவைப்படுகிறதே என்று குழம்பிக் கொண்டிருந்தவள் அவள்தான்.

தானும் குழம்பி பவானியையும் குழப்பிக் கொண்டிருந்தாள். ஆனால் என்னதான் குழப்பம் என்றாலும் பாதுக்காப்பான இடம் என்று புவனேசுவரன் சொன்னதால், பவானி கிளம்புவதில் உறுதியாகவே இருந்தாள். மனிதர்களிடம் அவளுக்கு நம்பிக்கை உண்டு. அத்தோடு முக்கியமாகப் பணமும் வேண்டும்.

பழைய வேலை இல்லாதது பற்றிப் பவானி, அவளுடைய அத்தையிடம் கோடி காட்டிச் சொல்லியிருந்தாள். ஆனால்

பெட்டி கூட இல்லாமல் வந்து நிற்கும்போது புரிந்து கொள்ள அது போதுமே. ஏற்கனவே வீட்டைவிட்டுப்போய் ஒரு சூடு பட்டாயிற்றே மீண்டும் போவதா என்று சாவித்திரிதான் ரொம்பவே தயங்கினாள். இப்போது தன் குழப்பம் முற்றுப் பெற அவளும் பெண்ணைத் தைரியமாக அனுப்பி வைத்தாள்.

பவானியும் கிளம்பிச் சென்றாள்.

ஆனால் அவளுக்கு ஒரே ஒரு குறை.

வேலையில் சேரும்போது புவனனுக்கு நன்றி தெரிவித்து விட்டுப் போக வேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டாள். அவன் சொல்லாமல் அவளுடைய குடும்பத்துக்கு மிகவும் தேவையான இந்த வருமானம் ஏது?

முதலில் மல்லி மில்ஸ் முதலாளியிடமிருந்து தப்புவதற்கு உதவி செய்தான். அத்தோடு நில்லாமல் வசதியான வயிற்றுப் பிழைப்புக்கும் வழி காட்டியிருக்கிறான்.

நியாயமாகப் பார்த்தால், இந்த இரண்டு உதவிகளுக்குமாக அவன் காலில் விழவேண்டும். குறைந்தது நன்றி என்று ஒரு வார்த்தையாவது சொல்ல வேண்டாமா?

ஆனால் நன்றி உரைப்பதற்கான வாய்ப்பு அன்று அவளுக்குக் கிடைக்கவில்லை.

முதல் காரணம், அவள் வீட்டில் டெலிபோன் இல்லை.

அடுத்து டாக்டர் வீட்டுக்குச் செல்லும் வழியில் ஏதாவது டெலிபோன் பூத்தில் காரை நிறுத்தி புவனேசுவரனுடன் பேசவும் அவளுக்கு விருப்பம் இல்லை.

அவள் வீட்டாருக்கு மறைத்து யாருடனோ பேசுவதாக அந்தக் காரோட்டி எண்ணக் கூடும். அதை டாக்டர் அகல்யா தேவியிடம் சொல்லவும் கூடும். அது ஒரு தவறான முதல் அபிப்பிராயமாக அமைந்து விட்டால், அது நல்லதில்லை அல்லவா? சும்மாவே இளவயதினர்பற்றி அவருக்கு நல்ல எண்ணம் கிடையாது என்று புவனன் கூறியிருக்கிறானே.

எப்படியும், கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்தில், புவனேசனுக்கு போன் செய்து விட வேண்டும் என்பதில், அவள் உறுதியாகவே இருந்தாள். ஆனால் அந்தச் சந்தர்ப்பம்தான் அவளுக்கு லேசில் கிடைப்பதாக இல்லை.

அன்று பவானி சீக்கிரமாகவே வந்து விட்டதில், டாக்டருக்கு மிகுந்த மகிழ்ச்சி.

அவரது அறைக்குப் பக்கத்திலேயே ஓர் அறையைக் காட்டி, "உன் பொருட்களையெல்லாம் இந்த அறையில் வைத்துக் கொள், பவானி, பிரித்து அடுக்குவதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். சற்றுச் சீக்கிரமாக வந்து, என் மேஜையைக் கவனி. என்னென்ன, எங்கெங்கே இருக்கிறது என்று என்னாலேயே பிரித்தெடுக்க முடியவில்லை. நாளைக்கே இரண்டு வாரப் பத்திரிகைகளுக்கும், ஒரு மாத சஞ்சிகைக்கும், கேள்வி பதிலும், கட்டுரையும் அனுப்பியாக வேண்டும். எல்லாமே அவ்வப்போது எழுதி வைத்துக் கொண்டே வந்தேனா, எல்லாம் எப்படியோ ஒன்றோடொன்று கலந்துபோய் விட்டது. வா...முதலில் அதை வந்து பார்" என்று பவானியை அழைத்துச் சென்றாள்.

இந்த வேலைச் சுமைக்காகத்தான், ஆட்டோ பணம் மிச்சம், அது இதென்று சொல்லிக் காரை அனுப்பினாரா என்று புரிந்தபோது அவளுக்குச் சிரிப்புதான் வந்தது. பாவம். டாக்டர் பயங்கரத் திண்டாட்டத்தில் இருந்திருக்கிறார்.

முதல்நாள் பவானி சற்றுத் திணறித்தான் போய்விட்டாள்.

டாக்டரிடம் வைத்தியம் பற்றிய திறமை ஏராளமாக உண்டு என்பதில் ஐயம் இல்லை. மற்றபடி இந்த மாதிரி பல பத்திரிகைகளில் எழுதும்படி, அவரைக் கேட்க மாட்டார்கள். அவர் விரும்பியிருந்தால், இன்னமும்கூட நாலைந்து பத்திரிகைகளில் எழுதிச் சம்பாதிக்கலாம் என்பது அவருக்கு வந்திருந்த கடிதங்களை ஒழுங்குபடுத்தும் போது பவானி அறிந்து கொண்ட விஷயம். அதற்காக அவர் கேட்கும் தொகை கொடுக்கவும், பல பத்திரிகைகள் தயாராக இருந்தன.

ஆனால் மற்ற விஷயங்களில், அதாவது அவரது பொருட்களை வைத்துக் கொள்ளும் விதம், சுற்றுப்புறத்தை ஒழுங்குபடுத்தல் போன்றவற்றில் அவருக்கு எந்தவித அக்கறையும் இருக்கவில்லை.

எல்லாம் சுத்தமாக இருந்தது. அவ்வளவே.

எனவே, பல பத்திரிகைகளில் இருந்து வந்த கடிதங்கள், கேள்விகள் , அவற்றுக்கு அவர் எழுதிய பதில்கள், மருத்துவம் பற்றிய பல குறிப்புகள் எல்லாவற்றையும் அவர் ஒன்றாகவே குவித்துப் போட்டு வைத்திருந்தார்.

இவற்றினூடே, தடியாகப் பல மருத்துவப் புத்தகங்கள் வேறு.

எல்லாவற்றையும் பிரித்து, அவள் அடுக்கி முடிக்கும்போது, அன்று இரவு பன்னிரெண்டு மணிக்கு மேலாகி விட்டது.

நல்லவேளையாக, எந்தெந்த பத்திரிகையிலிருந்து வந்த கேள்வி என்று தெரிவதற்காகப் பத்திரிகையின் முதல் எழுத்தை மருத்துவர் கேள்வியிலேயே குறித்து வைத்திருந்ததால், பதிலையும் கண்டுபிடித்துச் சேர்த்து வைக்க முடிந்தது.

எப்படியோ, கொடுத்த வேலையை முடித்துவிட்டாள் என்பதில் டாக்டருக்கு மகிழ்ச்சி.

அதை உடனேயே பவானியை வேலைக்கு சிபாரிசு செய்தவனிடம் தெரிவித்து, சந்தோஷப் பட்டார். அவனுக்கு போன் செய்து “பொறுப்புணர்வு உள்ள பெண்ணைத்தான் அனுப்பி வைத்திருக்கிறாய். ரொம்ப நன்றிப்பா” என்று அறையை நெருங்கிக் கொண்டிருந்த டாக்டர் அகல்யா தேவியின் குரல் காதில் விழுந்தபோது அவர் புவனேசுவரனிடம் பேசிக் கொண்டிருக்கிறார் என்பதைப் பவானி புரிந்து கொண்டாள்.

அவள் இருக்கும் அறைக்கு வெளியில் இருந்து ஒருவர் பேசுகிறார். எதிர் முனையில் இருந்து அவரோடு உரையாடிக்

கொண்டு இருப்பவன் புவனேசுவரன் என்று அறிகையில் அவளுக்கு, உடம்பெல்லாம் பரபரத்தது. என்னவோ, அவனே வெகு அருகிலேயே இருப்பது போல ஓர் உணர்வு.

இவ்வளவு அருகில் இருப்பவனிடம் நன்றி கூறாமல் எப்படி இருப்பது?

சட்டெனா எழுந்து அறை வாயிலுக்கு விரைந்து சென்றாள்.

சிரித்துக் கொண்டே "பலே ஆளப்பா, நீ. இந்தக் காலத்துப் பையன் அல்லவா? விட்டால், அவளை வேலைக்கு அனுப்பியதற்காக என்னிடம் கமிஷன் கூடக் கேட்பாய் போல இருக்கிறதே. ஆளை விடு, சொல்லப் போனால், அத்துவானக் காட்டில் இருக்கும் இந்த வீட்டுக்கு நான் தரும் வாடகையே அதிகம்" என்று கூறி நகைப்புனூடே செல்லை அணைத்தார் டாக்டர்.

ஒரு கணம், அவளது மூச்சையே நிறுத்துவது போல இருந்தது பவானிக்கு.

அவள் புவனனுடன் பேசவில்லையே. அதற்குள்ளாக செல்போன் தொடர்பை வெட்டி விட்டாரே இந்த டாக்டர். அவள் ஓடி வருவது கண்ணில் படவில்லையா?

அல்லது திரும்பவும் அவனைக் கூப்பிடச் சொல்லலாமா?

வேகமாக யோசித்தவாறே, பவானி அருகில் வரவும், அசைவு உணர்ந்து திரும்பிய மருத்துவர் "என்ன வேண்டும்?" என்று சின்னவளிடம் வினவினார்.

பவானிக்கு மீண்டும் மூச்சடைத்தது.

இப்போது இவரிடம் என்னவென்று பதில் சொல்வது?



# 5



டாக்டரின் கேள்விக்கு எப்படி, என்ன பதில் சொல்வது என்று புரியாமல், சில வினாடி நேரம், பவானி மிகவும் திணறித்தான் போனாள்.

புவனேசுவரனுடன் பேச வேண்டும் செல்லைத் தாருங்கள் என்பதா? வெறுமனே புவனனுடன் பேச வேண்டும் என்பதா?

ஏன் என்று கேட்டால்? நன்றியுரைக்க என்றால் பெரியவர் புரிந்து கொள்வாரா?

சிபாரிசு செய்தவன் கூட வருவதையே, தப்பாக நினைக்கக் கூடிய பெண்மணி, அதை அவனே கூறி எச்சரித்தான். இப்போது இவரிடம், அவன் பேரைச் சொல்வதே தப்பு அல்லவா? ஒரு கணம் நிதானித்திருந்தால், நினைவு வந்திருக்கும்.

சற்றும் யோசியாமல் அவரசப்பட்டு வந்து மாட்டிக் கொண்டாளே.

அகல்யாதேவி, தன் பதிலுக்காகக் காத்திருப்பதை உணர்ந்ததும், அவசரமாக யோசித்து “வந்து நீங்கள் கூப்பிட்ட மாதிரி... உங்கள் குரல் கேட்டதா? நீங்கள் என்னைக் கூப்பிட்டதாக எண்ணி விட்டேன்... சா.. சாரி...” என்று செல்லைக் காட்டி, “அ... அதில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தீர்கள் போல” என்று சமாளித்தாள்.

செல்லைக் காட்டினால், புவனனுக்குத்தான் நன்றி தெரிவித்துக் கொண்டிருந்தேன். உனக்கு அவனிடம் ஏதாவது சொல்ல வேண்டுமானால் சொல்லிக் கொள் என்று செல்லை அவளிடம் கொடுத்து பேசச் சொல்லக் கூடுமோ, என்ற நப்பாசை அவளுக்கு.

ஆனால் டாக்டர் அகல்யாதேவிக்கு அந்த மாதிரி எதுவும் வரவில்லை.

புவனனின் பெயரையே மறந்தவர் போல "பரவாயில்லையே, உன்னைக் கூப்பிடாமலேயே ஓடி வருகிறாயே, அவ்வளவு கவனமும் சுறுசுறுப்பும் இருந்தால், வாழ்க்கையில் நிச்சயமாக முன்னேறி விடுவாய். சரி..வா.. இன்று எழுத வேண்டிய பதில்களைப்பார்ப்போம்" என்று அவர்களது வேலை அறைக்குள் சென்றார் அகல்யாதேவி.

பவானியும், அவரைப் பின் தொடரும்படி ஆயிற்று. அங்கேயே நின்றுதான் என்ன செய்வது? எப்படியும் இப்போது புவனேசனுடன் பேசுவது இல்லை என்று ஆகிவிட்டது.

வெறுமனே நன்றி தெரிவிக்கக்கூட முடியவில்லையே.

வேலை ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க புவனேசுவரனுடன் எப்படிப் பேசுவது, என்று அது ஒரு யோசனை தீவிரமாக அவளுள் நடந்து கொண்டே இருந்தது.

அந்த அறையிலேயே ஒரு டெலிபோன் கருவி இருக்கத் தான் செய்தது. ஆனால் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அகல்யாதேவியாக அனுமதி கொடுக்காமல் அதில் எப்படிப் பேசுவது?

அவளாக அனுமதி கேட்பதானால் யாரிடம் பேச வேண்டும் என்றும் சொல்ல வேண்டி நேரலாம். அதைச் சொல்லத் தயங்க வேண்டிய நிலை என்பதால்தான் இத்தனை பாடு.

தேவைப்பட்டால் டெலிபோனைப் பயன்படுத்திக் கொள் என்று டாக்டர் தானாகக் கூறக்கூடும் என்று அன்றைய வேலை முடியும்வரை பவானி பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு காத்திருந்தாள்.

ஆனால், அகல்யாதேவிக்கு அந்த எண்ணம் இருப்பதாகவே தெரியவில்லை.

ஏன், இவரிடம் பணி புரிவோருக்குக் குடும்பம் அதனிடம் பாசம் என்றெல்லாம் ஒன்றுமே இருக்கக் கூடாதா? நல்லபடியாக இருக்கிறேன் என்று அப்பா அத்தையிடமேனும் சொல்ல வேண்டாமா? என்றெல்லாம் முதலில் பவானி உள்ளூர ஆத்திரப்பட்டாள்.

ஆனால் வெகுகவனத்துடன் மருத்துவப் புத்தகங்களை அகல்யாதேவி ஆராய்ந்து ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்த்து கொண்டிருப்பதையும் அதன் பிறகும் தீவிர ஆலோசனையின் பின்னரே கேள்விகளுக்குரிய பதில்களைக் கூறுவதையும் கண்டபிறகு தன் கருத்தை மாற்றிக் கொண்டாள்.

கருமமே, கண்ணாய் வேலையில் கவனமாக இருப்பவரிடம், இது போன்று அடுத்தவருக்காக யோசித்துச் செய்யும் கனிவுச் செயல்களை எதிர்பார்க்கக் கூடாது.

நமக்கு வேண்டியதை நாம்தான் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப் படும் என்றுதானே எழுதி வைத்திருக்கிறது.

அன்றைக்கு எழுதி முடிக்க வேண்டிய குறிப்புகள் முழுவதையும் சொல்லி முடித்துவிட்டு, "எல்லாவற்றையும் கம்ப்யூட்டரில் வரிசைப்படி போட்டு மூன்று செட் பிரிண்ட் எடுத்து வைத்துவிடு" என்று டாக்டர் எழவும், பவானி தன் தேவையைத் தெரிவித்தாள்.

புவனேசுவரனுக்கு போன் பண்ண வேண்டும் என்று அல்ல. அப்பா அத்தையுடன் டெலிபோனில் பேசலாமா என்று கேட்டாள்.

சிறு வியப்புடன் அவளை நோக்கி "நீ இதுவரை அவர்களோடு பேசவே இல்லையா?" என்று வினவினார் மருத்துவர். "இதோ போன் இருக்கிறதே. உனக்குத் தேவையான போது பேசிக் கொள்ள வேண்டியதுதானே? ஆனால் உன் பேச்சு வேலையைப் பாதிக்கும்படி விட்டுவிடாதே. ஒரேயடியாகப் பேசி டெலிபோன் பில்லையும் ஏற்றி விடாதே.

அவ்வளவுதான் எனக்கு வேண்டியது'' என்று விட்டுப் போய் விட்டார்.

பேச்சு வேலையைப் பாதிக்கக்கூடாது. அகல்யாதேவிக்கு அதுதான் முக்கியம்.

எனவே கையிலிருந்த வேலை முடியும்வரை பவானி போனைத் தொடவே இல்லை.

அப்புறம் முதலில் வீட்டுக்குத்தான் தொடர்பு கொண்டு பேசினாள். நாலு கட்டிடம் தள்ளியிருந்த மருந்துக்கடையில் ரங்கநாதனுக்காக அடிக்கடி மருந்து வாங்குவதால், எரிச்சல் படாமல் வீட்டுக்கு ஆள் அனுப்பினார் கடைக்காரர்.

புது இடத்தில் தூக்கம் வந்ததா? சாப்பாடு ருசி பிடிக்கிறதா? போன்ற கேள்விகளுக்கு அத்தையின் மனதுக்குத் திருப்தி ஏற்படும் வண்ணம் பதில் சொன்னாள். இரவு பன்னிரண்டு மணிவரை வேலை செய்தது பற்றி மூச்சு விடவில்லை.

அப்பா பற்றி விசாரித்துவிட்டு, இப்படியோர் அத்தையை தந்ததற்காக கடவுளுக்கும் நன்றி கூறி பேச்சை முடித்தாள்.

அத்தை இதை அப்படியே அப்பாவிடம் கூற அக்கா தம்பி இருவருமே நிம்மதியாக இருப்பார்கள்.

இதமான மன நிலையோடு வசதியாக அமர்ந்து, புவனேசுவரன் கொடுத்த எண்ணுக்கு போன் செய்தாள்.

புவனேசுவரன் கம்பீரமான குரலை, ஆவலோடு எதிர்பார்த்தவளுக்கு "புவனா இன்டஸ்ட்ரீஸ்" என்று தொடங்கி "உங்களுக்கு என்ன உதவி செய்யட்டும்?" என்று ஓர் இனிய குரல் கேட்கவும் ஓரளவு சொத்தென்றாகி விட்டது.

துணி ஆலை மட்டுமின்றி அது தொடர்பான பல்வேறு இயந்திரப் பொருட்களையும் தயாரிக்கும் நிறுவனத்தின் பங்குதாரன். அவன் நேராகத் தொலைபேசியை எடுப்பான் என்று பவானி எண்ணியது தப்புதான். முட்டாள்தனம்.

தன் ஏமாற்றத்தை விழுங்கிக் கொண்டு "மிஸ்டர் புவனேசுவரனுடன் பேச வேண்டும்" என்றாள் சின்னக் குரல்.

"உங்கள் பெயரையும் டெலிபோன் எண்ணையும் கொடுங்கள். ஈடி சாரிடம் கேட்டுக் கொண்டு மீண்டும் உங்களைக் கூப்பிடுகிறேன்" என்றாள் அந்தப்பெண்.

டெலிபோன் ஆபரேட்டர் போலும். இவள் மூலமாகத்தான் எல்லாத் தொடர்புகளும் செல்வதாக இருக்க வேண்டும். ஆனால் வெளியிலிருந்து வரும் போன் காலை டாக்டரம்மா எடுத்து விட்டால்?

அவளது பெயரைக் கொடுத்தால் கூட என்ன அவசரமோ என்று புவனேசுவரனே கூப்பிடக் கூடும்.

அவன் கூப்பிட்டு அதை டாக்டர் எடுத்தால் நன்றாயிராது.

யோசித்துவிட்டு "வெளி இடத்திலிருந்து பேசுவதால், நம்பர் கொடுக்க இயலாது. நானே பிறகு கூப்பிட்டு, புவனேசுவரன் சாருடன் பேசுகிறேன்" என்று கூறிவிட்டு, ரிசீவரைச்சோர்வுடன் வைத்தாள்.

அவனிடம் பேச முடியவில்லையே. நன்றி கெட்டவள் என்று எண்ணுவானோ, என்று மனம் தவித்தது. ஆனால் அது பற்றி எதுவும் செய்ய முடியாத நிலையாகி விட்டது.

அவனுக்குக் கடிதம் எழுதினால்கூட, தபாலைக் கொண்டு போய்ப் போஸ்ட் செய்வது, லட்சுமணன்தான். யாருக்கு எழுதுகிறாள் என்று தெரிந்துவிடக் கூடும்.

டாக்டருக்குத் தெரியக்கூடாது என்று இவ்வளவு பார்க்க வேண்டுமா, என்று ஓரோர்சமயம் பவானிக்குத் தோன்றியதும் உண்டு. ஆனால் இப்போதைக்கு அவளுக்கு வருவாய் முக்கியம். அந்த வருவாயைத் தரும் வேலை முக்கியம். எக்காரணம் கொண்டும், அதைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது.

மேலும் ஒரு தரம், புவனேசுவரனிடம் பேச முயன்று தோற்றுவிட்டு, அந்த முயற்சியைக் கைவிட்டாள் பவானி.

அப்போதும், அவன் அலுவலகத்தில் இல்லை.

இதற்குமேல் முயன்றால் அந்த டெலிபோன் பெண்ணே தப்பாக எண்ணக் கூடும்.

இதனாலேயே வியாழக்கிழமைகளில் வார விடுமுறை என்று வீட்டுக்குப்போன போதும், புவனனிடம் பேச பவானி முயற்சி செய்யவில்லை.

ஆனால் அவனுக்கு நன்றி தெரிவிக்கவில்லையே என்ற ஏக்கம் மட்டும் உள்ளூர பெரு நெருப்பாய் அவளுள் எரியலாயிற்று. அணைக்க வழியில்லாதபடி.

அகல்யாதேவியிடம் பவானி வேலையில் சேர்ந்து அன்றோடு இருபது நாட்கள் முடிந்திருந்தன.

அந்த வீட்டில் டாக்டரிடம் ஒத்துக் கொண்ட பணி தவிர தானாகவும் பல வேலைகளை எடுத்துச் செய்தாள் அவள்.

முதல் வேலையாக வீட்டையும் தோட்டத்தையும் ஒழுங்கு படுத்தினாள்.

பொதுவாகத் தன் வரையில் எல்லாவற்றையும் அடுக்கிச் சுத்தமாக வைத்திருப்பவளுக்கு முதல் நாளே, அந்த வீட்டுச் சூழல் கண்ணை உறுத்தியது. டாக்டரிடம் அனுமதி கேட்டபோது அவரது வேலைக்குக் குந்தகம் இல்லாதபடி என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்றார் அவர். “கண்ணுக்கு நன்றாக இருந்தால் எனக்கும் சந்தோஷம்தானே?”

அங்கும் இங்குமாக, வெறும் வசதிக்காக மட்டும் கிடந்த பொருட்களைச் சற்றே கலை நயத்துடன் ஒன்றுடன் ஒன்று பொருந்தும் விதமாக வரிசைப்படுத்தி வைத்ததும் வீடு சீராயிற்று.

முதலில் கொஞ்சம் முணுமுணுத்த போதும், முதலாளி அம்மாவின் சம்மதத்தோடு செய்கிறாள் என்றானதால் மற்ற பணியாட்களும் உதவி செய்தனர்.

அதைப்போலவே தோட்டத்தையும் லட்சுமணனின் உதவியோடு, பவானி சீர் செய்தாள். கண்டபடி வளர்ந்திருந்த செடிகொடிகளை கொத்தி ஒழுங்குபடுத்தவும் தோட்டமும் அழகு பெறலாயிற்று.

கண்ணாடி, தம்ளர்களில் தோட்டத்துப் பூக்களை அவள் அடுக்கி வைத்ததைப் பார்த்துவிட்டு, அகல்யாதேவி பரணில் கிடந்த இரு பூச்சாடிகளை எடுத்துக் கொடுக்கச் செய்தார்.

இரண்டிலும் அடுக்கப்பட்ட பூக்கள், வரவேற்பு அறைக்கு எழில் கூட்டின. அவளுக்கு இயற்கையாக அமைந்திருந்த சுத்தம், ஒழுங்குமுறை தவிர, இந்த வேலைகளை முழுமூச்சாகச் செய்யப் பவானிக்கு இன்னும் ஒரு காரணம் இருந்தது. என்னதான் அகல்யாதேவி வாடகை கொடுத்துப் பயன்படுத்தி னாலும், இது புவனேசனின் வீடு. அதை மேம்படுத்த உழைப்பது, ஏதோ ஒரு வகையில் அவளுக்கு உள்ளூர ஒரு திருப்தியைத் தந்தது. அவனிடம் நேரடியாகப் பேசி நன்றி சொல்ல முடியாததற்கு, இப்படியாவது ஈடு செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

ஆனால், அகல்யாதேவி கொடுத்த எழுத்து, கம்ப்யூட்டர் வேலைகளை அரைநாளில் முடித்துவிட்டு மற்ற நேரத்தில் சும்மா கிடந்து டீ.வி. பார்த்துக் கொண்டிராமல், இது போன்ற வேலைகளைப் பவானி செய்தது, டாக்டர் உட்பட எல்லோர் மனதிலும் அவளது மதிப்பை உயர்த்தியது.

டாக்டர் சற்றுப் பிரியமாகவும் மற்றவர்கள் கொஞ்சம்... ஒரேடியாகப் பணிவாக என்று சொல்ல முடியாது. ஆனால் அவள் சொல்வதை மறுக்காமலும் நடக்கத் தொடங்கினர். டாக்டர் விஷயத்திலும் பிரியமாக என்பதை விட, வேலை செய்யும் மிஷினாக இல்லாமல் மனிதப் பிறவியாக நடத்தினார் எனலாம். உட்கார்ந்துகொள், சாப்பிட்டாயா, வீட்டுக்குப் பேசினாயா என்பது போன்ற வார்த்தைகள் அவர் வாயிலிருந்து வந்தன.

இத்தனைக்கும் இடையிலும் புவனேசுவரனிடம் பேச முடியாது போனது, நெருஞ்சியால் அவளை உறுத்திக்கொண்டே

தான் இருந்தது. எப்படிப்பேசுவது, இன்னும் பேச முடிய வில்லையே என்று மனம் தவித்துக்கொண்டேதான் இருந்தது.

உள்ளூர இன்னொரு கவலை கூட....

ஏதோ அவள் ஆபத்தில் இருந்தபோது காப்பாற்றினான்.. துன்பம் தெரிந்தபோது பரிதாபப்பட்டு உதவி செய்தான். அதற்கு மேல் அவன் அவளை நினைவு வைத்திருக்கிறானோ, என்னவோ? ஐயோ பாவம் என்று உதவியதற்கு அட்டையாக ஒட்டிக் கொள்ள முயற்சிக்கிறாள் என்று, அவன் எண்ணிவிடக் கூடாதே.

வார விடுமுறையின் போது அவனது அலுவலகத்துக்கே போய்க் காத்திருந்தேனும் அவனை நேரில் சந்திக்கலாமா என்று யோசித்துவிட்டு அந்த எண்ணத்தை அவள் கை விட்டதன் காரணம் இதுதான்.

ஆடி அசைந்து சிரித்துப் பேசி நடந்தபோது தலை மேல் இருக்கும் தண்ணீர்க் குடத்தின் மீது கவனம் வைத்திருக்கும் பெண்ணைப்போல, பவானியின் மனதிலும், புவனனின் நினைவு அலை பாய்ந்து கொண்டேதான் இருந்தது.

இந்த நிலையில், பூஜாடிகளில் வைப்பதற்காக, ஒரு நாள் தோட்டத்தில் அவள் பூப்பறித்துக்கொண்டிருந்தபோது "இந்த தோட்டத்துக்கு வன தேவதைகள் வந்து பூப்பறிப்பார்கள் என்பது இன்று வரை எனக்குத் தெரியாதே" அவன் குரல் அவள் காதில் தேன்மழையென விழுந்தது.

முகம் முழுமையும் மலர்ந்து விகசிக்க, ஆவலோடு திரும்பினால், புவனேசுவரனேதான். முத்துப் பற்கள் மின்னலாய் ஒளிர, "நீங்களா? நீங்களேதானா? வாருங்கள், வாருங்கள்" என்று உற்சாகமாய் அவனை வரவேற்றாள் அவள்.



# 6



புவனேசுவரனுடன் பேச முடியவில்லையே என்று வருந்திக் கொண்டிருந்தவளுக்கு அவனை நேரில் கண்டதும் அடக்க மாட்டாமல் மகிழ்ச்சி பொங்கிவிட்டது. தன்னை மீறிய மகிழ்ச்சி. அதை அப்படியே வெளிக்காட்டக் கூடாதோ என்ற எண்ணம் கூட அவளுக்குத் தோன்றவில்லை. கண்ணும் முகமும் பளபளக்க ஆனந்தத்தை அப்படியே கொட்டிவிட்டாள்.

அந்த உற்சாகம் அவனையும் தொற்றிக் கொள்ள "ஆஹா, இவ்வளவு ஆவலாக வரவேற்க ஆள் இருப்பதும், முன்னரே தெரிந்திருந்தால் ஒன்றாம் தேதி வரை காத்திராமல் பதினைந்தாம் தேதியே வாடகை வாங்க வந்திருப்பேன்!" என்று கண்ணால் சிரித்தான் புவனன்.

சற்றுத் திகைத்துவிட்டு "பதினைந்தாம் தேதியா? ஒன்றாம் தேதிதானே, வாடகை வாங்க முடியும்?" என்று விவரம் கேட்டாள் பவானி.

"அதைப்பற்றி என்ன வந்தது? இனி மாதம் இருமுறை வாடகை வாங்க வந்தால் போயிற்று" என்றான் அவன் இலகுவாக.

கலீர் என்று சிரித்து "மாதத்திற்கு இருமுறை வாடகையா? டென்னிஸ் ஆண்டுக்கு இரண்டு பிறந்த நாட்கள் வேண்டும் என்று கேட்ட மாதிரியா? அப்படியெல்லாம் வந்து நின்றால், இரண்டாவது தடவை, இங்கே உங்கள் முதுகில் கட்டி விடுவார்கள் தெரியுமா? லட்சுமணன் ராணுவ வீரராக்கும்." என்று மிரட்டினாள் அவள்.

"உங்கள் ராணுவ வீரர் என் முதுகில் டின் கட்டுவாரா? பார்க்கலாமா?"

“பார்ப்போமே!”

அதற்குள் தூரத்திலிருந்து புவனேசுவரனைப் பார்த்துவிட்டு லட்சுமணன் ஓடி வந்தார்.

“வாங்க சார், வாங்க. உள்ளார வாங்க, என்னா சார் திடீர்னு? அம்மாகிட்டே ஏதானும் சொல்லணுமா? உள்ளே வந்து உட்காருங்க. நான் அம்மாவைக் கூட்டியாரேன்” என்று உபசரித்தார்.

இந்த ஆளா, என்னை அடிப்பார் என்று மிரட்டினாய் என்பது போல, ஓரக்கண்ணால் பவானியைப் பார்த்து நமட்டுச் சிரிப்புச் சிரித்தான் புவனன்.

“வாடகை வாங்கிப் போகலாம் என்று வந்தேன் லட்சுமணன்” என்றான் காவலாளியிடம்.

ஆச்சரியமாய்ப் பார்த்து “வாடகை வாங்கவா? வழக்கமா, கணக்கையாதானே வர்றது? இதுக்காக, நீங்க இவ்வளவு தூரம் அலையணுமா சார்” என்று பரிந்தார் லட்சுமணன்.

இது பவானியும் அறிந்த விஷயமே.

ஒவ்வொரு மாதமும், புவனா இன்டஸ்ட்ரீசில் இருந்து கணக்கர் ஒருவர்தான் வாடகை வாங்கிச் செல்வார். ஒருவேளை வாடகைக்காகப் புவனேசுவரன் வருவானோ என்று இருந்த நப்பாசையைத் துடைத்தெறிந்த விவரம்.

மீண்டும் ஓரக்கண்ணால் அவளைப் பார்த்து நகைத்தபடி, “இந்தப்பக்கம் ஒரு வேலையாக வந்தேன். லட்சுமணன். அப்படியே இந்த வேலையையும் முடித்துப் போகலாம் என்று, இங்கே வந்தேன்” என்றவாறு லட்சுமணனோடு உள்ளே சென்றான் புவனன்.

புவனனைப் பார்த்தாகிவிட்டது. அவனுடன் கலகலகப் பாகப் பேசியும் ஆயிற்று.

உள்ளத்தில் கனம் குறைந்து லேசாக உணர்ந்தபடி, பூக்களை நீண்ட காம்புகளோடு கத்தரித்து எடுத்தவளுக்கு

இன்னமும் புவனனுக்கு நன்றி தெரிவிக்கவில்லை என்பது சட்டென நினைவு வந்தது. என்ன மறதி. புவனனுடன் பேசத் துடித்த காரணமே, அவனுக்கு நன்றியுரைக்க அல்லவா?

வேகமாகப் பூக்களைச் சேகரித்துக் கொண்டு, விரைந்து உள்ளே சென்றால், புருவமத்தியில் சிறு யோசனைச் சுருக் கத்துடன் புவனன் தனியாகத்தான் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

யோகா, பிராணாயாமம் எல்லாம் முடித்துக் கொண்டு, டாக்டர் தன் அறையை விட்டு வெளியேவர இன்னும் நேரம் இருந்தது. யாருக்காகவும் அவர் தன் வழக்கத்தை மாற்றிக் கொள்வதில்லை.

விருந்தோம்பலை மனதில் கொண்டு, பவானி ஓர் எட்டு எடுத்து வைக்கவும் "எனக்கு காபிக்கு ஏற்பாடு செய்யத்தான் லட்சமணன் சமையல் கட்டுக்குச் சென்றிருக்கிறார்" என்றான் அவன். தொடர்ந்து கையால் அறையைச் சுற்றிலும் காட்டி "இதற்கெல்லாம் டாக்டர் தனியாக ஊதியம் ஏதும் தருகிறாரா? அல்லது ஓசி வேலையா?" என்று ஒரு மாதிரிக் குரலில் கேட்டான்.

குரலில் இருந்த குற்றச்சாட்டைப் புரிந்துகொண்டு."டாக்டர் எதையும் செய்யச்சொல்லவில்லை சார். அரைநாளோடு வேலை முடிந்து விடுகிறது. சும்மா இருக்கும் நேரத்தில் நானாகச் செய்வதுதான். பொழுது போவதற்காக" என்று அவசரமாக அகல்யாதேவியைத் தாங்கிபேசினாள்.

"எங்கள் அலுவலகத்தில் இருப்பவர்களும் இப்படி நினைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்" என்று பெருமூச்சு விட்டான் புவனன். "டாக்டர் அதிருஷ்டசாலி" என்றான் கிண்டலாக.

"நானும்தான் அதிருஷ்டசாலி" என்றாள் பவானியும் விடாமல். "இவ்வளவு கொஞ்ச வேலைக்கு இவ்வளவு அதிகச் சம்பளம் தருகிறாரே. அதுவும் எவ்வளவு தேவைப்படும் பணம். அந்த நன்றி என் மனதில் இருக்கவேண்டாமா?" என்றவள்

தொடர்ந்து "இப்படி ஒரு நல்ல வேலையை ஏற்பாடு செய்து கொடுத்தீர்கள். அதற்காக உங்களுக்கு என் மனமார்ந்த நன்றி சார்" என்றாள் உணர்ச்சியோடு.

"எனக்கும் அதேபோல நன்றியா? அப்படியானால், என் வீட்டிலும் வந்து, இது போலெல்லாம் செய்யப்போகிறாயா?" என்று மீண்டும் ஒரு கையசைவால் அறையைச் சுற்றிக் காட்டினான் அவன்.

குரலில் ஏளனத்தை உணர்ந்து "உங்கள் வீட்டில் நான் வந்து செய்ய அவசியம் இராது என்று எனக்குத் தெரியும் சார். அங்கே உங்கள் வீட்டில்... உங்கள்... உங்கள் வீட்டில் இதையெல்லாம் செய்ய எத்தனையோ பேர் இருப்பார்கள் என்று எனக்குத் தெரியும் சார். ஆனால் என் நெஞ்சு நிறைய உங்களிடம் நன்றி இருப்பது உண்மை. உங்களுக்காக ஏதாவது செய்ய முடிந்தால், சந்தோஷமாகச் செய்வேன் சார். இது நிச்சயம்!" என்று மறுபடியும் பவானி உணர்ச்சி மிக்க குரலிலேயே கூறினாள்.

"ம்ம்ம்... ஒன்று இருக்கிறது" என்று இழுத்தான் புவனேசுவரன்.

"சொல்லுங்கள் சார். ராமர் கட்டிய அணைக்கு அணில் உதவிய மாதிரி என்றாலும், என்னால் செய்யக்கூடியது எதுவாக இருந்தாலும் சொல்லுங்கள் சார். செய்கிறேன்" என்று பரபரத்தாள் பவானி.

"ஒரு சின்ன அறிவுரை. இந்த மாதிரிப் பெரிய வார்த்தைகளை யோசியாமல் சட்டென்று சொல்லிவிடக்கூடாது. தப்பர்த்தம் செய்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது" என்றவன் அவள் முகம் லேசாகக் கன்றுவதைக் கவனித்து, ஒப்புதலாகத் தலையாட்டிவிட்டு, "எனக்கு நீ செய்யக் கூடியதும் இருக்கிறது. ஒன்றல்ல, இரண்டு. ஒன்று சார் மோரையெல்லாம் விட்டுவிடுவது..."

"ஐயோ... அப்புறம் உங்களை எப்படிக் கூப்பிடுவது?"

"எல்லோரும் எப்படிக் கூப்பிடுகிறார்களோ, அப்படி. புவனன், புவனேசன், நீளமாகப் புவனேசுவரன்... எப்படி வேண்டுமானாலும் கூப்பிடு."

சற்றுத் தயங்கிவிட்டு "மரியாதை இல்லையே சார்" என்றாள் பவானி.

"என்ன மரியாதை? நான் என்ன மகாராஜாவா? அல்லது நீதான் என்னிடம் வேலை பார்க்கிறாயா, பெயரைச் சொல்லி அழைத்தால் மரியாதைக்குறைவு என்பதற்கு?" என்று சிடுசிடுத்தவனின் முகம் உடனே மாற, "அல்லது நீ... என் பழங்காலக் கட்டுப்பெட்டி மனைவியா, கணவன்பேரைச் சொல்ல மாட்டேன் என்று, அடம் பிடிப்பதற்கு" என்று கண்ணில் சிரிப்புடன் வினவினான் புவனன்.

ஏனோ கன்னம் கதகதத்தது அவளுக்கு.

அதை மறைக்க முயன்றபடி, "அடுத்தது என்ன பு...புவனன் சார்?" என்று கேட்டாள்.

"இது கொஞ்சம் பரவாயில்லை. போகட்டும். மெல்ல மெல்ல அந்தத் தொடுப்பையும் விட்டுவிடப் பழகிவிடு. அடுத்ததாக உன்னைத் தாழ்த்திக் கொள்ளும் பழக்கத்தையும் விட்டுவிடு" என்றவன், குறுக்கே பேச முயன்றவளைக் கையுயர்த்தித் தடுத்துவிட்டு, "அகல்யாதேவி உனக்கு இவ்வளவு சம்பளம் கொடுக்கிறார் என்றால், அது உன் தகுதிக்கும், அவரது தேவைக்கும் அவர் கொடுக்கும் விலையே. மற்றபடி, உன் தேவைக்காக அவர் இரக்கப்பட்டு, எதையும் கொடுக்கவில்லை. அதை எப்போதும் நினைவில் வைத்திரு. நன்றி கின்றி என்று அனாவசியமாக உன்னை வருத்திக் கொள்ள வேண்டாம். புரிகிறதா?" என்று முடித்தான்.

தலையாட்டியதுபோதும், "நானாக ஆசைப்பட்டுச் செய்தது தான் எல்லாம் எனக்கே சுற்றுப்புறம் பார்க்க அழகாக சுத்தமாக இருக்க வேண்டும். அதனால்தான் டாக்டரிடம் அனுமதி கேட்டுக் கொண்டு செய்தேன்" என்று மீண்டும் சொன்னாள்.

"செய்தது தப்பில்லை பவானி. ஆனால் இது இது செய்ய வேண்டியிருக்கிறது. இதற்கு இவ்வளவு பணம் பிடிக்கும் என்று ஒரு தொகை பேசி அதை வாங்கியும் இருக்க வேண்டும். இந்த க்ரோஷே விரிப்பை எடுத்துக் கொள். எவ்வளவு நேர உழைப்பு. அதற்குக் கூலி வேண்டாமா? இது அவர்கள் வீடு பவானி. அதை அழகு படுத்த உழைக்கும்போது, அதற்குரிய பணத்தை அவர்களிடம் வாங்கிக் கொள்ள வேண்டாமா? எப்போதுமே நமக்குரியதை நாம் கேட்டால்தான் கிடைக்கும். மற்றபடி நீ எவ்வளவுதான் உழைத்தாலும், அதைப் பெருந்தன்மையோடு ஏற்பார்களே தவிர வேறு ஒன்றும் கிடைக்காது."

இது புவனின் வீடு என்பதாலேயே அதை மேம்படுத்த உழைப்பது ஆறுதலாக இருந்தது. அதனாலும் செய்தேன் என்று அவனிடமே சொல்வது எப்படி? அவனுக்கு ஐஸ் வைப்பதாகத் தோன்றுமே, என்று எண்ணும்போது உள்ளூர ஒரு குழப்பம் உண்டாயிற்று அவளுக்கு.

அவனுக்கு நன்றி தெரிவிப்பதற்கு ஈடாக என்று எண்ணினாளே அது எத்தனை சதவீதம் சரி? அப்படியில்லை என்றால் வேறு எதற்காக? விடை தெரியாமல் விழித்தாள் பவானி.

அவனும் அவளது குழப்பத்தின் காரணத்தைத் தவறாக ஊகித்து "என்ன? இவ்வளவு நாள் சும்மா செய்துவிட்டு, இனி எப்படிக் கேட்பது என்று இருக்கிறதா? வேண்டுமானால்" என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே மாடியில் அகல்யா தேவியின் அறைக்கதவு திறக்க, உள்ளிருந்து காபியும் வந்தது.

காபியைப் புவனேசுவரனின் முன்னே வைத்துவிட்டுப் பதவிசாய் நின்ற லட்சுமணனைத் தாண்டி, புவனனின் பார்வை, பவானியிடம் குறிப்பாய்ப் பாய்ந்து சிரித்தது.

ராணுவ வீரர் முதுகில் டின் கட்டுவார் என்று மிரட்டியதை நினைத்து பவானிக்கும் சிரிப்பு வர அடக்கிக் கொண்டாள்.

அப்போது மட்டும் அல்ல.

"என்னப்பா, நீயே வந்திருக்கிறாயே" என்று விவரம் கேட்டுவிட்டு வாடகைப் பணத்துக்காக முன் தினமே எழுதி வைத்திருந்த காசோலையை எடுத்துவரச் சொல்லி அவனிடம் நீட்டினார் டாக்டர்.

அதை வாங்கிப் பார்த்துவிட்டு, "இது உதவாதே" என்று திருப்பிக் கொடுத்தான் அவன்.

"ஏன் பவானி தப்பாக எழுதிவிட்டாளா?" என்று வாங்கிப் பார்த்துவிட்டு "இல்லையே. சரியாகத்தானே இருக்கிறது" என்றார் டாக்டர்.

"உங்கள் காசோலையில் தப்பாக எதுவும் இல்லை. ஆனால் ஏதோ கணக்கு உதைக்கிறதாம். இந்த மாதம் எந்தச் செக்கும் வாங்க வேண்டாம் என்று ஆடிட்டர் சொன்னார். இந்த மாதம் மட்டும் பணமாகத் தந்து விடுகிறீர்களா? உடனே கூடத் தர வேண்டாம். மற்ற செலவுகளுக்குச் சரியாகத்தானே, பாங்க்கிலிருந்து எடுத்து வைத்திருப்பீர்கள். அதில் கையை வைக்க வேண்டாம். மெல்ல எடுத்து வையுங்கள். ஒரு பத்துப் பன்னிரண்டு நாட்கள் கழித்து இந்தப் பக்கம் வருவேன். அப்போது பணமாக வாங்கிக் கொள்ளுகிறேன். ஒரு வாடகைக்கு இரண்டு தரம் அலைந்தாலும் கணக்கு உதைக்கக் கூடாது பாருங்கள்" புவனேசுவரன் சொல்ல மருத்துவரும் ஒத்துக் கொள்ள, அவர் காணாதபடி, புவனன் புருவம் உயர்த்தி அவளிடம் எப்படி? என்று கேட்க அப்போதும் பவானிக்குச் சிரிப்பை அடக்குவது கடினமாகவே இருந்தது.

வாடகையை இருமுறை வாங்காவிட்டாலும் அந்த வாடகையை வாங்க ஒரே மாதத்தில் இரண்டாவது தடவை வரப் போகிறானே.

ஒன்று தோன்றவும், "மேடம் வேண்டுமானால் என் சம்பளத்தை இவருக்குக் கொடுத்து விடலாமே. அப்புறம் பாங்கில் எடுக்கும்போது நான் வாங்கிக் கொள்ளுகிறேன். பா... வம்... இவர் வீணாக இன்னொரு தரம் இரண்டாவது தடவையாக

இவ்வளவு தூரம் அனாவசியமாக அலைவானேன்?" என்று ரொம்பக் கரிசனமாய் கேட்டாள் பவானி.

அவளது குறும்பை உணர்ந்து ரகசியச் சிரிப்பில், அவன் கண்களும் மலர்ந்தன.

செய்யலாமோ என்பது போல, அகல்யாதேவி நிமிர்ந்து நோக்குமுன் "ஐய்யோ, ஊதியம் பெறுவோர் வயிற்றில் அடிக்கும் பாவம் நான் செய்யமாட்டேனப்பா. என்றால் இவள் சம்பளம் ஒரு நாள் கூடத் தாமதம் ஆகக் கூடாது டாக்டர். ஏற்கனவே சம்பளம் ஒன்றாம் தேதியே வீட்டில் கிடைக்கும்படி ஏற்பாடு பண்ணமுடியுமா என்று பவானியுடைய அத்தை சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்" என்றான் அவன்.

அவளுடைய அத்தை சாவித்திரி இப்படி ஒரு நாளும் சொல்லியிருக்க மாட்டார்கள் என்பது பவானிக்கு சர்வ நிச்சயம். பெருந்தன்மை மிக்க பெண்மணி அத்தை.

என்னவோ பவானியுடைய வீட்டுப் பெரியவர்கள் அவனுக்கு ரொம்பப் பழக்கம்போலப் புவனேசன் பேசியது அவளுக்குத் திகைப்பை அளித்தது.

ஆனால் மறுத்துக் கூற வாயெடுத்தவள் அகல்யாதேவியின் முகத்தில் திருப்தியைக் காணவும் பேசாமலே இருந்துவிட்டாள்.

புவனன் இப்படிப் பேச வேறு காரணம் இருக்கிறது.

டாக்டரைப் பொறுத்த வரையில் பவானி வீட்டுப் பெரியவர்கள்தான் புவனனுக்கு ரொம்பப் பழக்கம். அவர்களுக் காகவே அவன் அவர்கள் வீட்டுப் பெண்ணுக்கு வேலை கிடைக்க உதவியிருக்கிறான். பவானிக்கு அல்ல.

இப்படியொரு மாயையைத் தன் பேச்சால் உண்டு பண்ணிவிட்டிருந்தான் புவனன். இந்த மாயை அகல்யா தேவிக்குப் பிடிக்கும் என்று எண்ணிக்கூடச் சொல்லி யிருக்கலாம். அதற்காகத்தானே முதலில் டாக்டரிடம் வீட்டுப் பெரியவர்களை அழைத்துக் கொண்டு செல்லும்படி அவன்

சொன்னதே இப்போது அவனைச் சீண்டுவதற்காகக் கூட இதை மாற்றலாமா?

அகல்யாதேவியும் அவன் பேச்சை அப்படியே ஒத்துக் கொண்டு விட்டவர் போல "ஆமாம் பவானி. உன் பணத்தை வீட்டு வாடகைக்குக் கொடுக்க வேண்டாம். அங்கே உன் வீட்டில் அதிகத் தேவை போலத் தெரிகிறதே. லட்சுமணனிடம் கொடுத்துப் பணத்தை வீட்டுக்கு மணி ஆர்டர் பண்ணச் சொல்லு" என்றார் மருத்துவர்.

"ஆமாம் லட்சுமணன். இந்த மேடம் பணத்தை வீண் செலவு செய்து விடுமுன் வாங்கி அனுப்பிவிடுப்பா," என்று அக்கறையாக ஒத்து ஊதினான் புவனன்.

"நான் ஒன்றும் வீண் செலவு செய்கிறவள் அல்ல" என்று அவனுக்குப் பதில் கொடுத்துவிட்டு "இன்னும் இரண்டு நாட்கள்தானே இருக்கின்றன? வார விடுமுறைக்கு வீட்டுக்குச் செல்லும்போது கொடுத்தால் போதும் மேடம்" என்று அகல்யா தேவியிடம் கூறினாள் பவானி.

லேசாக முறுவலித்துவிட்டுப் புவனன் பேசாதிருந்தது அவளுக்கு வியப்பாக இருந்தது. இதற்கு மேல் கிண்டலடிக்க வேண்டாம் பாவம் என்று விட்டுவிட்டான் போலும், என்று எண்ணிக் கொண்டாள் அவள். அல்லது இந்தப் பேச்சு அவனுக்கே போரடித்துவிட்டதோ என்னவோ?

வார விடுமுறையான வியாழக்கிழமையன்று அவள் ஏறவேண்டிய பஸ் நிறுத்தத்தில் அவளை விட்டுவிட்டு லட்சுமணன் திரும்பிச் சென்றதும் ஒரு நீளக் கார் அருகில் வந்து நிற்கவும் மிரட்சியோடு தற்காப்பு உணர்ச்சியும் தலை தூக்க, தோள் பையினுள் கைவிட்டபடி இறுக்கத்துடன் ஓர் எட்டு பின்னடைந்து அவள் நிற்கையில் கார்க் கதவு திறந்தது.

ஆனால் அதிலிருந்து புவனேசுவரன் இறங்கவும் பவானி ரொம்பவே ஆச்சரியப்பட்டுப் போனாள்.



# 7



புவனன் எப்படி இங்கே வந்தான் என்பதை விடவும் காரில் வந்தது அவன்தான் என்று அறிந்ததும், இறுக்கம் தளர்ந்துவிடப் பையில் இருந்து கையை எடுத்தபடி முறுவலித்தாள் பவானி.

பதிலுக்குப் புன்னகை செய்தபடி "வீர தீரப் பராக்கிரமசாலி போலத் தெரிகிறதே. பைக்குள் என்னகத்தியா, துப்பாக்கியா?" என்று கேட்டான் புவனேசுவரன்.

"துப்பாக்கிக்கெல்லாம் நான் எங்கே சார் போவேன்? கத்திதான். பங்களூரிலிருந்து திரும்பி வந்ததிலிருந்து பையில் வைத்திருக்கிறேன். ஆனால்... என்னசார் இந்தப்பக்கம்? அன்று போல இந்தப் பகுதியில் ஏதாவ்து வேலையா?" என்று சிறு வியப்புடன் கேட்டாள்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக அள்ளித் தெளித்தாற் போல வெகு சில வீடுகளே இருக்கும் இந்தப் பகுதியில் அடிக்கடி இவனுக்கு என்ன வேலை இருக்கக் கூடும் என்ற எண்ணம் அவளுக்கு.

காதலாக இருக்குமோ? இந்தப் பக்கத்தில் இருக்கும் பெரிய வீடுகளில் ஒன்று அவனுடைய காதலியின் வீடாக இருக்கலாம்.

"முக்கியமான வேலைதான். ஆனால் இரண்டே நாட்களில் உனக்கு மறதி வந்துவிட்டது போல இருக்கிறதே" என்று புருவம் உயர்த்தினான் அவன்.

அவன் சொன்ன விதத்தில் இலகுவாகி "இல்லையே சார். உங்களைக்கூட நினைவு வைத்திருக்கிறேன்" என்று சிரித்தாள் பவானி.

"ஐயா வள்ளுவப் பெருந்தகையே பாவம் நீங்கள். அரும்பாடு பட்டு யோசித்து 'நன்றி மறப்பது நன்றன்று' என்று

எழுதி வைத்தீர்கள் நீங்கள். இங்கானால் உதவி செய்த மனிதனை நினைவு வைத்திருப்பதையே அரும்பெரும் சாதனையாக சொல்லிப் பெருமைப் பட்டுக் கொள்ளுகிறார்கள்'' என்று சோகமாகச் சொல்லிக் கண்ணால் சிரித்தான் அவன்.

''நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அது என்று வரும் என்று எண்ணற்க... என்று எந்த வகுப்பில் படித்தேன்? என்ன யோசித்தும் நினைவு வரவே மாட்டேன் என்கிறதே'' என்று புருவம் சுருக்கி யோசித்தாள் பவானி.

அவள் பேச்சின் முற்பகுதியை விடுத்து ''ஆக உனக்கு மறதி அதிகம்தான் என்பதை நீயே ஒத்துக்கொள்கிறாய்'' என்று மடக்கினான் புவனன்.

''மௌனம் சம்மதம் என்பார்கள். செய்த நன்றி 'என்று வரும்' என்று எண்ணி உதவி செய்ததை நீங்கள் மறுக்காததைப் பார்த்தால்...'' என்று அவள் பதிலுக்கு மடக்கவும் இருவருக்கும் சிரிப்பு வந்து விட்டது.

சிரித்து முடித்ததும் ''ஏறிக்கொள். நகருக்குள் கொண்டு விட்டு விட்டுப் போகிறேன்'' என்று கார்க் கதவைத் திறந்து விட்டான் புவனேசுவரன்.

இயல்பாக ஏறி அமர்ந்த பிறகே இப்படி அவனோடு காரில் தனியாகச் செல்வது மடத்தனமோ என்ற எண்ணம் வந்தது அவளுக்கு. ஆனால் 'இல்லை நானே போய்க் கொள்ளுகிறேன்' என்று சொல்லி இறங்கிக் கொள்ளவும் அவளுக்கு ஏனோ மனம் வரவில்லை.

நான் என்ன தப்பா செய்கிறேன்? எனக்குப் பெரிதாகப் பல உதவிகள் செய்தவரோடு அவரது காரில் அமர்ந்து பேசிக் கொண்டு போகிறேன். அவ்வளவுதானே? அதுவும் அவரே கூப்பிட்டதால். மறுத்தால் மரியாதைக் குறைவு அல்லவா? இறங்கும் இடம் வந்துவிட்டால் அத்தோடு தீர்ந்தது.

தனக்குத்தானே அவள் வாது செய்து கொண்டிருந்தபோது புவனன் பேசினான்.

“என்ன எதில் மறதி என்று இப்போதாவது நினைவு வந்ததா? எங்கே? நன்றியையே நினைவு வைத்துக் கொள்ளாதவன், நன்றிக் கடன் செலுத்துவதையா ஞாபகத்தில் வைத்திருக்கப் போகிறாய்?”

அவளது ஞாபக சக்திக்கு என்ன குறை? அவனை அழைக்கும் விதம். தீர யோசித்துவிட்டு அவன் சொன்னதெல்லாம் சரி வராது என்று அன்றே அவள் முடிவெடுத்து விட்டாளே. ஆனால் அவளது முடிவை அவனிடம் சொல்ல முடியுமா?

“அதில்லை சார். டாக்டர் முன்னிலையில் சார் என்பது தான் நல்லதென்று...” என்று வேறு மாதிரி சமாளிக்க முயன்றாள் பவானி.

ஆனால் “ஓகே. உன் டாக்டரையும் உன்னோடு ஆர்வமாய்க் கூட்டி வந்திருக்கிறாயாக்கும். இந்த மாதிரிச் சக்தியெல்லாம் உனக்கு உண்டு என்று எனக்குத் தெரியவே தெரியாதே. எங்கே டாக்டர் பின் சீட்டில் உட்கார்ந்திருக் கிறார்களா? அல்லது நம் இருவருக்கும் இடையிலேயேதானா?” என்று கிண்டலாகக் கேட்டான் அவன்.

தன்னை மீறிச் சிரித்துவிட்டு “அதெல்லாம் இல்லை. பெயர் சொல்லிப் பேசி, அது பழகிப் போனால் அப்புறம் டாக்டர் முன்னிலையிலும் அப்படியே சொல்ல வரும். அதனால்தான் வேண்டாம் என்று முடிவு செய்தேன்” என்று இன்னொரு காரணம் கண்டுபிடித்தாள் அவள்.

“நம்ப முடியவில்லையே” என்றான் புவனன். “டாக்டர் முன்னே என்னென்னவோ சொல்லிச் சமாளிக்கிறாய். அவருக்குப் புரியாதபடி கிண்டலடிக்கிறாய். இதில் கவனமாக இருக்க முடியாது என்றால்... ஊகூம். உனக்கு வேறே ஏதோ காரணம் இருக்க வேண்டும். என்ன அது?”

அவன் பிடிவாதமாகக் கேட்பதே சற்று வியப்பாக இருந்தது அவளுக்கு. எப்போதோ பார்க்கப் போகிறாள். அவள் ‘சார்’

என்றாலோ 'புவனன் சார்' என்றாலோ அதில் பெரிதாக என்ன இருக்கிறது?

அத்தோடு அவள் காட்டுவது மரியாதைதானே? அதற்கு மேல் என்ன வேண்டும்?

அவன் பொறுமையற்று மீண்டும் கேட்கவும் அவள் யோசித்துப் பதில் சொன்னாள்.

"ஒன்றல்ல சார். பல காரணங்கள். ஒன்று நெஞ்சு முட்ட இருக்கும் நன்றி உணர்ச்சி. ஒரு பெரிய ஆபத்திலிருந்து எந்தவிதப் பிரதிபயனும் கருதாமல் என்னைக் காத்தீர்கள். காத்தது மட்டுமின்றி ஒரு நல்ல வேலையும் வாங்கித் தந்திருக்கிறீர்கள். இதில் உங்களுக்குச் சொந்த லாபம் எதுவுமில்லை. இந்த இரண்டு உதவிகளாலும் என் நெஞ்சில் நிறைந்திருக்கும் நன்றி உங்களை மிக மரியாதையாகவே் நினைக்க வைக்கிறது..."

"அப்புறம்?"

"அடுத்து நீங்கள் ரொம்பப் பெரிய மனிதர். தொழில் அதிபர். எனக்குச் சம்பளம் தரும் டாக்டரே உங்களுக்கு வாடகை தருகிறார். நான் அண்ணாந்து பார்க்கும் நிலையில் இருக்கிறவர். 'மகாராஜா' என்று பட்டம் கட்டாவிட்டாலும் அது மாதிரிதானே? நான் எப்படி உங்களைப் பெயர் சொல்லி அழைப்பது? ரொம்பவே தயக்கமாக இருக்கிறதே" என்றாள் பவானி.

"பேச்செல்லாம் பிரமாதமாகத்தான் இருக்கிறது. ஆனால் பேச்சுக்குப் பேச்சுப் பதில் கொடுக்கும்போது இதெல்லாம் நினைவு இருப்பதாகத் தெரியவில்லையே" என்றான் அவன்.

"எனக்கும் அது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது சார். உங்களிடம் பேசும்போது எப்படியோ தானாக அந்த மாதிரிப் பேசிவிடுகிறேன். பிறகு யோசிக்கும்போது ஆச்சரியமாகவும் தப்போ என்று குழப்பமாகவும் கூட இருக்கிறது" என்று தன் மனதை மறையாமல் சொன்னாள் பவானி.

அவளிடம் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு “ஆக சாதாரணமாகக் கெட்டிக்காரிதான். யோசிக்கும்போதுதான் எதிர்மறையாக மாறி விடுகிறாய் என்று தெரிகிறது” என்று கேலி போலச் சொன்னான் அவன்.

அவள் யோசனையாகப் பார்க்கவும் அமர்ந்த குரலில் “கவனி பவானி. நீ நினைக்கிற மாதிரி நான் ஒன்றும் பெரிய தொழில் அதிபர் அல்ல. ஓரளவுக்கு என் தந்தையைச் சொல்லலாம் என்றாலும் அவரையும் மகாராஜாவாக எண்ணுவதற்கில்லை. இப்போதைக்குத் தொழிலில் ஈடுபடுத்தப் பட்டிருக்கும் நான் பின்னொரு காலத்தில் அவரைப் போல உயரலாம் அவ்வளவே. அடுத்து அனுபவப் பள்ளியில் இன்னும் கொஞ்ச காலம் படித்த பிறகு எந்த உதவியிலும் சொந்த லாபம் இல்லாதிருப்பது இல்லை என்பது உனக்குப் புரியும்...” என்று புவனன் சொல்லி வருகையில் பவானி குறுக்கிட்டாள்.

“எனக்குச் செய்த இரு உதவிகளாலும் உங்களுக்கு என்ன லாபம் வரக்கூடுமாம்? யோசித்தும் எனக்குப் புரியவில்லையே” என்றாள் அவள், சற்றே ஏளனம் கலந்த குரலில்.

சன்னமாய் முறுவலித்து “உன் யோசனை பற்றிதான் முன்பே சொன்னேனே” என்று ஓரக் கண்ணால் அவளைப் பார்த்தான் அவன்.

அவளுக்கு ரசிக்கவில்லை.

உச்சுக்கொட்டிவிட்டு “சரி எனக்கு யோசிக்கத் தெரியாமலே போகட்டும் விட்டுவிடுங்கள். சரியாக யோசிக்கத் தெரிந்த நீங்கள்தான் உங்கள் லாபம் பற்றிக் கூறுங்களேன்” என்றாள் அவள்.

“பயன் கருதாமல் - பயனே இல்லாமல் நான் உதவி செய்ததாக நீ நினைப்பது சரியல்ல பவானி. அந்த உதவியின் மூலம் எனக்கு உன் உருவில் என் நலம் நாடும் நல்ல உண்மையான சிநேகிதி கிடைத்திருக்கிறாள் தெரியுமா?”

அவள் சந்தேகமாக நோக்கவும் "நான் மெய்யாகத்தான் சொல்லுகிறேன் பவானி. இப்போது எனக்காக ஒரு வேலை செய்யச் சொன்னால் நீ செய்ய மாட்டாயா?" என்று கேட்டான் அவன்.

"கட்டாயம் செய்வேன். ஆனால் அப்படி உங்களுக்கு நான் செய்ய என்ன இருக்கிறது?"

"என்ன செய்யக் கூடும் என்பதை விட அப்படிச் செய்வதற்கு ஓர் ஆள் இருப்பது எவ்வளவு பெரிய லாபம் தெரியுமா? செயல் என்று பார்த்தால்... இப்போது டாக்டர் திடீரென்று காலி செய்யப் போவதாகப் பேச்சு நடக்கிறது என்று வைத்துக்கொள். அதை நீ எனக்குத் தெரிவிப்பாயா, மாட்டாயா?"

"கட்டாயம் தெரிவிப்பேன்."

"அதாவது சம்பளம் கொடுக்கும் டாக்டர் நலத்தை விட என் லாபமே உனக்கு முக்கியமாகி, என் ஆளாய் நீ இங்கே இருக்கிறாய். இப்போது என் லாபம் புரிகிறதா? திடீரென்று ரகசியம் பேணக் கூடிய ஓர் ஆள் என் அலுவலகத்துக்குத் தேவை என்றால் நான் உன்னைத் தைரியமாகக் கூப்பிடலாமே. இதற்கு மேல் என்ன வேண்டும்? தன்நலம் கருதாத உதவி செய்தேன் என்று நீ இப்படி 'சார்' போடத் தேவையில்லை என்று இப்போது புரிகிறதா?"

தலை திருப்பி அவன் முகத்தை நன்றாகப் பார்த்துவிட்டு "நீங்கள் வக்கீலுக்கும் படித்திருக்கிறீர்களோ?" என்று சீரியசாகக் கேட்டாள் அவள்.

மறுப்பாய்த் தலையசைத்து புவனேசுவரன் முறுவலிக்க அவள் தொடர்ந்தாள். "ஏன் கேட்டேன் என்றால் நன்...றாகக் காதில் பூ சுற்றுகிறீர்கள். ஆனால் உங்கள் பேச்சில் குட்டியாய் ஓர் உண்மையும் இருக்கத்தான் செய்கிறது. ஆனாலும் நீங்கள் பெரிய தொழில் அதிபர் இல்லை என்றாலும்கூட நம் பொருளாதார நிலைமையில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை நீங்களே கூட மறுக்க முடியாதே."

“நீ எந்த நூற்றாண்டில் இருக்கிறாய் பவானி? பொருளாதார அடிப்படையில் வர்க்கப் பிரிவுகள் இருந்த காலம் எப்போதோ மலையேறி விட்டது. ‘ஆண்டை அடிமை’ எல்லாம் இருபதாம் நூற்றாண்டின் பாதியிலேயே பஸ்பமாகி விட்ட விஷயம். அதைப் போய் இப்போது தோண்டுகிறாயே.”

என்னவோ, அவள் ஒரு பழம் பஞ்சாங்கம் என்பதைப் போலப் புவனன் பேசியது உசுப்பி விட “அதாவது நீங்களும் நானும் சமம் என்கிறீர்கள். அப்படியானால் நீங்கள் என்னைத் திருமணம் செய்து கொள்வதுகூடச் சாத்தியம்தான். இல்லையா?” என்று சவால் விடுவது போலக் கேட்டாள் பவானி.

ஆனால் வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகள் காதுகளில் விழுந்தபோது அப்படியே விதிர் விதிர்த்துப் போனாள்.

என்ன கேள்வி கேட்டுவிட்டாள். எவ்வளவு மோசமாய்... எவ்வளவு அசிங்கம். அவன் அவளைப் பற்றி என்ன நினைப்பான்? இந்த வார்த்தைகளை அப்படியே திரும்ப அழைத்துக் கொள்ள முடியுமானால் அவள் உயிரையும் கொடுப்பாளே. வில்லிலிருந்து விடுக்கப்பட்ட அம்பும், வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகளும் திரும்பப் பெற முடியாதவை எனும் உண்மையை இப்படியா அவள் அறிந்து கொள்ள வேண்டும். ‘நா காக்க., காவாக்கால், சோகப்பர் சொல்விழுக்குப் பட்டு’ என்று திருக்குறளைப் பள்ளியில் மனப்பாடம் செய்து படித்து என்ன பயன்? நாவை அடக்காமல் அந்தக் குறளுக்கே உதாரணம் ஆகிவிட்டாளே. பட்டும் புத்தி வரவில்லையே.

கணத்துக்குள் குன்றிக் குறுகி முகம் கன்றிச் சிவந்து போனாள் பவானி.



# 8



புவனின் பார்வை ஒருதரம் அவள் மீது படிந்து மீண்டும் சாலைக்குத் திரும்புவதை உணர்ந்தபோது காரைப் பொத்துக் கொண்டு அப்படியே பூமிக்குள் போய்விட மாட்டோமா என்று தவித்துப் போனாள்.

அவனே கூட 'இறங்கடி கீழே' என்று இப்போதே இறக்கி விட்டு விடக் கூடும்.

அவள் பொதுப்படையான நிலைமையைத்தான் சொன்னாள் என்றாலும் 'என்னை மணந்து உன் பேச்சை நிரூபி' என்றும் எடுத்துக் கொள்ளலாம் யோசியாமல் என்னமாய்ப் பேசிவிட்டாள்.

அவனிடம் தன்னை விளக்கிவிடும் வேகத்துடன் "தப்பாக நினைத்து விடாதீர்கள் சார். நான் நான் என்ன... நான் சொல்ல நினைத்தது உஉங்களையல்ல. எஎன்னையும் அல்ல. பணக்காரர்கள் கீழ் மட்டத்தில் மணம் புரிவார்களா என்று அதைத்தான் ஆனாலும் நான் சொன்னது தப்புதான். சார் தயவு பண்ணி நான் சொன்னதை அப்படியே முழுதும் மறந்து விடுங்கள். அப்படிப் பேசியதற்காக மன்னித்து விடுங்கள்.." திக்கித் திணறித் தடுமாறினாள்.

"நினைத்தேன்" என்றான் புவனேசுவரன். "கோடி ரூபாய் லாட்டரி பிரைஸ் அடித்தது போல நமக்கு இப்படி ஓர் அதிர்ஷ்டம் அடித்திருக்கிறதே என்று ரொம்பவே ஆச்சரியப் பட்டேன். இல்லை என்று சொல்லி அதல பாதாளத்தில் தள்ளி விட்டாயே" என்று சிரித்தான் புவனேசுவரன்.

அவள் முகம் இன்னமும் கன்றிக் கறுக்கவும் "ஒரு வேடிக்கையை ரசிக்கத் தெரியவில்லையே. ஏன்? அதையே

சாக்காகக் கொண்டு உன் கையைப் பிடித்து இழுத்து விடுவேன் என்று பயமா?'' என்று கோபமாகக் கேட்டான் அவன்.

''ஐயோ. அப்படியில்லை சார். அந்த மாதிரித் தப்பை உங்களோடு சேர்த்து நான் ஒரு நாளும் நினைக்கவே மாட்டேனே. ஆனால் ரொம்பவும் அதிகப்பிரசங்கித்தனமாக... மட்ட ரகமாக...'' என்று அவள் தடுமாறுகையில் அவன் பொறுமையிழந்து குறுக்கிட்டான்.

''இப்போது எதற்காக நீ இந்தப் பாடு படுகிறாய் என்று எனக்குப் புரியவில்லையே. உன் கருத்தைத் தெளிவாகக் கூறுவதற்காக உன்னையும் என்னையுமே உதாரணமாக்கிக் காட்டினாய். அவ்வளவுதானே? என்னமோ மனு நீதி சாஸ்திரத்தையே உடைத்தெறிந்து விட்டாற்போலக் கூறுகிறாயே. அவசியமே இல்லை. சும்மா நிமிர்ந்து உட்கார்'' என்று அதட்டினான்.

அவனது அதட்டலுக்குப் பணிந்து நிமிர்ந்து அமர்ந்த போதும், அவளது பார்வை உயராமல் மடியில் கோத்திருந்த கைகளின் மீதே படிந்திருப்பதைக் கண்டுவிட்டு, காரை ஓரமாக, ஒரு மரத்தடியில் நிறுத்தினான்.

சிறு மௌனத்தின் பின் ''இதோ பார். கொஞ்சம் இலகுவாக இருக்கப் பயின்றுகொள். உப்புப் பெறாத விஷயம். சிறு வயதில் கூட்டல் கழித்தல் கற்றுத் தரும்போது 'அப்பா உனக்கு நாலு சாக்கலேட் கொடுத்தார். அதில் தம்பிக்கு இரண்டு கொடுத்தால், மீதி உன்னிடம் எத்தனை இருக்கும்?' என்று ஆசிரியர் கேட்பார். நமக்கே நேர்வது போல உருவகப்படுத்தினால், மனதில் நன்றாகப் பதியும் என்று அப்படிக் கேட்பது. அதே போல நீயும் கேட்டாய். இதில் என்ன தப்பு? அவ்வப்போது நன்றாக வேடிக்கையாகவும் பேசத்தானே செய்கிறாய்? திடீர் திடீரென்று ஏன் இப்படி?'' என்று புவனேசுவரன் வினவினான்.

இப்படி அவன் கேட்கும்போது அவளது வாய்க்கட்டு அவிழ்ந்தது. ''வந்து.. பங்களூர் நினைவு இருக்கிறதா சார்? மல்லி

மில்ஸ் அலுவலகத்தில் பத்துப் பேருக்கும் மேலாகப் பெண்கள் வேலை செய்தோம். எம்டி என்னை மட்டும் ஏன் கூப்பிட்டார்? பொதுவாக நான் கலகலப்பாகப் பழகுகிறவள். அதனாலேயே எம்டி என்னைத் தப்பாக எண்ணி விட்டாரோ என்று... தோன்றும்..."

"உன் பழைய எம்டி சுதன் ஒரு பொம்பளைப் பொறுக்கி. அவர் உன் சக பெண் அலுவலர்களை ஏற்கனவே கேட்கவில்லை என்றோ, வெளியூருக்கு அழைத்துச் செல்லவில்லை என்றோ, உனக்கு என்ன நிச்சயம்? அத்தோடு நீ ரொம்ப அழகாக இருப்பதாலும் ஆசைப்பட்டிருக்கலாம்..."

அவள் ரொம்ப அழகு என்கிறானே, கவனித்தானா என்று அந்த நேரத்திலும் அவளுக்குத் தோன்றுகையில் அவன் தொடர்ந்தான்.

"...ஓ அதற்காகத்தான் நன்றி அந்தஸ்து வித்தியாசம் என்று கதை சொல்லி 'சார் சார்' என்று அழைப்பதா? பீடத்தில் வைத்துத் தூரத்தில் நிறுத்தும் முயற்சியா?"

சட்டென அவள் முகம் சிவந்த விதம் அவன் பேச்சு உண்மை என்று பறைசாற்றியது.

அவசரமாக "நீ நீங்கள் அந்த மாதிரிப்பட்டவர் இல்லை என்று எனக்குத் தெரியும் சார். உங்களை அப்படி நினைப்பதே மகாப் பாவம். ஆனால் பயங்கரமாகச் சூடு பட்டு விட்டதால்... சுதன் சாரைக்கூட, ஐம்பதுக்கும் மேலே ஆன பெரிய மனிதர் என்றே நினைத்தேனா? கடைசியில்..." என்றவளுக்கு பேச்சை முடிக்க முடியவில்லை.

அந்தச் சபலக்கார அரைக் கிழவனோடு உத்தமமான இந்த இளைஞனை ஒத்திடுவதா? ராமனைப் போய், ராவணனாகக் கூடும் என்பதா என்று அவள் மனமே புரட்சி செய்யும்போது அவள் என்னத்தைப் பேசுவது?

அவனும் அதையே சற்று மாற்றிச் சொன்னான். "அதுவும் சரிதான். அந்த அரைக் கிழவனே அப்படிப் பாய்கிற போது இளைஞன் இவனை எப்படி நம்புவது? கஷ்டமேதான்..."

"சா..ர்" என்றாள் அவள் அழாக் குறையாக.

கையை நீட்டி. அவள் தலையை மெல்ல வருடி விட்டான் புவனன்.

அப்படியே சாய்ந்து அவன் தோளில் முகம் புதைத்து அழ வேண்டும் போலத் தோன்ற அந்த வேகத்தை அடக்குவது பெரும் பாடாக இருந்தது அவளுக்கு.

ஆனால், இதயத்தைச் சுற்றிலும் பல நாட்களாக இருந்த இறுக்கம் மெல்ல மறைவதை அவளால் நன்றாகவே உணர முடிந்தது.

பதுமையாய் அவள் அமர்ந்திருக்க அவன் சொன்னான். "உலகம் ஒரு சுதனால் ஆனதில்லை பவானி. ராவணன் ஒரு விதி விலக்கு. அந்த ஓர் அனுபவம் உன்னை மாற்றும்படி விட்டுவிடக் கூடாது. அதற்கு முன்னரும் கிட்டத்தட்ட இருபது ஆண்டுகள் உன் வாழ்க்கை நடந்துகொண்டுதானே இருந்தது? சுதனைச் சந்திப்பதற்கு முன்னரும், எத்தனையோ பேரோடு சாதாரணமாகப் பேசிப் பழகியிருப்பாய்தானே? அவர்களில் யார் உன்னை என்ன செய்துவிட்டார்கள்? அதையெல்லாம் யோசித்துப் பார்ப்பது இல்லையா? உன்னைப் புத்திசாலி என்று நினைத்தேனே."

என்னவோ கண்ணுக்கு முன் கலங்கலாக இருந்தது இப்போது தெளிந்து விட்டது போலத் தோன்றியது அவளுக்கு.

சக மாணவர்கள், ஆசிரியர்கள், அக்கம் பக்கத்தவர்கள். எத்தனை பேர் தெரியும் அவளுக்கு. அவர்களைப் பற்றி நினைத்துப் பார்த்திருக்க வேண்டாமா?

சொல்வதைச் சொல்லிவிட்டேன். இனிப் புத்தியிருந்தால் யோசித்துக் கொள் என்பது போல உட்கார்ந்திருந்த புவனேசுவரனைப் பார்த்தாள்.

உள்ளே தாமரையாக ஏதோ மலர "என்ன செய்வது? நான் யோசித்தால் தான் தப்பாகிவிடுவதாக யாரோ சொல்லு

கிறார்களே. யோசிக்கத் தைரியம் எப்படி வரும்?" என்று அலுப்பு காட்டி சிரித்தாள் அவள்.

"யாரோ? அப்படியானால், ஞாபக மறதி பற்றி நான் சொன்னதும் சரியேதானா? இந்த மறதியை நன்றிக்கடன் செலுத்துவதில் காட்டி விடாதே தாயே" என்று அவனும் நகைக்க சூழ்நிலையே மாறிப் போயிற்று.

அப்புறம் பேச்சு எப்படி வளர்ந்தது என்று தெரியவில்லை. அவளது சின்ன பெரிய ஆசைகள், ஏக்கங்கள் எல்லாம் வெளிவந்தன.

அவனுடைய தாயார், தந்தை, ஊரில் இருக்கும் பெரிய மீசைக்காரத் தாத்தா என்று அவனது உறவினர் பற்றி அவள் அறிந்து கொண்டாள்.

பேச்சு சுவாரசியத்தில் அவளது வீடு இருக்கும் தெருவில் கார் நுழைந்த போதுதான் அவளுக்குச் சுற்றுப்புறமே நினைவு வந்தது எனலாம்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்துக்கும் மேலாக பேசியிருக்கிறார்களே.

"வீட்டுக்கு வந்து ஒரு காபி அருந்தி விட்டுத்தான் போக வேண்டும் புவனன்" என்று அவள் அழைக்க, அவனும் பிகு பண்ணாமல் உள்ளே வந்தான்.

சாவித்திரி சந்தோஷமாக வரவேற்ற போதும் புவனேசுவரன் விடை பெற்றுச் சென்ற பிறகு "இவன் எங்கேயும் வெளியூருக்குக் கூப்பிட மாட்டானேடீ?" என்று கவலையுடன் விசாரித்தாள்.

"சேச்சே. மாட்டார் அத்தை. புவனன் அப்படிப்பட்டவர் அல்ல" என்று உறுதியோடு உரைத்தாள் பவானி.

அவ்வளவு நேரத்தில் சம்பளக் கவரை, சாவித்திரி திறந்து பார்க்கக் கூட இல்லை. சாமி முன்னால் கொண்டு வைத்ததோடு சரி.

பவானியாக "என்ன அத்தை சம்பளத்தை எண்ணிப் பார்க்கவில்லையா?" என்று கேட்டபோதும் "இருக்கட்டும்மா. நீ ஒன்றும் வீண் செலவு செய்கிறவள் இல்லையே" என்றாள் சாவித்திரி.

இதை மனதுக்குள் குறித்து வைத்துக் கொண்டாள் பவானி. இந்த மாதிரி அத்தையைப் போய் 'சம்பளம் ஒன்றாம் தேதியே வீட்டில் கிடைக்காதா' என்று ஏங்கியதாகச் சொன்னானே. அதைச் சும்மா விடுவதா?

அடுத்த வியாழனன்று புவனேசனின் வரவைப் பவானி ஓரளவு எதிர்பார்த்தாள் என்றே சொல்லலாம்.

அவளுக்காக வருவான் என்று இல்லை. ஆனால் இன்றைக்கும் அவனுக்கு அந்தப்பக்கம் வேலை இருக்கலாம் இல்லையா? கற்பனை செய்து வைத்திருந்த காதலி நினைவு காற்றிலிட்ட கற்பூரமாகக் கரைந்து மறைந்து போயிற்று.

அவன் வந்தான் என்றால் பஸ்சில் இடிபட வேண்டாம். வேர்த்து வழிய வேண்டாம். சுகமாக ஏசியில் போகலாம். அவன் ஒன்றும் அவளுக்காகத் தனியாகப் பெட்ரோல் செலவழித்துக் கொண்டு போகப் போவதில்லையே. எப்படியும் அதே வழியில் போகிற காரில் அவளும் ஏறிக்கொள்ளப் போகிறாள். அவ்வளவுதானே.

ஆனால் இந்த முறை வீடு வரை அவன் காரில் போகக் கூடாது. அத்தை அவசியமற்றுக் கவலைப்படுவார்கள்.

புன்னகையோடு புவனன் சற்றுச் சரிந்து கார்க்கதவைத் திறந்துவிட ஏறி அமர்ந்தவள் நினைவில் இருக்கும்போதே கேட்டு விடுவது என்று தன் அத்தையைப் பற்றி அவன் பேசியதற்கு விளக்கம் கேட்டாள்.

முதலில் அவள் என்ன கேட்கிறாள் என்றே புரியாததுபோல நோக்கினான் அவன். "உன் அத்தையைப் பற்றி எத்தனையோ சொல்லியிருப்பேன். இப்படித் திடீரென்று என்ன அர்த்தம் என்று

கேட்டால் நான் எதற்கென்று விளக்கம் சொல்வது?" என்று கேட்டுச் சிரித்தான்.

அவன் சிரிப்பிலிருந்தே புரிந்துகொண்டு "எல்லாம் தெரியும். சொல்லுங்கள். ஏன் அப்படி மட்டமாகச் சொன்னீர்கள்? எங்கள் அத்தை, நான் கொண்டு போன சம்பளக் கவரைப் பிரித்துக்கூடப் பார்க்கவில்லை தெரியுமா?" என்றாள் அவள்.

"அப்படியா? நீ ஐந்து பத்து பீராய்ந்தது அவர்களுக்குத் தெரியாமலே போய்விட்டதா?" என்று நமுட்டுச் சிரிப்புச் சிரித்தான் அவன். "அத்தை அற்புதமான அத்தைதான். மோனை நயம் எப்படித் துள்ளி விளையாடுகிறது பார்த்தாயா?"

"ச்சீ, நீங்கள் விளையாட வேண்டாம் புவனன். அன்று நீங்கள் ஏன் அத்தை கூறியதாகப் பொய் சொன்னீர்கள்?"

"பவானி நன்மை பயக்கும் என்றால், பொய்யும் சொல்லலாம் என்று நம் வள்ளுவர் பெருமானே சொல்லி வைத்திருக்கிறார் தெரியுமா? மற்றபடி உன் அத்தையை மட்டமாக நான் நினைத்ததே கிடையாது பவானி..." என்றவனைக் குறுக்கிட்டு "ரொம்ப சரி. ஆனால், அந்தப் பொய்யால் விளைந்த பெரும் நன்மை என்னவோ?" என்று விடாமல் கேட்டாள் அவள்.

"பெரும் நன்மைதான். ஆனால்... இது பற்றி இன்னொரு தரம் கேள் சொல்லுகிறேன்" என்று முடித்தான் புவனேசுவரன்.

"ஓகே" என்று தலையாட்டிவிட்டு அப்பாவி போல முகத்தை வைத்துக்கொண்டு "நீங்கள் சொன்ன மாதிரி இப்போது இன்னொரு தரம் கேட்கிறேன், சொல்லுங்கள். பணம் தேவை என்று அத்தை கூறியதாக ஏன் சொன்னீர்கள்?" என்று விசாரித்தாள் பவானி.

"கடவுளே" என்று உயரப் பார்த்துவிட்டு அவளிடம் திரும்பினான் புவனன். "இத்தனை வயதுக்கு இன்னும் கொஞ்சம் புரியும் என்று எதிர்பார்த்தது தப்புதான் சாமி. அம்மா பவானி இன்னொரு தரம் என்று நான் சொன்னதன் பொருள் காலம்

என்றால் ஐந்து நிமிஷமும் கொஞ்ச காலம்தானே என்று ஐந்தே நிமிஷங்களில் மறுபடியும் கேட்டாலும் கேட்பாய். ஒரு... ஓர் இரண்டு மாதம் கழித்து இந்தக் கேள்வியைக் கேட்கிறாயா?"

"அந்தக் கேள்விக்குப் பதிலைக் கண்டுபிடிக்க உங்களுக்கு அத்தனை நாள் ஆகுமா? பாவம். தலைக்குள் இருப்பது கொஞ்சம் மெல்லத்தான் வேலை செய்யும் போலிருக்கிறது. போகட்டும் இரண்டு மாதங்கள் பொறுத்தே இந்தக் கேள்வியைக் கேட்கிறேன்" என்று அவள் முடித்தபோது அவன் உரக்கச் சிரிக்கத் தொடங்கியிருந்தான்.

அந்தச் சிரிப்பைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஆர்வத்தில் முன் பேசியதையே தொடர்ந்து "முடிந்தால் அதற்குள்ளாக வேனும் என் கேள்விக்குரிய பதிலைக் கண்டு பிடித்து வையுங்கள் புவனன்" என்று அலுத்தாற்போலக் காட்டிக் கொண்டு சொல்லி முடித்தாள் பவானி.

அவள் எதிர்பார்த்த தடையற்ற தொடர்சிரிப்பு தோன்ற வில்லை. ஆனாலும் அவளது கேலியை ரசித்து வந்த முறுவலுடன் "நிச்சயமாய்" என்றான் அவன்.



# 9



அடுத்து வந்து ஒவ்வொரு வியாழக் கிழமையையும் பவானி மிகுந்த ஆவலோடு எதிர்நோக்கத் தொடங்கினாள்.

ஏனெனில் புவனேசுவரனுக்கு அந்தப் பக்கத்தில் நிறைய வேலைகள் இருக்க, அவைகளைக் கவனிப்பதற்காக அவனும் அடிக்கடி அங்கே வர வேண்டியதாக இருந்தது.

அன்று வார விடுமுறை என்றாலும் காலையில் ஒரு பகுதி வேலையை முடித்துவிட்டு, சுமார் பதினோரு மணிக்குத்தான்

பவானி டாக்டர் வீட்டை விட்டுக் கிளம்புவாள். கிட்டத்தட்ட அதே நேரத்தில் புவனனின் வேலையும் முடிந்து விட அவன் அந்தச் சாலையில் காரில் வருவான்.

வெய்யில் நேரத்தில் டாக்டர் வீட்டிலிருந்து பஸ் நிறுத்தம் வரையிலான தூரத்தை நடந்து கடக்கச் சொல்ல முடியாது என்பதால் லட்சுமணன் காரில் கூட்டி வந்து விடுவான்.

ஆனால் நின்று பவானியை பஸ்சில் ஏற்றி விடுவது அவனுக்கு இடப்பட்டுள்ள பணி அல்ல என்பதால் பஸ் நிறுத்தத்தில் காரை நிறுத்தி அவள் காரிலிருந்து இறங்கியதும் காரைக் கிளப்பிக் கொண்டு போய்விடுவான்.

சொல்லி வைத்தாற்போல டாக்டரின் கார் மறையவும் வந்த வேலையை முடித்துவிட்டு புவனன் காரோடு வந்து நிற்பான்.

பவானி புன்னகையோடு ஏறிக்கொள்ள இருவருமாக உரையாடியபடியே செல்வார்கள்.

உற்சாகமான உரையாடல். வானமென்னும் கூரையின் கீழ் நடக்கும் எத்தனையோ விஷயங்களை இருவருமாக அலசிய போதும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அடுத்தவர் காலை வாரியபடியே பேசுவது ஊக்க பானம் போல வேலை செய்தது.

தாயார் இறந்து, தந்தையும் நோய்வாய்ப்பட்ட பிறகு மனதை மாற்றுவதற்காகக் கலகலப்பாகப் பேசிக்கொண்டிருப்பாளே தவிர, உள்ளார்ந்த மகிழ்ச்சியுடன் அவள் இருந்ததே இல்லை எனலாம். இப்போது அந்த நிலை மாறியது.

முதல் மகிழ்ச்சியாக டாக்டர் அகல்யாதேவியின் மருத்துவ ஆலோசனைகளின் பயனாக ரங்கநாதனின் உடல் நிலையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது. முன் போல வெளியே போய் வேலை செய்வது இயலாது என்று டாக்டர் சொல்லி விட்டபோதும், நோயின் வாதனையின்றித் தந்தை இயல்பாக இருக்க முடிந்ததே பவானிக்குப் பெரிய நிம்மதி.

அத்தோடு நல்ல வேலை. வருமானம். வயதான அத்தையின் பணத்தையும் விழுங்கிக் கொண்டிருக்கிறோமே என்ற குன்றல் மாறி தேவைக்குத் தாராளமாகவே வருமானம். அஞ்சத் தேவையற்ற சூழ்நிலை. எல்லாவற்றுக்கும் மேலாக புவனன்.

எந்த விதமான பிரதி பலனையும் கோராமல் சகஜமாகப் பேசிச் சிரிக்கும், சிரிக்க வைக்கும் புவனன்.

இளம் சிரிப்பு இதழ்களை அலங்கரிக்க எப்போதும் முக மலர்ச்சியுடன் இருக்கத் தொடங்கினாள் பவானி.

வியாழக்கிழமைச் சந்திப்புகளைப் பற்றி டாக்டரிடம் வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் பரம ரகசியமாக அதைக் காப்பாற்றவும் பவானியோ, புவனேசுவரனோ முயற்சிக்கவில்லை. எனவே அவர்களது இயல்பான பேச்சிலேயே ஓரளவு ஊகித்துக் கொண்ட டாக்டரும் உதட்டைப் பிதுக்கிய போதும் எதையும் தடுக்க முயற்சி செய்தாரில்லை.

ஒரே ஒருதரம் "அப்பாவின் உடல் நிலை இதற்கு மேல் முன்னேற வழியில்லை. உன் திருமணம் பற்றி மறு பரிசீலனை செய்யப் போகிறாயா?" என்று விசாரித்தார்.

சற்று யோசித்துவிட்டு "அப்பாவின் எதிர்காலத்துக்கு வேண்டிய அளவு சேமித்த பிறகு திருமணம் பற்றி யோசித்துக் கொள்ளலாம் மேடம்" என்றாள் பவானி.

புவனேசுவரனிடமும் "அவள் ஒரு அப்பா பைத்தியம். அவருக்கு வேண்டியது பார்த்த பிறகுதான் திருமணம் என்கிறாள். அப்படிப் பார்த்தால் பவானி மணந்து கொள்ளக் குறைந்தது எட்டுப் பத்து ஆண்டுகள் ஆகும். நினைவிருக்கட்டும்" என்று எச்சரித்தார்.

அவன் வெறுமனே முறுவலித்தான்.

அதற்குமேல் அவர்கள் விஷயத்தில் தலையிடும் அளவு அக்கறை அகல்யாதேவிக்கு இல்லை.

ஆனால் அகல்யாதேவியின் பேச்சின் தொடர்ச்சியாக வேறு ஒன்று நடந்தது. வீட்டிலிருந்தபடியே சில கணக்குகளைப் பார்த்து ஓரளவு பணம் சம்பாதிக்கும் வாய்ப்பை ரங்கநாதனுக்கு புவனன் ஏற்படுத்திக் கொடுத்தான்.

உபயோகமற்று வீட்டுப் பெண்களுக்கு உபத்திரவமாக வாழ்கிறோம் என்ற நிலை மாறியதில் ஒரே சந்தோஷம்.

அதற்காகப் பவானி, புவனனிடம் நன்றி தெரிவித்த போது "பலன் கருதாத உதவி எதையும் நான் செய்வது இல்லை என்று உனக்கு முன்னரே சொல்லியிருக்கிறேனே" என்றான் அவன் பூடகமாக.

தன் லாபம் பற்றி அவன் முன்பு கதை விட்டது நினைவு வர அவள் சிரித்தாள். அதன் தொடராக இன்னொன்றும் ஞாபகத்தில் வர "இரண்டு மாதங்கள் கடும் பாடு பட்டு ஒரு பதிலைக் கண்டுபிடிக்கப் போவதாகச் சொன்னீர்களே கண்டு பிடித்தாயிற்று? அல்லது இன்னமும் இங்கே ஆமை வேகம் தானா?" என்று தலையைத் தொட்டுக்காட்டிச் சிரித்தாள்.

ரசனையுடன் நோக்கியவன் "இரண்டு மாதங்கள் கழித்துக் கேள் என்று மட்டும்தான் நான் சொன்னேன். கண்டுபிடிப்பு அதற்கு இரண்டு மாத அவகாசம் எல்லாம் அவ்விடமே சொன்னது அம்மையாரே" என்றான் இலகுவாக.

மீண்டும் ஒன்றுமில்லாததை விவாதித்து விஷயத்தைத் தள்ளிவிடப் பார்க்கிறாள். விடக் கூடாது என்று எண்ணி "சரி. அப்போதே உங்களுக்குத் தெரிந்திருந்தும் சொல்லாத பதிலை இப்போதேனும் சொல்லலாம் இல்லையா? சொல்லுங்கள் எதற்காக அத்தை பணத்துக்காக அவசரப்படுவது போல, டாக்டரிடம் போய் சொன்னீர்கள்?" என்று கறாராய்க் கேட்டாள் அவள்.

லேசாக முறுவலித்துவிட்டு "அப்படிச் சொல்லித் தொடர்ந்து சீண்டினால், ஆத்திரமடைந்து இன்னும் இரண்டோ, மூன்றோ எத்தனை நாட்களில் விடுமுறைக்குப் போகும் போது கொடுத்தால் போதும் என்று நீ சொல்லுவாய் என்று

எண்ணினேன். உனக்கு என்றைக்கு விடுமுறை நாள் என்று நானாகக் கேட்டால், அதிகப்படி ஆர்வம் போலத் தெரியும். அதைவிட இப்படி அறிவது நல்லது என்று நினைத்து அன்று அப்படிச் சொன்னேன். போதுமா விளக்கம்?'' என்று சொல்லி அவளையே பார்த்தான் அவன்.

அவளுக்கு மூச்சடைத்தது.

"ஆனால் ஏன்...?'' என்று தடுமாறினாள்.

"உன்னைப் புத்திசாலிப் பெண் என்று எண்ணினேனே. வேறு எப்படி உன் விடுமுறை நாளன்று உனக்காக நான் வந்து காத்திருக்க முடியும்?''

இப்போது ரொம்பவே மூச்சடைத்தது அவளுக்கு.

அவளுக்காகக் காத்திருந்தானா? ஏதோ வேறு வேலை என்று நினைத்தாளே.

ஏன் அங்கே ஏதோ காதலோ என்று கூடத்தான் நினைத்தாள்.

எனக்காக நீ எதற்காகக் காத்திருக்க வேண்டும் என்று கேட்க பவானிக்கு ஆசைதான். சொல்லப் போனால் அதை அறிந்தே ஆக வேண்டும்போல, மண்டையே வெடித்துக்கொண்டு இருந்தது. ஆனால் அதைக் கேட்கும் தைரியம் அவளுக்கு இல்லை.

அதுவும் ஆர்வம் இருந்ததாகக் காட்டக் கூடாது என்று நினைத்ததாகச் சொல்லுகிறானே.

டாக்டரிடம் காட்டக் கூடாது என்று எண்ணியது சரிதான். ஆனால் அவளிடமும் அப்படித்தானே? அவள் நேரில் கேட்டபோது கூட மறைத்தானே. ஆர்வத்தைக் காட்டினால் அப்படியே உடும்பாய்ப் பிடித்துக் கொள்வாளோ என்று அஞ்சித்தானே?

அவமானமாய் உணரும்போதே அப்படியிராது என்ற தெளிவும் ஏற்பட்டுவிட்டது. அப்படி அஞ்சுகிறவன் காருடன்

வந்து காத்திருக்கத் தேவையில்லை. அவள் தன்னைத் தப்பாக எண்ணிவிடக் கூடும் என்று நினைத்திருப்பான்.

வெகு சமீப காலத்தில் பயங்கரச் சூடு பட்டவள் ஆயிற்றே. சட்டென்று இன்னொரு சூட்டைத் தானே எதிர்பார்க்கத் தோன்றும்? அந்த வேகம் தணியும்வரை தப்பு அர்த்தம் கொள்ளக் கூடிய எதையும் சொல்ல வேண்டாம் என்று எண்ணியிருப்பான். இன்னொரு 'சுதனோ' என்று எண்ணிவிடக் கூடாதே.

இப்போது அந்தச் சூடும் மறைந்து புவனனைப் பற்றிய நம்பிக்கையும் வந்து விட்டதால் இனியும் மறைக்க வேண்டியது இல்லை என்று சொல்லியிருக்கிறான். அவ்வளவே.

அவள் முகத்தையே கவனித்துக் கொண்டிருந்தது போல "என்ன? எல்லாம் தெளிவாகி விட்டதா?" என்று வினவினான் புவனேசுவரன்.

"ஆமாம்" என்று தலையாட்டிய போதும் உள்ளே ஏதோ முணுமுணுத்தது.

"இல்லை... ரொம்ப நேரம் யோசித்தாயா? அது அவ்வளவு சரிவராதே என்று கொஞ்சம் பயந்து போனேன்" என்று கேலி பேசினான் அவன்.

வியாழனன்று வந்து காத்திருந்த விஷயமே தெளிவாகி விட்டது. ஆனால் அப்படிக் காத்திருந்து அழைத்துப் போனது ஏன் என்ற கேள்வி பவானியின் தொண்டைக்குள்ளேயே அடங்கிப் போயிற்று.

கேட்டாலும் 'நம்பிக்கையான சினேகிதி' கிடைப்பதற்காக என்று கதை சொல்லுவான்.

மெய்யாகவும் இருக்கலாம். வாழ்வில் வெற்றி பெற வேண்டுமானால் சற்று சிரமப்பட்டேனும் சினேகிதர்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்று எழுதி வைத்திருக் கிறார்களே. ஏட்டுச் சுரைக்காய் என்று ஒதுக்காமல் இவன் நடை முறையில் செயல்படுத்துகிறான் கெட்டிக்காரன்.

வேறு எதையாவது சொல்லி இவனிடம் அசட்டுப் பட்டம் கட்டிக் கொள்ளக் கூடாது.

கண்ணில் பளபளப்புடன் அவன் காத்திருப்பதைப் பார்த்தாலே அவன் கிண்டலடிக்கக் காத்திருப்பது தெரிகிறதே.

எனவே "வேண்டாம் வேண்டாம். நீங்கள் கொஞ்சமும் பயப்பட வேண்டாம். 'பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெறு'வது போல, இந்த இரண்டு மாதங்களில் உங்கள் புத்திசாலித்தனம் எனக்கும் கொஞ்சம் வந்திராதா? நானும் சரியாகவே யோசிக்கத் தொடங்கி விட்டேன்" என்றாள் அவளும் கேலிக் குரலிலேயே.

கேலிக்கு வாய்ப்பில்லாததால் சும்மா தோளைக் குலுக்கிவிட்டுப் பேசாதிருந்தான் புவனேசன்.

மேலும் சில வாரங்கள் இப்படியே கழிந்தன.

ரங்கநாதனின் வேலை தொடர்பாக புவனேசுவரன் பவானியின் வீட்டுக்கும் அவ்வப்போது சென்று வந்தான். பவானி வீட்டில் இல்லாத போதும். அவன் பழகிய விதம் வீட்டுப் பெரியவர்களின் மதிப்பையும் பிரியத்தையும் அவனுக்கு மெய்யாகவே ஈட்டித் தந்தது. வேறு சில வாடிக்கைகளையும் அவன் ஏற்படுத்திக் கொடுக்கவே சாவித்திரியின் பென்ஷன் பணத்தை இப்போது சேமிக்க முடிந்தது.

கம்ப்யூட்டர் ஒன்றை வாங்கி வைத்துக்கொண்டு வருமானத்தை அதிகப்படுத்த பாங்க் கடனுக்கும் ஏற்பாடு நடந்தது.

விதவை சகோதரியை உறிஞ்சித் தின்று கொண்டிருக்கிறோமே என்ற குன்றல் மாறி ரங்கநாதன் தன்னம்பிக்கையோடு பேசினார்.

தந்தையின் மகிழ்ச்சி பற்றிப் பவானி அவனிடம் தெரிவித்து "இதிலும் சுயலாபம் இருக்கிறது என்பீர்கள். உங்களுக்கு எவ்வளவு லாபம் இருந்தாலும் எங்களுடைய மனமார்ந்த நன்றி புவனன்" என்றாள்.

சற்று நேரம் பேசாதிருந்துவிட்டு "உன் நன்றியைக் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போய்விட்டது. மாறுதலாக வேறு ஏதாவது பேசுகிறாயா?" என்றான் அவன், ஒரு மாதிரியான குரலில்.

"அப்படியானால் நன்றி சொல்லும்படியாக எதையும் நீங்கள் செய்யாதீர்கள்" என்று அவள் இலகுவாகப் பேசியதற்கு அவன் பதில் சொல்லவில்லை.

ஏற்றுமதி வாய்ப்பு பற்றி ஆராய்வதற்காக வெளிநாடுகளில் ஒரு மாதம் சுற்றுப் பயணம் செய்யப் போவதாகப் புவனேசுவரன் கூறியபோது ஒரு கணம் பவானிக்குத் தொண்டை வறண்டு போயிற்று.

ஆனால் உடனேயே சமாளித்துக் கொண்டாள்.

அவனது வளர்ச்சிக்காக அவன் செல்லுகிறான். வாழ்த்த வேண்டிய விஷயம்.

முகத்தில் மலர்ச்சியை வரவழைத்துக்கொண்டு வாழ்த்தி விட்டு "சரி... நல்ல விஷயமாகப் போகிறீர்கள். போகிற வேலையை விட்டு அங்கே பச்சை இங்கே 'ஃபிகர்' என்று பார்வையை அலைய விடாமல் நல்லபடியாக வந்து சேரவேண்டும் தெரிகிறதா?" என்று முயன்று வழக்கம்போல இலகுவாகப் பேசினாள்.

"பாட்டியம்மா உத்தரவு. ஆனால் நீங்களும் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். வீட்டுக்குப் பஸ் ஏறும்வரை லட்சுமணனைக் காத்திருக்கச் சொல்ல வேண்டும். வியாழனன்று இரவில் டாக்டர் வீட்டுக்குத் திரும்பிப் போக வேண்டாம். அல்லது வீட்டுப் பக்கத்தில் தெரிந்த ஆட்டோவிலேயே திரும்பிப் போ. அப்பா சம்பாதிப்பதால் இப்போது பணம் ஒன்றும் பிரச்சினையில்லையே. உன் பாதுகாப்புக்காகக் கொஞ்சம் பணம் செலவு செய்யலாம். என்ன? செய்கிறாயா?"

அவளது பாதுகாப்புக்காக என்று அவன் யோசித்துச் சொல்வதைப் பவானி மிகவும் இதமாக உணர்ந்தாள். ஆனால்

அவள் அவனை முதல் முதலில் சந்தித்ததே அவளைப் பாதுகாக்க வேண்டித்தானே? அது இப்போது அவனோடு அவளுக்குமே பழகிவிட்டது போலும். மற்றபடி அவன் கிளம்புகிறேன் என்றதும் யாருமற்றுத் தனித்து விடப்பட்டது போன்ற உணர்வு அவளுக்கு ஏன் வரவேண்டும்?

"அப்புறம் இன்னொன்று. நான் திரும்பி வரும்போது 'யார் நீ?' என்று கேளாத அளவுக்கேனும் என்னை நினைவு வைத்திருக்க வேண்டும்."

தன்னை மீறி வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு "வெளிநாட்டில் என்னென்ன அனுபவங்களோ? திரும்பி வந்து நீங்கள் என்னை அப்படிக் கேளாதிருந்தால் நான் செய்த புண்ணியம்" என்று பதவிசான குரலில் அவள் முடித்தபோது இருவருக்குமே சிரிப்பு வந்து விட்டது.

புவனேசுவரன் வெளி நாட்டுக்குக் கிளம்பிச் சென்ற வாரம் வியாழனன்று வீடு வந்த பவானிக்கு மீண்டும் கிளம்புவதை நினைத்தாலே போரடித்தது.

எதையாவது சொன்னான் என்று நினைத்துப் பார்க்கவோ, சிரிக்கவோ ஒன்றும் இல்லை.

வித்தியாசமே இல்லா வழக்கமான வேலையைச் செய்து கொண்டு கிடக்க வேண்டும்.

உப்புச் சப்பில்லாத வாழ்க்கை. புவனன் வரும் வரை இந்த போர் வாழ்வைச் சகித்தாக வேண்டும்.

பேசாமல் உடம்பு சரியில்லை என்று டாக்டருக்கு போன் செய்து சொல்லி விடலாமா என்று ஒரு தரம் யோசித்தாள். ஆனால் இங்கே சும்மா படுத்துக்கிடந்து திண்டாடுவதை விட டாக்டர் வீட்டுக்குப்போய் வேலையில் மூழ்கிவிட்டால் மனம் அமைதியாகி விடக்கூடும்.

இப்படி எண்ணி வெள்ளிக் கிழமை காலையில் தந்தை அத்தையிடம் விடை பெற்றுக்கொண்டு பவானி டாக்டர்

அகல்யாதேவியின் வீட்டை அடைந்த போது அங்கே அவள் சற்றும் எதிர்பாராத காட்சியைக் காண நேர்ந்தது.

சின்னதும் பெரிதுமாகப் பல்வேறு பெட்டிகள் ஹாலில் சிதறிக் கிடக்க சோபாவில் ஒரு புது விருந்தாளி உட்கார்ந்திருந்தான்.

அதைவிட அதிசயம் பெட்டி படுக்கையுடன் உரிமையோடு வீட்டுக்கு வந்திருந்த அந்த விருந்தாளியை அகல்யாதேவி "வெளியே போ" என்று விரட்டிக் கொண்டிருந்தார்



## 10



கண்முன் விரிந்த காட்சி நாடகமாய் வியப்பை அளிக்க நாடக பாத்திரங்கள் இருவரையும் பவானி விழி விரிய நோக்கினாள்.

கிட்டத் தட்ட பவானியுடைய தந்தை வயதில் நாற்பத்தைந்திலிருந்து ஐம்பது மதிக்கத் தக்க வயதில் முன்னந்தலையில் வழுக்கை, பக்கவாட்டில் நரையுடன், சரிந்து விழுந்த சிறு தொந்தியுடன் உட்கார்ந்திருந்த மனிதரின் அப்பாவி முகத்தைப் பார்க்கையில் பாவமாகக் கூட இருந்தது.

தந்தை நோயுற்று நடமாட்டமே குறுகிப் போயிருந்த காலம் அவளது நினைவுக்கு வந்தது.

வேறுபாடாக இந்த மனிதனின் முகத்தில் நோயின் வேதனை தெரியவில்லை. மாறாக வருத்தம் இருந்தது. கண்ணில் ஒரு வெறுமையும் காணப்பட்டது.

என்னென்ன இழப்புகளை அனுபவித்திருக்கிறானோ?

பவானியுடைய தாயார் இறந்தபிறகு ஒரு நாள் அத்தை கட்டாயப்படுத்தி உணவருந்த வைத்தபின் கைகழுவக்கூட

மறந்து சென்ற தந்தையின் முகம் நினைவு வரவும், அவள் மனம் ரொம்பவே இளகிப் போயிற்று.

டாக்டர் சிரித்து பவானி அதிகம் பார்த்தது இல்லை. எப்போதாவது புவனன் பயங்கரமாக விட் அடித்தான் என்றால் தன்னை மீறிச் சிரித்தால்தான் உண்டு.

இப்போது முகத்தில் கடுப்பே இருந்தது. முகத்துக்குப் பொருத்தமான குரலில் ''நான் கொஞ்சம் மதிப்பு, மரியாதையுடன் வாழ்வது கூட உனக்குப் பொறுக்கவில்லையா? என் உயிரை வாங்கவென்று வந்துவிட்டாயா? அதற்கு நான் நிச்சயமாக அனுமதிக்க மாட்டேன். முதலில் எழுந்து வெளியே போ. உன் சாமான்களை எடுத்து உன் பின்னே விட்டெறியச் சொல்லுகிறேன். போ. போய்விடு என்ன தைரியம் இருந்தால் எருமை மாதிரி என் முன்னே வந்து நிற்பாய்'' என்று விரட்டினார்.

இதில் பாதி வார்த்தைகளுக்கு பவானி பின்னங்கால் பிடரியில் இடிபட திரும்பிப் பார்க்காமல் ஓடி விடுவாள். வாழ்நாள் முழுவதுமே எட்டிப் பார்க்கவும் மாட்டாள். ஆனால் அந்த மனிதனோ, காதே செவிடோ என்று சந்தேகப்படும்படி அசையாமல் உட்கார்ந்திருந்தான்.

கண்கள் கலங்கி முகத்தில் அந்த வேதனை மட்டும் தெரியவில்லையானால் டாக்டரின் பேச்சு அவன் காதில் விழவே இல்லை என்று தான் எண்ணத் தோன்றும்.

இப்போது இங்கே நிற்பதா எதுவும் நடவாதது போல உள்ளே போவதா என்று பவானிக்கு அது வேறு பிரச்சினை ஆயிற்று.

பவானி கையில் பையுடன் நிற்பது அகல்யாதேவியின் பார்வை வட்டத்துள் விழாமல் போகாது. ஆனால் வா, போ, என்று எதுவும் சொல்லாமல் வந்தவனை விரட்டுவதிலேயே கவனமாக இருந்தார் அவர்.

வந்தவர் அசையாமல் உட்கார்ந்திருந்தது ஆத்திரமூட்ட "நீயாகப் போய்த் தொலையமாட்டாய். வாட்ச்மேனைக்

கூப்பிட்டு உன்னைக் கழுத்தை பிடித்துத் தள்ளச் சொல்வதுதான் சரி. நானே அந்த அவமானத்தை உனக்கு கொடுப்பானேன் என்று பார்த்தேன். ஆனால் உனக்குத்தான் மான அவமானம் கிடையாதே" என்று வெறுப்புடன் கூறிய டாக்டர் "லட்சுமணனைக் கூப்பிடு பவானி" என்று அவள் வந்ததைக் கவனித்திருந்ததைக் காட்டிக் கொண்டார்.

டாக்டரின் கட்டளையைப் பவானி செயலாக்குமுன் "அதைவிட ஒரு விஷ ஊசியை போட்டு என்னைக் கொன்று விடு அம்மா" என்று அந்த விருந்தாளி வேண்டவும் அப்படியே திகைத்துப் போனாள்.

அம்மாவா?

அதற்கு மேலும் அந்த விஷயத்தில் அவளுக்குக் கொஞ்ச நஞ்ச சந்தேகமும் இருக்கக் கூடாது என்று எண்ணியது போல "என்னைப் பெற்று எனக்கு உயிரைக் கொடுத்தவளும் நீதான். அதை எடுக்க உனக்கு உரிமை இல்லையா? என் உயிரை எடுத்துவிடு. ஏனென்றால் நீ இங்கிருந்து என்னைப் போகச் சொன்னால் எனக்குச் சாவு ஒன்றுதான் வழி" என்றான் அவன்.

இவன்... இந்த ஆள் டாக்டர் அகல்யாதேவியுடைய மகனேதானா?

அகல்யாதேவியும் அவரது அறுபத்தைந்து வயதுக்குச் சற்று அதிகப்படி மூப்பாகத்தான் தெரிவார். ஆனால் அவருடைய மகனின் தோற்றம் சொல்லும் வயது உண்மையென்றால் டாக்டர் பதினைந்து வயதில் இந்த ஆளைப் பெற்றிருக்கவேண்டும். நடக்கிற காரியமா?

அதுவும் பட்டம் பெற்று மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தான் திருமணமே செய்து கொண்டதாக கேள்வி பதிலில் டாக்டரே கூறியிருக்கிறார்.

ஒரு வேளை பெண்களுக்கு இருபத்தியோரு வயதுக்கு முன் திருமணம் கூடாது என்கிற நீ மட்டும் எப்படியாம் என்று யாரும் கேட்டுவிடக் கூடாது என்று அப்படி மாற்றிச் சொல்லியிருப்பாரோ?

ஆனாலும் டாக்டருக்கு இவ்வளவு வயதான மகனா?

மகனின் 'சாவு' என்ற சொல். அகல்யாதேவியை என்னவோ பண்ணியிருக்கவேண்டும்.

சில வினாடி ஜன்னல் வழியே, வெளியே வெறித்த வண்ணம் பேசாமல் நின்றவர் "சரி சரி. இங்கேயே இருந்து தொலை. ஆனால் உன் முகத்தைப் பார்க்க எனக்கு அருவருப்பாக இருக்கிறது. உன்மூஞ்சி என் பார்வையில் படாமல் இருப்பதானால் இங்கே இருக்கலாம். பார் இந்தப் பக்கமாய்க் கார் ஷெட் மேல் 'அவுட் ஹவுஸ்' மாதிரி இங்கேஓர் அறை இருக்கிறது. குளியலறை வசதியோடு கூடியது. அங்கே இருந்துகொள். சாப்பாடு அங்கேயே கொண்டு தரச் சொல்லுகிறேன். எதற்காகவும் நான் இருக்கும் பக்கம் காலடி கூட எடுத்து வைக்கக் கூடாது. சம்மதம் என்றால் இங்கே இரு. முடியாது என்றால் மூட்டையைக் கட்டிக் கொண்டு உடனே கிளம்பிப் போய்விடு" என்று கண்டிப்பான குரலில் உத்திர விட்டார்.

தாயின் காலிலேயே விழுந்துவிட்டான் மகன்.

பின்னே நகர்ந்து கொண்டு "பவானி லட்சுமணனைக் கூப்பிட்டு இந்தச் சாமான்களைக் கார் செட் அறையில் கொண்டு வைக்கச் சொல்லு. இவனையும் அங்கே கூட்டிப் போகச் சொல்லு. லோகுவிடம் அந்த அறையைச் சுத்தம் செய்து கொடுக்கச் சொல்லு. சொல்லிவிட்டு இந்த உதவாக்கரையோடு பேசிக் கொண்டிராமல் நீ வந்துவிடு. வேலை நிறைய இருக்கிறது" என்று சற்று வெறுத்த குரலில் கூறியவர், மகன் புறம் திரும்பாமலே சென்றுவிட்டார்.

இந்த வேலைக்கு வருமுன் புவனேசுவரன் டாக்டருடைய மகனைப் பற்றிச் சொன்னது நினைவு வர, பவானி அவனைப் பார்த்தாள்.

அதெல்லாம் உண்மையாக இருக்குமா? அவளால் நம்ப முடியவில்லை.

இத்தனை ஆண்டுகளும் அப்பாவியாகவே வாழ்ந்துவிட்ட முகம்

தப்பு செய்த சிறுவன் அடுத்தவன் முன்னிலையில் தண்டிக்கப்படும் போதான பாவம். அந்த வயதான முகத்துக்குப் பொருந்தாத போதும் பவானிக்குப் பாவமாகத்தான் இருந்தது. ஆனால் அவள் செய்யக்கூடியது ஒன்றும் இல்லையே.

பேசாமல் பார்வையை அகற்றிக்கொண்டு லோகுவையும் லட்சுமணனையும் தேடிச்சென்றாள்.

முதல் ஒரு வாரம் ஷெட் அறையிலிருந்து சுந்தரவதனம் டாக்டருடைய மகன் வெளியே வரவே இல்லை.

அந்தப் பக்கமாகப் பவானி எட்டிப் பார்த்தபோது வீட்டுப் புறமாக ஜன்னல்கள் கூட மூடப்பட்டிருந்தன. மூஞ்சி பார்வையில் படக் கூடாது என்று தாயார் சொன்னதற்காகவா?

உள்ளூரப் பரிதாபப்பட்டபடி பவானி வேலைக்காரி லோகுவை விசாரித்தாள். அவள்தானே அங்கே போய் சுத்தம் செய்கிறவள்.

பாதி நேரம் மேல் கூரையைப் பார்த்துக் கொண்டு ‘சின்னைய்யா’ சும்மா படுத்துக் கிடப்பதாகச் சொன்னாள் அவள். “அம்மாக்காரி இப்படி வூட்டுக்குள்ளார விடாம ஒதுக்கி வைச்சிருக்கிறாங்களேன்னு அதுக்கு ஒரே சோகம். ஆனாலும் நம்ப டாக்டரம்மாவுக்கு இம்புட்டு பிடிவாதம் ஆவாது. பெத்த புள்ளையின்னு பாக்கலியே. ஏதோ புள்ளிங்கன்னா தப்புத் தண்டா செய்யிறதுதான். அதுக்காக ஒதுக்கி வைச்சிடறதா? தன்னந்தனியா அது என்ன செய்யும்? எம். புள்ள கூட ஒரு கொலை பண்ணிட்டு பத்து வருஷம் ஜெயிலுக்கு போய்ட்டு வந்தான். நாங்க அத்தைச் சேத்துக்கலியா? ரெண்டாங் கலியாணம் பண்ணி வச்சி இன்னிக்கி அவனுக்கு மூணு பசங்க. ஏந்தான் நம்பம்மா இப்பிடி இருக்குதோ? புள்ளை பாவம்” என்று உருகினாள் வேலைக்காரி.

பவானிக்கும் வருத்தமாகத்தான் இருந்தது.

புவனன் சொன்ன அளவுக்கு இந்த சுந்தரவதனம் தப்பு செய்திருக்கக் கூடும் என்று அவளால் நம்ப முடியவில்லை. வயதின் கோளாறால் ஓரிரு பிழைகள் செய்திருக்கலாம். 'கறுப்பு வாந்தி, காக்காய் வாந்தி'யான கதையாக அந்தப் பிழைகள் பெரிது படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

மற்றவர்களின் தப்புகளைக் கூட இந்த அப்பாவி மீது ஏற்றியிருக்கக் கூடும். பாவம்.

சேவை தொழில் வருமானம் என்று அதிலேயே மூழ்கிக்கிடந்த மருத்துவர் பெற்ற மகனின் மன நலம் பற்றி அதிகம் சிந்திக்க வாய்ப்பில்லை. மற்றவர் பேச்சைக் கேட்டு மகனை வெறுத்து ஒதுக்கிவிட்டார் போலும்.

சுந்தரவதனத்தின் மீது இரட்டிப்பாகப் பாவப்பட்டது பவானியின் மனம்.

கூடவே அகல்யாதேவி மீது பரிதாபம்தான். முகத்தில் விழிக்காதே என்று மகனை விரட்டி விட்டு அவரும் நிம்மதியாக இருக்கவில்லை. அவ்வப்போது வெளியை வெறிப்பதும் வேலையில் தடுமாறுவதும் மகன் சாத்தி வைத்திருந்த ஜன்னல் பக்கம் பார்ப்பதும் அவரது மனநிலையை நன்றாகவே எடுத்துக் காட்டியது.

இதில் தான் ஏதாவது செய்ய முடியுமா என்று பவானி யோசித்தாள்.

ஒரு நாள் அகல்யாதேவி மதியத்தில் படுத்துத் தூங்கப் போன போது கையில் இருந்த வேலையை முடித்து வைத்துவிட்டு சுந்தரவதனம் இருக்கும் பகுதிப் பக்கமாச் சென்றாள்.

வீட்டின் புறமாக இருந்த ஜன்னல்களைப் போலல்லாமல் எதிர்ப்புறம் இருந்தவை திறந்து வைக்கப்பட்டிருந்தன. ஆனால் அவற்றின் அருகே செல்லும்போது உள்ளிருந்து வந்த

வாசனைதான் சரியானதாகத் தோன்றவில்லை. சிகரெட் மணத்தைப் பவானி ரொம்பத் தப்பாகக் கருதவில்லை. கெட்டதுதான். ஆனால் பள்ளிப் பிள்ளைகளே சிகரெட் பிடிக்கிறார்கள். இவரைக் குற்றம் சொல்ல முடியுமா? அதுவும் வெளிநாடெல்லாம் போய்விட்டு வந்த மனிதன்.

ஆனால் கூட ஏதோ நெடியடித்தது.

என்னவாக இருக்கும்?

ஒரு கணம் யோசித்தவள் படிகளில் வேகமாக ஏறிச் சென்று கதவைத் தட்டினாள்.

அப்போதுதான் தூங்கி விழித்தவன் போலக் கசங்கிய லுங்கியும் சிவந்த கண்களுமாக வந்து நின்றவனைப் பார்த்த பவானி திகைத்தாள்.

பதினோரு மணிக்கா ஒருவன் படுக்கையை விட்டு எழுவான்? இப்படிக் கிடந்து தூங்கினால் உடம்பு என்னத்துக்கு ஆகும்?

சுந்தரவதனத்தின் முகத்திலும் புரியாத தோற்றம்தான். 'வா' என்றும் சொல்லாமல் 'யார்' என்றும் கேளாமல் விழித்துக் கொண்டு நின்றான். வயதுக்கு ரொம்பவே மீறி வளர்ந்துவிட்ட ஆனால் செய்வது அறியாத சின்னப் பையனின் விழி.

உழைப்புக்கும், வருமானத்துக்கும் புவனன் ஏற்பாடு செய்வதற்கு முன்பாக அவளுடைய தந்தையின் முகம் காட்டிய பாவம். தோற்றுவிட்ட வருத்தமும் அதைத் தவிர்க்க என்ன செய்வது என்று அறியாத திகைப்பும்.

மனம் உருகிவிட பவானி லேசாக முறுவலித்தாள். "நான் உங்கள் அம்மாவிடம் வேலை செய்கிறேன் சார். என் பெயர் பவானி. லோகு வந்து நன்றாகச் சுத்தம் செய்கிறாளா? இங்கே வேறு ஏதேனும் தேவைப்படுகிறதா? அப்படி எதுவும் தேவைப்பட்டால் சொல்லுங்கள். நான் டாக்டரிடம் சொல்லி அதை வாங்கிவரச் சொல்லுகிறேன்" என்றாள் இனிமையான குரலில்.

பளிங்குக் கண்களில் எந்த வித உணர்ச்சியும் இல்லாமல் அவளைப் பார்த்தான் அவன்.

"என்ன சார் சொல்லுங்கள்" என்ற மீண்டும் கேட்டாள் அவள்.

ஒரு கணம் அவன் முகத்தில் உயிர் வந்தது. கண்கள் பளபளக்க ஏதோ சொல்ல வந்தவன் உடனே முகம் சோர, மறுப்பாய்த் தலையசைத்தான். உச்சுக் கொட்டிவிட்டு "அதெல்லாம் நடக்கிற காரியம் இல்லை. விடு" என்று உள்ளே செல்லத் திரும்பினான்.

"சார்" என்று அழைத்தாள் அவள். "இப்படி அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தால் உடம்புக்கு நல்லதில்லை அல்லவா? அவ்வப்போது கொஞ்சம் வெளியே வந்து உலாவலாமே" என்று யோசனை சொன்னாள்.

மீண்டும் மறுப்பாய்த் தலையசைத்தான் சுந்தரவதனம். "என் அம்மா சொன்னதை நீயும் கேட்டுக் கொண்டுதானே இருந்தாய்? அம்மாவை நோகடித்த எனக்கு இந்தச் சிறை வாசம் தேவைதான். அம்மா மனது மாறுகிறவரையேனும் இப்படியேதான் இருக்கப் போகிறேன். விட்டுவிடு" என்று கதவை மூடிக்கொண்டு உள்ளே சென்று விட்டான்.

தாயை வருத்தப்படுத்தியதை எண்ணி எண்ணி மருகுகிறார். பாவம் என்று இருந்தது அவளுக்கு.

வைத்தியத் தொழில் மனவியலையும் உள்ளடக்கியது. வெறும் வைத்தியராக மட்டுமின்றித் தாயாகவும் இருக்கும் அகல்யாதேவிக்கு மகனின் துன்பம் புரியாமல் இருக்குமா? ஒரு வேளை புரியாமல் இருந்தால்?

அவரும் ஒன்றும் மகிழ்ச்சியாக இல்லையே.

இதில் தான் ஏதாவது செய்யக் கூடுமா?

பவானி யோசித்துக் கொண்டிருந்தபோது ஒரு நாள் லோகு வீட்டின் பின் புறத்தில் எதையோ மறைத்து வைப்பதைப் பார்க்க நேர்ந்தது.

இந்த வீட்டில் அப்படி எதை ஒளித்து வைக்கிறாள்?

எதையேனும் திருடிவிட்டாளா?

லோகு அப்படிப்பட்டவள் என்று பவானியால் நம்பவே முடியவில்லை.

பொதுவாக யாரையுமே எடுத்த எடுப்பில் தவறாக நினைப்பது பவானியின் வழக்கம் அல்ல. பெரும்பாலும் எல்லோரையும் நல்லவர்களாக எண்ணுவது சில சமயங்களில் அவளைச் சிக்கலில் மாட்டி விட்டதுண்டு.

பங்களூரில் போல மல்லி மில்ஸ் சுதனைக் கூட அவரைப் பற்றிய சந்தேகம் தோன்றிவிட்ட பிறகும் கூட ஒரேயடியாக மோசம் என்று எண்ணவில்லையே. அப்படி முடிவு கட்டியிருந்தால் 'ஊரிலிருந்து போன் வந்தது. ஊரில் அப்பாவுக்கோ, அத்தைக்கோ உடம்பு சரியில்லை' என்று ஏதோ ஒரு கதை சொல்லி இடையிலேயே கிளம்பி ஓடி வந்திருக்கலாமே.

கடைசி வரை சேச்சே அப்படியிராது வெறும் மனப்பிரமை என்று கடைசி கட்டம் வரை அங்கே இருந்திருக்க வேண்டாமே.

அப்படி இருந்தாலும் நல்லதாகிப் போயிற்று. அந்த மாதிரி நெருக்கடி நிலைமை உந்தாவிட்டால் புவனனிடம் தானாகப் போய்ப் பேசும் தைரியம் அவளுக்கு வந்தே இராதே. அப்புறம் புவனின் அறிமுகம் அவளுக்குக் கிடைப்பது ஏது?

அவனது அறிமுகத்துக்காக இதைவிட அதிகமாகக் கூட கஷ்டப்படலாமே. அவன் கொடுத்த அறிவுரைகளினால்தானே மனிதர்களிடம் பவானிக்கு மீண்டும் நம்பிக்கை உண்டானதே.

புவனனோடு சரிக்குச் சரியாகப் பேசிச் சிரித்த சில சம்பவங்களை நினைவு வரத் தன்னையறியாமல் புன்னகை புரிந்தவளுக்கு அவன் திரும்பி வர இன்னும் மூன்று வாரங்கள் இருக்கின்றனவே என்ற ஏக்கம் உண்டாயிற்று.

அடிக்கடி இப்படி ஏங்குவதால் அவன் உடனே திரும்பி வந்துவிடப் போகிறானா என்று தன்னைத் தானே அறிவுறுத்திக்

கொண்டு வேறு பக்கம் மனதைச் செலுத்த முயன்ற போதுதான் எங்கிருந்து எங்கே தாவிவிட்டோம் என்பது அவளுக்கு நினைவு வந்தது.

லோகு விஷயம்.

அவள் எதையாவது திருடிக் கொணர்ந்து மறைத்து வைத்திருக்கக் கூடுமா?

பெரிதாக எதையும் திருடியிருந்தால் அது அங்கிருக்கும் எல்லாப் பணியாளர்களையும் பாதிக்கும். அவள் உள்பட.

இன்னமும் லோகு திருடியிருக்க மாட்டாள் என்றே தோன்றிய போதும் அவள் எதை மறைத்து வைத்தாள் என்று தெரிந்துகொள்ள எண்ணி அதை எடுத்துப் பார்த்த பவானி திகைத்தாள்.

ஏனெனில் அது ஒரு மது பாட்டில்.



## 11



சற்று நேரம் பவானிக்கு அவளுடைய கண்களையே நம்ப முடியவில்லை.

அந்த வீட்டில் மது பாட்டிலா?

லட்சுமணன் ராணுவத்தில் பணி புரிந்தவர் என்ற போதும் இந்த மாதிரிப் பழக்கங்கள் இல்லாத காரணத்தினாலேயே டாக்டர் அகல்யாதேவி அவரை வேலைக்குச் சேர்த்ததாக டாக்டரே ஒரு தரம் பவானியிடம் கூறியதுண்டு.

லட்சுமணன் டாக்டருடைய பரம விசிறி. டாக்டருக்காக உயிரையும் கொடுக்கக் கூடியவர்.

லட்சுமணனுடைய ஒரே மகளுக்கு திருமணமாகிப் பல ஆண்டுகள் குழந்தை இல்லாமல் இருந்து டாக்டரின்

சிகிச்சையின் பின் அவள் கருவுற்று பிள்ளை பெற்றதால் வந்த பக்தி.

டாக்டருக்குப் பிடிக்காததை லட்சுமணன் நிச்சயமாகச் செய்ய மாட்டார். அதாவது குடிக்க மாட்டார். சமையல்காரம்மா ஊகூம். இங்கே யாரும் இல்லை.

வீடு சென்று வருகிற லோகு இவர்கள் யாருக்காகவும் இந்த பாட்டிலை வாங்கி வந்திருக்க வழியில்லை. அவளும் அவ்வப்போது 'தாகசாந்தி' செய்கிறவள் அல்ல.

மீந்திருப்பது டாக்டருடைய மகன் சுந்தரவதனம்தான்.

அப்படியானால் லோகு இதை வாங்கி வந்திருப்பது அவருக்காகவா?

எப்போதாவது சிகரெட் பிடிப்பதைப் பெரிய தப்பாக எண்ணாத பவானியால் குடிப்பதை அப்படி ஒத்துக் கொள்ள முடியவில்லை. சுந்தரவதனத்தின் சிவந்த கண்களும் இமைகளுக்குக் கீழ் வீங்கித் தோன்றும் சதையும் நினைவு வர, டாக்டர் மகன் பெரும் குடியனோ என்ற சந்தேகமும் அவளுக்கு வந்தது. திருந்தி வந்தவனை டாக்டரின் பாராமுகம் மீண்டும் படு குழியில் தள்ளுகிறதா?

இருவரில் யாரையும் டாக்டரிடம் காட்டிக் கொடுக்கவும் அவளுக்கு மனமில்லை.

ஏற்கனவே மகனிடம் வெறுப்பைக் காட்டும் தாயார் இதைச் சாக்கிட்டு அவனை வெளியேற்றி விடவும் கூடும். அப்புறம் அவன் அடியோடு அழிந்துவிடக் கூடும். அத்தோடு லோகுவும் நல்லவளே. உண்மையான உழைப்பாளி. அவளைச் சிக்கலில் மாட்டி விடவும் பவானிக்குப் பிடிக்கவில்லை.

சற்று யோசித்துவிட்டு லோகுவைத் தேடிப் போனாள்.

ஆனால் தெரிந்துவிட்டதே என்று வருத்தப்பட்டபோதும் பவானி எதிர்பார்த்தது போல லோகு அஞ்சி நடுங்கவும் இல்லை. இனிமேல் இப்படி வாங்கி வருவது இல்லை என்று வாக்குக் கொடுக்கவும் இல்லை.

மாறாக "இன்னாம்மா? இத்தினி வருசமா அந்தம்மா போட்ட உப்பைத் துண்ணுட்டேன். அந்த நன்றிக்காவாச்சும் அவங்க புள்ளைய நான் காப்பாத்த வேணாமா? தனியாக் கிடக்கேன். செயில்ல மாதிரி வேதனையா இருக்குது. இப்படியே கிடந்தா ஒரு நாள் தூக்க மாட்டிக்கினு செத்திருவேன் என்குது. இத்தப் போட்டாக்கத் தாயே வெறுத்திட்டாளேங்கிற சோகம் கொஞ்ச மாச்சும் குறையுதாம். அதான்மா வாங்கியாந்து குடுக்கிறேன். எப்பிடியோ அந்தப் புள்ள உசிரோடயாச்சும் கிடக்கட்டுமே. அதுக்காக என் வேலை போனால் போவட்டும்" என்றாள் அவள் பழைய காலத்து ராஜ விசுவாசி தியாகம் பண்ணத் தயாராவது போல.

தொடர்ந்து "அம்மா கிட்டே சொல்லிருவியா?" என்று அவள் கவலையுடன் கேட்ட போது அவளிடமும் பவானியின் மனம் உருகிப் போயிற்று.

அவளுக்கும் வயிறு இருக்கிறதே. வயிற்றுப் பாட்டைப் பற்றிய கவலை வந்துவிட்டது. டாக்டர் கொடுக்கும் சம்பளம் வேறு யாரும் தரவும் மாட்டார்கள்.

"சொல்ல மாட்டேன்" என்று வாக்குக் கொடுத்துவிட்டு மீண்டும் யோசித்தாள்...

அகல்யாதேவியின் மனம் மெல்ல இளகிக்கொண்டு இருக்கிற நேரம். எறும்பூரக் கல் தேய்கிற மாதிரி ரொம்பவும் மெதுவாகவே என்றாலும் அவர் சஞ்சலப்படுவது நிச்சயமே. கொஞ்ச காலம் சென்றால் எல்லாம் சரியாகிவிடும். இப்போது போய் மகன் இப்படிப் பண்ணுகிறானே.

தன்னிரகக்கத்தில மூழ்கிக் கிடக்கும் மகன் அவளுக்கு அன்னியன். அது மட்டுமின்றி அவளாகப் போய்ப் பேசியபோதும் அவன் நின்று பேசவில்லையே. ஒரு வேளை முதல் சந்திப்பிலேயே அவள் முன்னிலையில் அவமானப்பட நேர்ந்ததால் வந்த கூச்சமாகவும் இருக்கலாம். நன்கு பழகியவர்களிடமே அது போன்ற நிலை தாங்க முடியாதது.

அதுவும் பெற்ற தாயிடம் வேலை பார்க்கிறவள் முன்னிலையில்...

டாக்டருடைய மகன் ஒதுங்கிப் போவதைத் தப்பாகக் கருத முடியாது.

மீதம் இருப்பது ஒரே வழி.

சிங்கத்தை அதன் குகையிலே சந்திப்பது போல அன்றைய வேலை முடிந்த பிறகு டாக்டரிடமே பவானி அபிப்பிராயம் கேட்டாள். "கெட்ட பழக்கங்களுக்கு அடிமையானவர்கள் திருந்த முயற்சிக்கும்போது சூழ இருக்கும் சொந்தக்காரர்கள் ரொம்பவுமே ஒத்துழைக்க வேண்டுமாமே டாக்டர். அந்த ஒத்துழைப்பு ஒழுங்காகக் கிடைக்காமல்தானே பலர் மீண்டும் பழைய வாழ்க்கைக்கே திரும்பி வீணாகிப் போகிறார்களாம். இந்த விடுமுறை தினத்தன்று வீட்டுக்குப் போனபோது எதிலோ படித்ததாக அத்தை சொல்லிக்கொடுத்து இருந்தார்கள். உண்மைதானா மேடம்?" என்று விசாரித்தாள்.

மறுக்க முடியாமல் டாக்டர் மாட்டிக்கொள்வார். உன் பிள்ளை விஷயம் என்ன என்று மடக்கிவிடலாம் என்று எண்ணினாள் பவானி. ஆனால் மருத்துவர் அப்படி ஏதும் சொல்லவில்லை.

சிறு புருவச் சுளிப்பின் பின், "இதையெல்லாம் ஒட்டு மொத்தமாக ஒரு தலைப்பின் கீழ் கொண்டுவர முடியாது பவானி. அவரவர் வீட்டில் நடப்பதை வைத்து அதற்கேற்ப விடை தேட வேண்டியதுதான்" என்றார் அகல்யாதேவி.

இதற்கு மேல் பேச்சை எப்படிக் கொண்டு போவது?

பவானி என்ன சொல்லப் போகிறாள் என்று ஊகித்து என் மகனுக்கு இதுதான் சரி என்று சொல்லாமல் சொல்வது போல் அல்லவா இருக்கிறது!

இவ்வளவு கண்டிப்பாக இருக்கிறாரே என்று பவானி எண்ணும்போதே ஒரு பெருமூச்சுடன் டாக்டர் எழுந்து சென்றார்.

அந்தப் பெருமூச்சு பவானிக்கு நம்பிக்கையை அளித்தது.

இந்த சுந்தரவதனம் நல்லவனாக இருக்கத் தொடங்கினால் டாக்டர் கட்டாயமாக மகனை மன்னித்து வீட்டோடு சேர்த்துக் கொள்ளுவார். தாயே வெறுத்துவிட்டாளே என்று சுந்தரவதனம் மேலும் மேலும் தப்பு செய்யத் தேவை இல்லை.

இதற்கு என்ன செய்வது யோசிக்கத் தொடங்கினாள் பவானி.

டாக்டரும் அவருடைய மகனும் எப்படியோ போகட்டும் என்று சும்மா இருக்க அவளுக்குப் பிடிக்கவில்லை.

டாக்டர் அவளுக்கும் அவள் குடும்பத்துக்கும் நன்மை செய்திருக்கிறார். அவளுக்கு நல்ல சம்பளம் தருவதோடு அவளுடைய தந்தைக்கும் மருந்து, மருத்துவ ஆலோசனை கொடுத்திருக்கிறார். அதனால் அல்லவோ தந்தை இப்போது இந்த நிலைக்கு வந்திருக்கிறார்.

அவரே பொருள் ஈட்டுவது மட்டுமின்றி அவளுக்கு இந்த வேலையை வாங்கித் தந்து எல்லா நன்மைகளுக்கும் மூல கர்த்தாவாக இருப்பது புவனேசுவரன்தான் என்றாலும் டாக்டரின் பங்கையும் குறைத்துச் சொல்ல முடியாது.

அந்த நன்றிக் கடனை இப்படிப் பவானி செலுத்துவது தெரியும்போது புவனன் எப்படி மகிழ்வான். என்னதான் 'சுயலாபம்' அது இதென்று கதை சொன்னாலும் பிறருக்கு உதவுவது அவனது ரத்தத்தில் ஓடுவது. அவனைப் போலவே உதவும் மனப்பான்மையோடு நடந்து கொள்கிறோம் என்று எண்ணுவதையே சுகமாக உணர்ந்தாள் அவள்.

இந்த எண்ணம் புது உந்துதலைத் தர பவானி சுந்தரவதனத்தை நாடிச் சென்றாள்.

அவ்வப்போது, லோகுவுக்குப் பதிலாகச் சுந்தரவனத்துக்குக் காபி சாப்பாடு எடுத்துப்போய்க் கொடுத்தாள். எதாவது பேச்சுக் கொடுத்தாள்.

முதலில் சுந்தரவதனம், பவானியிடம் பேசிப் பழக மிகவும் தயங்கினான்.

“உங்கள் தாயார் என் குடும்பத்துக்கு எவ்வளவோ செய்திருக்கிறார்கள். நடக்கவே சிரமப்பட்ட என் தந்தை, இப்போது வீட்டுக்குள் என்றாலும், நன்றாக நடமாடுகிறார், உற்சாகமாக இருக்கிறார். அதே போல டாக்டர் குடும்பமும் ஒன்றாகி நன்றாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன் சார். ஏதோ ஒரு மனவேறுபாடு. சீக்கிரமே எல்லாம் சரியாகி விடும். அதைச் சொல்லத்தான் வந்தேன்” என்று இதமாகப் பேசி அவனது தயக்கத்தைப் போக்கினாள் பவானி.

“நான் பாவி. பெற்ற தாயின் மனதை நோகச் செய்த பாதகன். எனக்கு மன்னிப்பே கிடையாது. எனக்குக் கால முழுமைக்கும் இந்தத் தனிமைச்சிறைதான்” என்று கண்ணீர் விட்டான் டாக்டர் மகன்.

“கொலைக் குற்றத்துக்குக் கூட மன்னிப்பு உண்டு சார். நீங்கள் கொஞ்சம் பொறுமையோடு இருந்தால் எல்லாம் சரியாகிவிடும்” என்று ஆறுதல் கூறினாள் பவானி.

சோர்வுடன் உச்சுக் கொட்டினான் அவன்.

இந்தச் சோர்வும் சுய பச்சாதாபமும் மீண்டும் அவனை அழிவுப் பாதைக்கு அழைத்துப்போய் விடக்கூடும் என்று பவானிக்குத் தோன்றியது. சோர்வு மறக்க என்று அதிகம் குடிக்கத் தொடங்கிவிட்டால்?

ஒரு நாள் துணிவை வரவழைத்துக் கொண்டு “செய்த பிழைகளை நினைத்து உங்கள் மகன் ரொம்பவும் வருத்தப்படுகிறார் என்று தெரிகிறது” என்று அவள் கம்ப்யூட்டரில் எழுதி பிரிண்ட் போட்டுக்கொண்டு வந்திருந்ததைச் சரி பார்த்துக் கையெழுத்திட்ட டாக்டரிடம் மெதுவாகச் சொன்னாள்.

அகல்யாதேவி பேசாமலே இருக்கவும், “நான் கூடப் பேசிப் பார்த்தேன் மேடம். ரொம்பவும் மனம் சோர்ந்து இருக்கிறார்.

நீங்கள் எழுதியிருப்பது போல மன அழுத்தம் ஏற்பட்டுவிடுமோ என்று தோன்றியது. அதனால்தான் சொன்னேன்." என்று இந்தப் பேச்சை எடுத்ததையும் நியாயப்படுத்திக் கொண்டாள் சின்னவள்.

அவனிடம் போய் ஏன் பேசினாய் என்ற கேள்வி வருமோ என்று உள்ளூர சிறு உதைப்புதான். ஆனால் பெற்ற மனதின் தற்போதைய நிலை குறித்து அவளது அனுமானமே சரியாகி அகல்யாதேவி அந்தக் கேள்வி கேட்கவே இல்லை.

மாறாக "ஜன்னல்களையெல்லாம் திறந்து வைக்கச் சொல்லு காற்றும் வெளிச்சமும் வந்தால், புழுக்கமும், இறுக்கமும், அழுத்தம் எல்லாம் தானாகப் போய்விடும்" என்றார் மருத்துவர்.

இதன் அர்த்தம் என்ன?

அவரது கண்ணில் கூடப் படாமல் மகன் மறைவாக இருக்கத் தேவையில்லை என்பதுதானே?

அவசரமாகப் போய் சுந்தரவதனத்திடம் இந்த நல்ல சேதியைத் தெரிவித்தால் அவன் அதில் அவ்வளவு உற்சாகம் காட்டவில்லை. "மெய்யாகவே அம்மாவின் மனம் இளகியிருந்தால், வீட்டுக்கே வந்து கூடவே வசிக்கச் சொல்லியிருப்பார்களே. இது உனக்காக அம்மா சும்மா சொன்னது" என்றான் அவன்.

ஆனால் அவன் பேச்சைப் பொருட்படுத்தாமல் வீட்டுப் பக்கமான ஜன்னல்களைத் திறந்து வைத்துக்கொண்டே "உங்கள் அம்மா அப்படிச் சொல்லும் நாளும் விரைவிலேயே வரும்" என்று ஆருடம் சொன்னாள் அவள். "ஆனால் அவர் அப்படி அழைக்கும்படியாக நீங்களும் உங்கள் தகுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும் சுந்தரவதனம் சார். உங்கள்குறையைத் களைந்துவிட வேண்டும். இவள் யார் இதைச் சொல்ல என்று நினைப்பீர்களோ, என்னவோ? ஆனால்..."

"சேச்சே... அப்படி நான் நினைக்கவே மாட்டேன் பவானி. எனக்காக அம்மாவிடம் பேசியிருக்கிறாயே. என் நன்மைக்காகத் தான் பாடுபடுகிறாய் என்பது கூடவா, எனக்குத் தெரியாது? நீ என்னிடம் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம்" என்றான் சுந்தரவதனம்.

"அப்படியானால் சொல்லியே விடுகிறேன். பாருங்கள் சார். இந்தக் குடி கிடியையெல்லாம் நீங்கள் அடியோடு விட்டுவிட வேண்டும். சமூகத்தில் உங்கள் அம்மாவுக்கு எவ்வளவு நற்பெயர் இருக்கிறது தெரியுமா? நன்மதிப்பு மரியாதை. நீங்கள் குடிப்பது வெளியே தெரிந்தால், அந்த மதிப்பு மரியாதை எல்லாம் என்ன ஆகும்? பெற்ற தாயின் புகழைப் பிள்ளையாகிய நீங்களே கெடுக்கலாமா? அத்தோடு உங்கள் உடம்புதான் என்னத்திற்கு ஆகும்? எல்லாவற்றையும் எண்ணிப்பார்க்க வேண்டாமா?" என்று இதமான குரலிலேயே அறிவுறுத்த முயன்றாள் பவானி.

இங்கும் அங்குமாய் பவானியின் முகத்தைத் தவிர மற்ற எல்லா இடங்களையும் கீழ்க்கண்ணால் அலசியபடி, சுந்தரவதனம் சற்று நேரம் மௌனமாக அமர்ந்திருந்தான். பிறகு எழுந்து சென்று மேஜை மேல் இருந்த பாட்டிலை எடுத்து வந்து, அவள் கையில் கொடுத்தான்.

"இந்தா பவானி. இதை நீயே தலையைச் சுற்றித் தூக்கி எறிந்துவிடு. முன்பு எப்படியோ இப்போது மனச் சோர்வுக்காகக் குடித்தேனே தவிர அதில் எனக்கு ஆசை என்று சொல்லவே முடியாது. என்னைப் பொறுத்த வரையில் என் அம்மா பெருமைப்படும்படி நடப்பதுதான் இனி என் லட்சியம்." என்று உணர்ச்சி ததும்பிய குரலில் கூறினான்.

மகிழ்ச்சியோடு விஷயத்தைச் சொல்லப்போனால், அவளை முந்திக்கொண்டு முகத்தில் முறுவலோடு "சுந்தரத்தை இனி இந்த வீட்டிலேயே தங்கச் சொல்லு பவானி" என்றார் அகல்யாதேவி.

“மேடம்” என்றாள் அவள் அதிசயமாகப் பார்த்து.

“ஆமாம்மா... நீ சொன்னதை யோசித்துப்பார்த்தேன். சுந்தரத்துக்குத் தேவை என்ன என்று புரிந்தது. அதனால்தான் சொல்லுகிறேன். அவனை இங்கேயே வரச் சொல்லிவிடு” என்றார் டாக்டர்.

அது மட்டுமல்ல. சுந்தரவதனம் ஷெட் அறையிலிருந்து வீட்டுக்குக் குடி வந்த பிறகு மகனோடு சேர்ந்து உட்கார்ந்து பேசினார்... சாப்பிட்டார்... பிரியமாகப் பழகினார்.

இதில் தவறாமல் பவானியையும் சேர்த்துக்கொண்டார்.

மகனை முழுமையாகத் திருத்துவது. அவளது பொறுப்பு என்று பொறுப்பை ஒப்படைத்தவர், அது எப்படி என்றும் கற்றுக் கொடுத்தார்.

சும்மா இருக்கும் மனம்தானே சாத்தானின் உலைக்களம்?

எழுத்து வேலை முடிந்ததும், சுந்தரவதனத்துடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பது, சீட்டு, கேரம் விளையாடுவது உலவ அழைத்துப் போவது என்று மகன் மனம் உற்சாகமாக இருக்கும்படிப் பார்த்துக் கொள்ளச் சொன்னார்.

“தோட்டம் வீட்டு அலங்காரம், இதையெல்லாம் விட்டுவிடு. பவானி, அதற்குவேறு ஆள் வைத்துக் கொள்கிறேன். எனக்கு என் சுந்தரம் எல்லாரையும் போல வாழ வேண்டும். நீ அதைப் பார்த்தால் போதும். தேவைப்பட்டால் எழுத்து வேலைக்குக் கூட நான் வேறு ஆள் பார்த்து விடுகிறேன்” என்றார் மருத்துவர்.

“வேண்டாம் மேடம். எழுத்து வேலையை உங்கள் மகன் மதியம் தூங்கும்போது செய்து விடுகிறேன். அவரைப் பற்றிய கவலையை இனி விட்டுவிடுங்கள்” என்றாள் பவானி.

சொன்னபடியே, அவள் செய்யவும் டாக்டருக்கு ஏற்பட்ட திருப்தியில் அவளது ஊதியத்தையே வெகுவாகக் கூட்டி விட்டார்.

பவானிக்கும் இதில் ஏகப்பட்ட மகிழ்ச்சி. அதிகப்படி வருமானம் ஒரு சந்தோஷம் என்றால், அவளது முயற்சியால் ஒருவன் திருந்தினான். பிரிந்திருந்த ஒரு குடும்பம் ஒன்று சேர்ந்தது என்பது, எவ்வளவு பெரிய விஷயம்.

புவனேசுவரன் வெளி நாட்டுச் சுற்றுப்பயணம் முடிந்து திரும்பி வந்ததும், உள்ளூரக் குதூகலம் குமிழியிட இந்த விவரங்களை எல்லாம் அவனிடம் ஒப்பித்தாள்.

ஆனால், அவள் எதிர்பார்த்தது போல, அவன் மகிழ்ச்சி அடையவில்லை. நேர் மாறாக முகம் சுளித்தவன், "இனி இந்த வேலையை விட்டுவிடு, பவானி. டாக்டர் வீட்டில் இனி நீ இருக்க வேண்டாம்" என்று அவளுக்கு ஆலோசனை சொன்னான். சற்று அதிகாரமான ஆலோசனை.



## 12



வேலையை விட்டுவிடும்படி புவனேசுவரன் கூறவும் பவானி பிரமித்துப் போனாள்.

இந்த வேலையை அவன்தானே அவளுக்கு வாங்கிக் கொடுத்தான்? இங்கு வேலை செய்வது, எந்தெந்த விதத்தில் நல்லது என்று எடுத்துரைத்து ஏற்றுக் கொள்ளச் செய்தானே. இந்த வேலை அவளுக்குக் கிடைப்பதற்காக, எப்படியெப்படி நடந்து கொள்ளச் சொன்னான்.

அத்தோடு இந்த வேலையினால் பவானிக்கு எத்தனை நன்மைகள் நடந்திருக்கின்றன.

அலுவலகத்தில் பதவி உயர்வு போல இங்கேயும் இன்றைக்கு அவளுக்குத் தரப்படும் மரியாதை என்ன? அகல்யாதேவிக்கு அடுத்த நிலை அவளுக்குத்தானே?

சம்பளமும்தான். டாக்டர் எவ்வளவு கூட்டியிருக்கிறார்கள்.

வீட்டுப் பெண்ணைப்போல மகனுக்குச் சமதையாக நடத்துகிறாரே.

அன்றன்றைய சாப்பாட்டு மெனு கூட இப்போதெல்லாம் பவானியிடம் கேட்டுத்தான் முடிவு செய்யப்படுகிறது. அந்த அளவு மரியாதை.

இவை எல்லாவற்றையும் விட சுந்தரவதனம் இப்போதுதான் உற்சாகமாக இருக்கத் தொடங்கி இருக்கிறான். அது நிலைக்க வேண்டுமே என்று டாக்டரைப் போலவே அவளும்தான் வேண்டிக் கொள்கிறாள்.

இப்போதைக்கு அது முக்கால் கிணறு தாண்டிய கதைதான். இன்னமும் அவ்வப்போது அவன் முகத்தில் எதையோ பறி கொடுத்தாற்போன்ற தோற்றமும், அந்தச் சமயங்களில் அறைக்குள் சென்று உள்ளே தாளிட்டுக் கொள்வதும், நடக்கத்தானே செய்கின்றன? பூட்டிய கதவின் பின்னே, அவன் தான் பழகிவிட்ட கெட்ட பழக்கத்தை எண்ணி ஏங்கிக் கொண்டிருப்பது தெரியாதா?

இந்த நிலையில் வேலையை விடுவதா? இவ்வளவு நாள் பட்டபாடுபலனின்றிப் போய்விடுமே. கிட்டத்தட்ட ஒரு மாத முயற்சி.

என்ன இது? புவனனுக்கு என்ன ஆயிற்று. வெளிநாட்டுப் பயணம் வெற்றியாகவில்லையா? புவனன் சென்றுமா தோற்றது?

அவன் தோல்வியை தன் தோல்வியாக உணர்ந்து "உங்கள் பயணம் என்ன ஆயிற்று புவனன். எதிர்பார்த்த வெற்றி கிடைத்ததா?" என்று சிறு வருத்தத்துடன் வினவினாள்.

"எதிர்பார்த்ததற்கு மேலாகவே" என்றான் புவனேசுவரன். "ஆனால் நாம் பேசிக் கொண்டிருக்கும் விஷயம் அது அல்லவே" என்று எரிச்சல் காட்டினான். "பேச்சை மாற்றி உன் வேலையை விடப் பிடிக்கவில்லை என்று சூசகமாகச்

சொல்லுகிறாயா? அல்லது உன் விஷயத்தில் நான் தலையிடக் கூடாது என்கிறாயா?'' என்று படபடத்தான் அவன்.

"இரண்டும் இல்லை'' என்றாள் பவானி. "இந்த வேலையை எனக்கு வாங்கிக் கொடுத்ததே, நீங்கள்தான். அப்போது, இதற்குச் சாதகமாகப் பேசிவிட்டு, இப்போது உதறு என்கிறீர்களே.''

"அப்போது இந்த வீடு உனக்குப் பாதுகாப்பாக இருந்தது. இப்போது அப்படி இல்லை'' என்றான் அவன் சுருக்கமாக.

அவன் குரலும் பேச்சும் பவானிக்கு வியப்பூட்டின. அவர்களுக்கிடையே நடக்கும் உரையாடல் பொதுவாகக் கேலியும் சிரிப்புமாகத்தான் இருக்கும். கடந்த ஒரு மாதமாக, அது இல்லாமல் நீர் இல்லாத பயிர் போல எவ்வளவு வாடியிருப்பாள். இவனானால் வந்ததும், வராததுமாக இப்படிச் சிடுசிடுக்கிறானே. அதுவும் நல்ல விஷயம் கேட்ட பிறகு.

நிலைமையை லேசாக்க விரும்பி "ஏன் புவனன்? டாக்டர் வீட்டுக்குப் பேய் பிசாசு, சிங்கம் புலி எதுவும் குடி வந்து விட்டதா?'' என்று வேடிக்கையாகக் கேட்டாள்.

அவளது முயற்சி புரிந்தவன்போலப் புவனன் தலையசைத்தான். "இதற்கெல்லாம் பயப்படு என்று உன்னிடம் நான் சொல்ல மாட்டேன். சொல்லத் தேவையும் இராது. ஆனால் மிஸ்டர் சுந்தரவதனம் இருப்பதுதான் எனக்குப் பிடிக்கவில்லை'' என்றான் தொடர்ந்து.

தன் காதுகளையே நம்ப மாட்டாதவள் போல் பவானிக்கு ஒரே ஆச்சரியமாகிப் போயிற்று.

"சுந்தரவதனம்? டாக்டருடைய மகனையா சொல்லுகிறீர்கள்?'' என்று வியப்புடன் வினவினாள்.

"வேறு எத்தனை சுந்தரவதனங்கள் அந்த வீட்டில் இருக்கிறார்களாம்?'' என்று அவன் எரிச்சல் காட்டியதைப் பொருட்படுத்தாமல் "புலி சிங்கத்தை விட அவர் பயங்கர மானவர் என்றால் எனக்குப் புரியவில்லையே'' என்றாள் அவள். "சிரிப்புதான் வருகிறது'' என்று முறுவலித்தாள்.

"பங்களூரும் மிஸ்டர் சுதனும் அதற்குள்ளாகவா மறந்துவிட்டது?"

அந்தக்குரல் சுருக்கெனக் குத்த "எல்லா ஆண்களும் சுதன் அல்ல.. நம்பிக்கை வேண்டும் என்று உபதேசித்தவரே இப்படிப்பேசினால் கொஞ்சமும் நன்றாக இல்லை" என்று பதில் கொடுத்து விட்டாள் அவள்.

ஆனால் பேச்சு போன விதம் பிடிக்காமல் உடனேயே "என்...ன புவனன் நீங்கள் என்ன பேசுகிறீர்கள். சுந்தரம் சாருக்குக் கூனலை நிமிர்த்திக் கொஞ்ச நேரம் நேராக உட்காரக் கூட முடியவில்லை. தோளெல்லாம் உள்ளேபோய், கன்னம் டொக்கு விழுந்து வயிறு தளர்ந்து தொப்பையாகி... இந்த ஆளைப்போய் என்ன மாதிரிச் சொல்லுகிறீர்கள். குடி அவரை அப்படிப் பாழாக்கி வைத்திருக்கிறது. முழுக்கத் திருந்தி ஆரோக்கியத்தோடு வாழவே எவ்வளவோ காலமாகலாம். அவரைப் போய்ப் பேய், பிசாசு என்று பூதம் காட்டுகிறீர்களே. பாவம். விடுங்கள்" என்றாள் சமாதானமாக.

அவளது முயற்சி புரிந்து அவனும் தணிந்து பேசினான். "விட்டு விடலாம் பவானி. ஆனால், சுந்தரவதனத்தைப் பற்றிய முழு விவரமும், டாக்டர் உனக்குச் சொல்லவில்லை என்று தோன்றுகிறது. அவரது கெட்ட பழக்கம் குடி மட்டும் அல்ல. முதலில் அதைத் தெரிந்து கொண்டு அப்புறம் முடிவு செய்" என்று தொடங்கிச் சொன்னான்.

சுந்தரவதனத்தின் காதல் விவகாரம் பற்றிப் புவனேஸ்வரன் சொல்லப் போகிறான் என்று ஊகித்தாள் பவானி. அது எந்த அளவுக்குப் பெரிது படுத்தப்பட்ட கதையோ என்று எண்ணிய போதும் குறுக்கிட்டுப் பேசி அவனுக்கு எரிச்சல் மூட்ட அவள் விரும்பவில்லை. எதுவானாலும் அவன் சொல்லி முடிக்கட்டும். பிறகு இதமாகவே தன் எண்ணத்தைப் புரிய வைக்கலாம்.

டாக்டர் அகல்யாதேவிக்கு தொழிலில் ஈடுபாடு. இரவும் பகலும் அதே நினைவு. இதை ஒத்துக் கொள்ளாததால், கணவரையே, விவாகரத்து செய்தவர் என்று, புவனன்

கூறியபோது, பவானிக்கு டாக்டர் மீது மரியாதை மேலும் அதிகரித்தது.

சொந்த வாழ்வையே துறக்கும் அளவுக்குச் சேவை மனப்பான்மை பழைய கால சுதந்திரப் போராட்ட வீரர்கள் மாதிரி.

ஆனால், அது புவனனுக்கு ரசிக்கவில்லை. "அப்படிச் சேவை மனப்பான்மை இருந்தால், அவர்கள் திருமணம் செய்திருக்கக் கூடாது. பிள்ளையும் பெற்றிருக்கக் கூடாது. அநியாயமாக இரண்டு பேர் வாழ்வைக் கெடுத்து விட்டார்கள்" என்றான் சற்று வெறுத்த குரலில்.

"இரண்டு... ஓ...மகன் வாழ்வையும் சேர்த்துச் சொல்லுகிறீர்களா?" என்றாள் பவானி.

"ஆமாம். டாக்டர் மருத்துவமனை வேலை என்று அதே கவனமாக இருந்திருக்கிறார். மகன் புத்தி கழுதை மேயப் போய்விட்டது. சிகரெட், அவ்வப்போது நண்பர்களுடன் சேர்ந்து பீர்... இவைகளை நான் பெரிய குற்றங்களாகக் கருதவில்லை தானாக யோசித்து, நன்மை தீமை உணருகிற வயதில் அவரவரே விட்டுவிடுகிறவைதான். ஆனால் சுந்தரவதனத்துக்கு சின்ன வயதிலேயே பெண்களிடம் அதிகப்படியான ஈர்ப்பு. பள்ளிப் படிப்பின்போதே காதல். பள்ளியிலிருந்து டிஸ்மிஸ் செய்கிற அளவுக்கு அது போயிற்று. அதிலிருந்து அவரை மீட்க டாக்டர் ஒரு சில லட்சங்களை செலவு செய்ததாகக் கேள்வி. பொறுப்பு வரும் என்று எங்கோ வேலை வாங்கிக் கொடுத்தார்கள். அங்கே கூட்டிப் பெருக்குகிறவள் மேல் கை வைத்து விட்டார் துரை. பணத்தைக் கொடுத்து, அவளை விலக்கி இருக்கிறார்கள். பிறகு பார்த்தால் நம் கலியுக அர்ஜுனன் ஒரே சமயத்தில் மூன்று பெண்களோடு தொடர்பு வைத்திருந்திருக்கிறார். இப்போது நான் சொல்வது எல்லாம் முழு அளவில் கட்டில்வரை போன உறவுகள். இடையில் விட்டது கையைப்பிடித்து இடுப்பைப் பிடித்து என்று அடி வாங்கியது ஏராளம். இந்த மூன்று பேரும் நேரில் வரவே வேறு ஒருத்தியோடு மும்பைக்கு ஓடிப் போனார். அவளுக்கு ஏற்கனவே இரண்டு பிள்ளைகள்."

அவளோடு அமெரிக்காவுக்குப் போவதாகச் சொன்னாராம். அவளுடைய பிள்ளைகள் விஷயத்தைத் தாயார் எடுத்துச் சொன்ன போது இனி அவர்கள்தான் என் பிள்ளைகள் என்று வசனம் பேசிவிட்டுப் போனாராம். ஆறு மாதத்துக்குள் அவள் ஏவலைச் செய்து அலுத்துப் போய் விட்டது. அப்போதே நல்ல குடியும் பழகியாயிற்று. வரை முறையற்ற பாலுறவு, குடி இரண்டும் உடம்பைத் தாக்கத் தொடங்கியதும், பாப்பாவுக்குப் பயம் வந்து, தாயிடம் ஓடி வந்து நின்றது. முப்பத்தைந்து வயதுக்குள் இத்தனையும். இனி ஒழுங்காக இருப்பேன் என்று தாயிடம் சத்தியம் செய்து கொடுக்கவே, அகல்யாதேவி ஓரளவு நம்பிவிட்டார்கள். எதற்கும் கண் பார்வையில் இருக்கட்டும் என்று அவரது மருத்துவ மனையிலேயே, ஒரு வேலை போட்டுக் கொடுத்திருக்கிறார், பிள்ளை அங்கே ஒரு தாதியைப் பதம் பார்த்து விட்டார்.

மருத்துவ மனைக்குள் ஒரே கசமுசாவாகி விட்டது. டாக்டரால் தலை நிமிர முடியவில்லை. மகன் அந்தர்த்தானம் ஆகிவிட்டார்.

சொந்த மருத்துவமனை. இரவும் பகலுமாக உழைத்து வளர்த்தது. அங்கே யாரையும் நேரே பார்த்துப் பேச முடியாமல் மருத்துவமனைப் பொறுப்பை அடுத்த டாக்டரிடம் கொடுத்துவிட்டுக் குற்றவாளியைப்போலத் தலை குனிந்து இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறார் டாக்டர்.

அவர் உழைப்பில் வளர்ந்த மருத்துவ மனையில் அவர் வெறும் ஸ்லீப்பிங் பார்ட்னர் மட்டுமே. டாக்டர் போட்ட முதல் காரணமாக, வருமானம் வருகிறது. அவ்வளவே மற்றபடி இந்த மகனால் அங்கே அவர் தலை காட்ட முடியாது போய் விட்டது.

நல்ல வேளையாக பத்திரிகை எழுதவும், டீவி நிகழ்ச்சிகள் நடத்தவும் ஏற்கனவே பல அழைப்புகள் இருந்ததால், ஏதோ செய்கிறோம் என்ற திருப்தி டாக்டருக்கு.

இப்போது சொல். அந்த சுந்தரவதனம் இருக்கும் டாக்டரின் வீடு உனக்குப் பாதுகாப்பானது என்று, பவானி நீ இன்னமும் நம்புகிறாயா?

பவானிக்குத் தலை சுற்றிப் போயிருந்தது.

சுந்தரவதனம் பெண் பித்தன், முழுக் குடியன் என்கிறான் புவனேசன். ஆனால், அவன் அவளைச் சரியாக நிமிர்ந்து கூடப் பார்ப்பது இல்லை. குடிப்பதும்... அப்படி அளவு மீறிக் குடித்து விட்டு, அவன் ஆட்டம் போட்டு அவள் பார்த்ததே கிடையாதே... வயது கூட முப்பத்தைந்து, முப்பத்தாறு வயதுதான் சுந்தர வதனத்துக்கு என்றால் எப்படி நம்புவது?

யாரோ இவனிடம் தப்புத் தப்பாகச் சொல்லி வைத்திருக் கிறார்கள். அல்லது வதந்தியை காக்க காக்காவாக வாந்தி எடுத்த மாதிரி வதந்தியை நம்பிச் சொல்லுகிறான்.

"இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரி..." என்று தொடங்கியவளை இடையிட்டு "டாக்டர் வாடகைக்கு இந்த வீடு வேண்டும் என்று கேட்டதும் விசாரித்தேன். பெயரும் புகழுமாக இருக்கும் டாக்டர். ஆள் நடமாட்டம் இல்லாத இந்த இடத்துக்கு ஏன் வர வேண்டும்? அதனால் ஆள் வைத்து விசாரித்து அறிந்தேன். எல்லாம் சரியான தகவல்கள், என்ன வேலையை விட்டுவிடுகிறாயா?"

"புவனன்... நீங்கள் சொல்வது எல்லாமே உண்மையாக இருந்தாலும், சுந்தரவதனம், ஆடிக் களைத்து ஓய்ந்துவிட்டார். இப்போது நல்லபடியாக இருக்கவே விரும்புகிறார். இன்னும் கொஞ்ச நாள் பக்கத்தில் இருந்து பாடுபட்டால்..."

"தப்பாக நினைக்கத் தோன்றும்."

"தப்பாகவா?" என்று கேட்கும்போதே பவானிக்குச் சிரிப்பு வந்துவிட்டது. "என் அப்பா வயது இருக்கும். அவரையும் என்னையும் பார்த்துத் தப்பாக நினைப்பார்களா? ஐய்யோ!" என்று மீண்டும் பொங்கிச் சிரித்தாள் அவள்.

அந்தச் சிரிப்பில் தன்னை மீறி முறுவலித்தபடி, "தப்பும்மா. தப்பாகப் புரிந்துகொண்டாய். நான் சொன்னது தப்பு எண்ணம் அவருக்கு வரக்கூடும் என்று" என்று விளக்கம் கொடுத்தான் புவனேசுவரன்.

அப்போதும் நகைத்தாள் அவள். "இந்த வயதிலா? ஊகூம்..." என்று பேச்சை இலகுவாகவே கொண்டு போய்விட எண்ணி விளையாட்டாய்த் தலையசைத்தாள்.

"அப்படி என்ன வயது என்கிறாய்? நாற்பதில் நாய்க் குணம் என்பார்கள். நாற்பதை ஒட்டித்தான் அவர் வயதும்" என்று மீண்டும் எரிச்சல் காட்டினான் அவன்.

"நாற்பது அதிக வயதுதான்..."

"மல்லி மில்ஸ்காரரிடம் பட்டும் புரியவில்லையா?"

"அந்த ஆள் மோசம். ஒரு விதிவிலக்கு என்று நீங்களே சொல்லவில்லை? மறுபடியும் அந்த ஆள் பெயரையே எடுக்கிறீர்களே" என்று ஆத்திரப்பட்டாள் அவள்.

"எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் ஓநாயாக விழுந்து பிடுங்குவது விதிவிலக்குதான். ஆனால் அழகான பெண்கள் தானாக அருகில் வந்தால், கட்டுப்பட்டிராத எல்லா ஆண்களுக்குமே ஆசை வரத்தான் செய்யும். விட்டால் நானே உன்னை என்னென்ன செய்துவிடுவேன் தெரியுமா?" என்று குரலில் அழுத்தத்துடன் கூறினான் புவனன்.

என்ன செய்வான்?

அறிந்து கொள்ளும் ஆவலில் பவானியின் மனம் படபடத்தது.

"ரொம்பத்தான் மிரட்டுகிறீர்களே. அப்படி என்ன செய்து விடுவீர்களாம்?" என்று அலட்சியமாகக்கேட்க முயலும்போதே, அவள் குரல் குழைந்து கொஞ்சியது.

முகம் இறுகக் காரை ஓரமாகக் கொண்டு போய் நிறுத்தினான் அவன்.

"என்ன என்றா கேட்டாய்? இதோ மாதிரிக்கு ஒன்று" என்று பவானியை அருகிழுத்து அணைத்து ஆழ முத்தமிட்டான் புவனேசுவரன்.



## 13



புவனேசுவரன் காரை ஒதுக்கி நிறுத்தியபோது, பவானி முதலில் ஒன்றும் நினைக்கவில்லை.

அவனோடு அறிமுகமாகி இத்தனை மாதங்களில் புவனன் தவறாக ஒரு பார்வை கூடப் பார்த்தான் என்று சொல்ல முடியாது. பேச்சில் கிண்டலாக ஏதாவது பேசுவான் என்றாலும், அது அவளை மடக்கவோ சிரிக்க வைப்பதற்காகவோதான் இருக்கும்.

இப்போது அவனது அணைப்பு. எல்லாவற்றையும் மாற்றிவிட்டது.

காருக்குள்ளான. சிறு இடம் தடுத்திராவிட்டால், அவள் அவன் மீது, என்னமாதிரிப் பின்னிப் படர்ந்திருப்பாளோ? அந்த அளவுக்குத்தன்னை மறந்து, ஓர் இனிய மயக்கத்துள் ஆழ்ந்து கொண்டிருந்தாள் அவள்.

எப்படி அவள் எதிர்பாராத வகையில், அவளை இழுத்து அணைத்தானோ, அதே போல அவளிடமிருந்து விலகிப் போனான் புவனன். லேசாத் தொண்டையைச் செருமிக் கொண்டு "பார்த்தாயா? இதையேதான் சுந்தரவனமும் விரும்புவார்" என்று அவளுக்கு விளக்கம் கொடுத்தான்.

மயக்கம் முழுதாகத் தெளிந்திராத பவானிக்கு, முகத்தில் பனி நீரை அடித்த மாதிரி இருந்தது.

ஆக, அவளைப் போல அவன் உணரவில்லை. உடம்பின் ஒவ்வோர் அணுவிலும் மின்சாரம் பாய்வது, அவளுக்கு இருந்த உணர்ச்சி அவனுக்குக் கொஞ்சமும் இருக்கவில்லை.

நடந்ததெல்லாம் சும்மா அவளுக்கு ஓர் எச்சரிக்கையாக நடத்தப்பட்டிருக்கிறது. வெறும் உதாரணம். இதில் மயங்கி அந்த மயக்கத்தைக் கண்டு மிரண்டு அவன் சொன்னபடி அவள் ஆட வேண்டும் என்பதுதான் அவனது நோக்கம்.

அதற்காக ஒரு நேரடி எடுத்துக்காட்டு. அவ்வளவே.

உள்ளத்தின் வலியைக் காட்டிக் கொள்ளாமல் "பாருங்கள் புவனேசன், நீங்கள் சொல்லுகிற மாதிரி எண்ணங்கள், சுந்தர வதனம் சாருக்கு இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. அத்தோடு அவரது வயது பற்றியும் நீங்கள் தப்பாகச் சொல்லுகிறீர்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். டாக்டருக்கு மிகவும் சின்ன வயதில் திருமணமாகி, உடனேயே பிள்ளையும் பிறந்திருக்க வேண்டும். மேலும் எனக்கு எவ்வளவோ உதவிகள் செய்யும் டாக்டருக்கு கை மாறாகவேனும் நான் இதைச் செய்துதான் ஆக வேண்டும். செய்வதாக மேடத்துக்குக் கொடுத்த வாக்கை நான் காற்றில் பறக்க விட முடியாது" என்று பிடிவாதக் குரலில் கூறி முடித்தாள்.

"பட்டுத்தான் தெரிய வேண்டும் என்றால் பிறகு உன் விருப்பம்" என்று காரை எடுத்தான். அதற்குமேல் எதுவும் பேசவில்லை.

அவளது வீடு வரை வராமல் தெருமுனையில் அவளை இறக்கி விட்டவன், "வெளி நாடு சென்று வந்த விவரங்களைப் பற்றி சில நட்பு நிறுவனர்களுடன் விவாதிப்பதற்காக, அடுத்தவாரம் கோவை செல்லுகிறேன். அதனால் அடுத்த வியாழனன்று என்னை எதிர் பார்க்க வேண்டாம். கவனத்தோடு... அதுதான் உன்னைக் கவனித்துக் கொள்ள இப்போது உனக்கே தெரியுமே. வருகிறேன்" என்றுவிட்டுக் காரைக் கிளப்பிக் கொண்டு போய்விட்டான்.

அந்த வாரம் முழுவதும், பவானி மிகவும் கஷ்டப்பட்டுப் போனாள்.

புவனனின் கோபம் தன்னை இந்த அளவுக்குப் பாதிக்கும் என்று அவள் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. இரவுபகல்

எந்நேரமும், ஒரு சுமையாக இதயத்தை அழுத்துவது போன்ற உணர்வு. பகலில் சரியாக உண்ண முடியவில்லை. இரவில் தூக்கம் வரவில்லை.

நல்ல வேளையாக, டாக்டர் சில டிவி நிகழ்ச்சிகளில் மும்முரமாக இருந்ததால், இது அவர் கண்ணைத் தப்பியது. முன்பானால் கவனித்திருக்க மாட்டார். இப்போது கனிவு பரிவு காட்டுகிறாரே.

புவனனின் கோபம் சற்றும் நியாயம் இல்லை. தான் செய்வது சரிதான் என்பது அவளுக்குச் சற்றும் ஆறுதலைத் தரவில்லை.

கொலைகாரனுக்குக் கூட உணர்ந்து திருந்தும்போது மன்னிப்பு உண்டு. ஒரு கெட்ட பழக்கத்தைப் பெரிதாக நினைக்கக் கூடாது என்று புவனனுக்குத் தெரியவில்லையே என்று மருகத்தான் தோன்றியது.

ஆனால் இந்த மருகல் அவனுக்கு நியாயத்தை உணர்த்தித் தன் புறம் திருப்பவேண்டும் என்ற உறுதியை உண்டாக்கியதே தவிர, எடுத்த காரியத்தை இடையில் விட அவள் விரும்பவே இல்லை.

இடையிடையே, பவானிக்குச் சிலபல அதிர்ச்சிகளும் நேராமல் இல்லை.

ஒரு நாள் சுந்தரவதனம் குடிப்பதைப் பார்த்தபோது, அது ரொம்பப் பெரிய அதிர்ச்சிதான்.

"உடம்பு மனசு சரியில்லாதபோது, இது இல்லாமல் முடிவதில்லை. பவானிம்மா நீ என் பக்கத்திலேயே இருந்தால், உற்சாகமாக இருக்கிறதா? இந்த நினைப்பே வருவதில்லை. ஆனால் நீ உன் மற்ற வேலையையும் பார்க்க வேண்டும் இல்லையா?" என்றான் அவன்.

"என்னால் முடிந்தவரை வேலையைச் சீக்கிரம் முடித்துவிட்டு வந்து, உங்களோடு பேசிக்கொண்டிருக்கிறேன்" என்று வாக்களித்தாள் அவள்.

வாக்களித்தபடி அவனோடு பொழுதைக் கழிக்கவும் செய்தாள்.

சில சமயங்களில் சீட்டோ கேரமோ விளையாடிக்கொண்டு இருக்கும்போது விளையாட்டை நிறுத்தி விட்டு அவள் கையைப் பற்றி "பவானிம்மா நீ மட்டும் இல்லையென்றால் நான் என்ன கதியாகியிருப்பேனோ? என்னைக் காப்பாற்ற வந்த தெய்வம் நீ" என்று சொல்லி பற்றியிருந்த கையைக் கண்ணில் ஒத்திக் கொள்ளும் போது பவானிக்கு எப்படியோ இருக்கும்.

அன்னியரைத் தொட்டுப் பழக்கம் இல்லாததால் தன்னிச்சையாக இழுத்துக் கொள்ள முயலும் கைகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு அசையாமல் உட்கார்ந்து இதமாக ஏதாவது சொல்லுவாள்.

"எப்படியும் உங்களுக்குத் திருந்த வேண்டும் என்கிற எண்ணம் இருக்கிறதே. அதுவே உங்களை நன்றாக ஆக்கிவிடும். அனாவசியமாக மனதை அலட்டிக் கொள்ளாதீர்கள்" என்று ஆறுதலாகப் பேசுவாள்.

"நன்றாக ஆகித்தான் தீர வேண்டும். எவ்வளவோ சீராகிவிட்டது. இன்னும் மிச்சம் மீதிக் குறைபாடுகளைப் போக்குவது உன் கையில்தான் இருக்கிறது. என் நல்ல வாழ்வுக்கு நான் உன்னைத்தான் முழுக்க முழுக்க நம்பியிருக்கிறேன்."

கடவுளை நம்புகிற மாதிரி இப்படி முழுமையாக அவளை நம்பியிருப்பவனைக் கைவிட்டு விட்டுப்போக வேண்டுமாம்.

முகம் இறுக, "என்னால் ஆன உதவியைச் செய்ய, நான் ஒரு நாளும் பின் வாங்கவே மாட்டேன்" என்றாள் பவானி.

"அம்மாவுக்குக் கொஞ்ச நஞ்சச் சொத்து இல்லை, பவானி. கோடிக்கணக்கில் இருக்கிறது. அம்மா, எளிமையாக இருப்பதைப் பார்த்துப் பெரிதாக ஒன்றும் இல்லை என்று சாதாரணமாக எண்ணி விடாதே" என்றான் ஒரு தரம்.

“சாதாரணமாகவா? நான் ஒரு போதும் அவர்களைச் சாதாரணமாக எண்ணியதே இல்லையே. உண்டு உறங்குவதையே சிரமமாக உணர்ந்த என் தந்தையை வீட்டுக்குள்ளேனும் நன்றாக நடமாட வைத்தவர் டாக்டர்தான் தெரியுமா? எங்கள் குடும்பத்தில் யாருமே டாக்டரைச் சாதாரணமாக நினைப்பதில்லை. எங்கள் துன்பத்தை நீக்கக் கடவுளாகப் பார்த்து அவரை அனுப்பியதாகத்தான் நாங்கள் பேசிக் கொள்வோம். டாக்டர் மீது அவ்வளவு மரியாதை எங்களுக்கு” என்று நன்றியுடன் உரைத்தாள் அவள்.

சற்று யோசித்துவிட்டு “அப்படியானால் என் அம்மாவின் பேச்சுக்கு உங்கள் வீட்டில் அப்பீலே கிடையாது என்கிறாய்” என்றான் அவன்.

“நிச்சயமாய்” என்றாள் பவானி.

புவனேசுவரனைப் போல நியாயமற்று எதையும் அகல்யா தேவி சொல்லப் போவதும் இல்லை. அதை அவள் குடும்பத்தில் யாரும் மறுக்கப்போவதும் இல்லை.

“வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்காமல் சுந்தரத்தை வெளியே உலாவ அழைத்துப் போய் வா, பவானி, அது உங்கள் இருவருக்குமே நல்லது” என்று டாக்டர் கூற அன்றிலிருந்து தினம் ஒரு தரம் இருவருமாக உலாவச் செல்வது வழக்கமாயிற்று.

உடல் ஆரோக்கியத்துக்கான உலாவல் என்கையில் பவானி நினைத்ததில் பாதி கூட, சுந்தரவதனத்தால் நடக்க இயலவில்லை என்றாலும், திரும்பி வரும்போது அவனைக் கையைப் பிடித்துதான் பவானி கூட்டி வர நேர்ந்தது என்றாலும் உலாவல் தொடர்ந்து நடந்தது.

மாலை உலாவி வந்ததுமே, சுந்தரவதனம் ஓய்வெடுக்கச் சென்றுவிடுவது வழக்கம்.

அப்படி அவன் சென்றபின் ஒருநாள், டாக்டர் அகல்யாதேவி, பவானியிடம் மகனைப்பற்றிப் பேசினார். என்னதான் மருத்துவர் என்றாலும், பெற்ற தாய் என்பவளின்

ஆசைகள் ஒரு போதும் மாறுபடுவதில்லை என்று பவானி அப்போது உணர்ந்துகொண்டாள். உணர்ந்து டாக்டர் மீது பரிதாபமும் கொண்டாள்.

அன்று அகல்யாதேவி பேசியது, மகன் சுந்தரவதனத்தின் திருமணம் பற்றி.

தன் மகனால் ஒரு பெண்ணுக்கு நல்ல கணவனாக வாழ முடியுமா? இவனை மணக்கும் அந்தப் பெண் சந்தோஷமாக இருப்பாளா. என்றெல்லாம் டாக்டர் யோசித்திருப்பார் என்றே அவளுக்குத் தோன்றவில்லை.

மகனின் பிற்காலப் பாதுகாப்பையே பெரிதாக எண்ணியிருக்கக் கூடும் என்று யூகித்த போது, அவளுள் பரிதாப உணர்ச்சி மேலோங்கியது. தாய் மகன் இருவர் மீதும்.

டாக்டர் நியாயமற்றும் பேசவில்லை.

ஏழை பாழையான ஏதோ ஓர் அனாதைப் பெண்ணை மகனுக்குத் துணையாகக் கொண்டு வந்து விட்டால் தீர்ந்தது என்று அவர் எண்ணவில்லை.

மாறாக, வசதியற்ற வீட்டில் பெண் எடுத்தாலும், அந்தப் பெண்ணின் குடும்பத்தையும் உயர்த்த வேண்டும் என்று, அவர் கொண்டிருந்த நல்லெண்ணம் பவானிக்கும் மிகவும் பிடித்தது.

“பெண்ணைக் கொடுத்துவிட்டு, அந்தக் குடும்பம் கஷ்டப்படக்கூடாது, பவானி. அதனால் ஒரு வீடு வாங்கிக் கொடுத்து அவர்கள் நல்ல படியாக வாழ்வதற்குத் தேவையான அளவு வருமானம் வருகிற அளவுக்குச் சொத்தும் கொடுக்கலாம் என்பது என் எண்ணம். இது பற்றி உனக்கு என்னம்மா தோன்றுகிறது?”

இவ்வளவு செய்யாவிட்டால் அரைக் கிழம் ஆகிவிட்டவனை யார் மணப்பார்கள்? அத்தோடு ஓர் ஏழைக் குடும்பமும் பிழைத்துப் போகலாம் என்று யோசித்துவிட்டு “நல்ல ஐடியா” என்றாள் பவானி.

டாக்டரின் முகம் மலரவும், அவளுக்குக் கொஞ்சம் திக்கென்றது.

டாக்டர் அவசரப்பட்டு, உடனே ஏதாவது ஏற்பாடு செய்துவிட்டால், அந்த ஏழைக்குடும்பம் நொந்து போகாதா? என்னதான் வயிற்றுச்சாமி பெரிய சாமி என்றாலும் பெண்ணின் வாழ்வையும் பார்ப்பார்கள்தானே? அவ்வப்போது சுந்தரவதனம் குடிப்பது, டாக்டருக்குத் தெரியாவிட்டாலும், பவானிக்குத் தெரியுமே. தினந்தோறும் குடிக்கிறான் என்று இல்லைதான். ஆனால் என்றேனும் ஒரு நாள் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளே சரக்கு இறங்குவது சுந்தரவதனமே அவளிடம் ஒப்புக் கொண்ட உண்மை ஆயிற்றே. இது எப்போதேனும் கட்டு மீறிவிட்டால்?

ஆனால் மகன் திருந்திவிட்டான் என்று நம்பிக் கொண்டிருக்கும் தாயிடம் உண்மையைச் சொல்லி நோகடிக்கவும் அவளுக்கு இதுவரை மனம் வரவில்லை. சொல்லிக்கொடுத்து விடாதே, பவானி, என்ன ஏது என்று கேளாமல் அம்மா என் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி விடுவார்கள். இதை அடியோடு விட்டுவிடுவதற்காக நான் என்ன பாடு பட்டுக் கொண்டிருக்கிறேன் என்று யோசிக்கவே மாட்டார்கள் என்று சுந்தரவதனம் கெஞ்சியதும், மருத்துவரிடம் அவள் இது பற்றிக் கூறாததின் ஒரு காரணம். மகனுக்கும் திருந்துவதுதானே நோக்கமாக இருக்கிறது? அடித்தளமாக, அந்த நோக்கம் இருக்கிறபோது, மெல்ல மெல்ல நிறுத்தி விடுவான்தானே என்று எண்ணியிருந்தாள்.

ஆனால் திருமணம் என்று வரும்போது, நடப்பது நடக்கட்டும்... யாரோ ஒருபெண்... எப்படியோ போகட்டும் என்று சும்மா இருக்க முடியாது. ஒரு வேளை திருந்தாவிட்டால் என்றும் எண்ணிப் பார்த்தாக வேண்டும்.

அவசரமாக யோசித்து "ஆனால் உடனே திருமணம் பற்றி அவசரம் வேண்டாம் மேடம். எதற்கும் மறுவாழ்வு மையம் ஒன்றில் உங்கள் மகனைச்சேர்த்து இந்தப் பழக்கம் அடியோடு

போய்விட வழி வகுத்துவிட்டு, அல்லது போய்விட்டதா என்று உறுதி செய்து கொண்டு அப்புறம் திருமணம் பற்றி அடுத்த அடி எடுத்து வைக்கலாம்'' என்றாள் அவள்.

இப்படிச் சொன்னதில் சுந்தரவதனத்தையும் காட்டிக் கொடுக்காமல் அவன் நல்லபடி வாழவும் வழி வகுத்துவிட்ட திருப்தியில் பவானிக்குப் புன்னகை கூட மலர்ந்தது.

அகல்யாதேவிக்கும், அவள் இப்படி ஆழ யோசித்துச் சொன்னதில் சந்தோஷம்.

''சுந்தரம் கொடுத்து வைத்தவன். அதனால்தான் சரியான சமயத்தில் நீ கிடைத்திருக்கிறாய்'' என்று கூறி மகிழ்ந்தார்.

'காலத்தினாற் செய்த உதவி சிறிதெனினும்

ஞாலத்தின் மாணப் பெரிது'

என்று வள்ளுவர் சும்மா சொல்லவில்லை. ஆனாலும் உரிய நேரத்தில் சொல்லப்பட்ட சிறு யோசனைக்கே இவ்வளவு மதிப்பா?

அதிகப்படி என்று தோன்ற ''உங்களுக்கு நான் இன்னமும் எவ்வளவோ செய்யக் கடமைப் பட்டவள்'' என்றுரைத்து அகல்யாதேவியை இன்னமும் மகிழ வைத்தாள் பவானி.

தன்னையறியாமல் தன்னைச் சுற்றிலும் ஒரு வலையைப் பின்ன, தானே உதவிக்கொண்டு இருக்கிறோம் என்பது புரியாமல் கூட்டுப் புழுவைப்போல சந்தோஷமாகத் தலையாட்டிக் கொண்டிருந்தாள் அவள்.



## 14



**ம**கன் சுந்தரவதனத்தின் நல்வாழ்வு ஒன்றே, தலையாய முக்கியத்துவம் பெற்றுவிட, அதை உறுதிப்படுத்திக் கொள்ளும் விதமாக டாக்டர் அகல்யாதேவி ஒருசில முன்னேற்பாடுகளைச் செய்யலானார்.

அதில் ஒன்று, அ;ந்த மாத வாடகையை முன் கூட்டியே தபாலில் அனுப்பி வைத்தது.

அந்த மாதம் ஒன்றாம் தேதி வெளியே செல்ல இருப்பதால், சம்பந்தப் பட்டவர்கள் அனாவசியமாக வந்து ஏமாற வேண்டாம் என்று ஒன்றாம் தேதியிட்ட வாடகைச் செக்கை இப்போதே அனுப்பியிருப்பதாகவும், பெற்றுக் கொண்டதற்குத் தகவல் தெரிவிக்குமாறும், சிறு குறிப்பு ஒன்றையும் உடன் வைத்திருந்தார்.

செக் கிடைத்ததாகப் புவனேசுவரனின் அலுவலகத்திலிருந்து பதில் தகவல் கிடைக்கவும், இந்த மாதம் புவனேசுவரன் வரமாட்டான் என்று நிம்மதியடைந்தார்.

காரியம் கனிந்து வரும் நேரம், அவன் எதையும் கெடுத்து விடக்கூடாதே என்ற எண்ணம் அவருக்கு. அவனது குடும்ப அந்தஸ்துக்கும், பவானி நிலையில் உள்ள பெண்ணுக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது என்றாலும், அவனோடு சுந்தரவதனத்தைப் பவானி ஒப்பிட்டு பார்த்துவிடக் கூடாது என்று நினைத்தார்.

பவானியை அவரிடம் வேலைக்கு அனுப்பியவன், புவனேசுவரன் என்பது அவர் அறிந்ததே. அந்த வகையில் பவானிக்கு அவனிடமும் நன்றி உணர்ச்சி இருக்கத்தான் செய்யும். அவன் வீட்டுப் பெரியவர்களுக்கு வேறு அறிமுகமானவன் அவன். அவனது ஆலோசனைக்கு அவள் மதிப்பும் மரியாதையும் கொடுக்கக்கூடும்.

தான் மணந்து கொள்ளாவிட்டாலும், சுந்தரத்தின் குறைகளைப் பவானியிடம் அவன் எடுத்துச் சொன்னால், அவள் அதற்கு மதிப்பளிக்கக்கூடும்.

வைக்கோல் போர் நாயாக புவனேசுவரன் செயல்பட மாட்டான் என்று என்ன நிச்சயம்? பொதுவாக, வக்கிரம்தானே இன்றைக்கு இயல்பாக இருக்கிறது?

எனவே, புவனேச்சுவரன், பவானி இருவரும் சந்திப்பதையே தவிர்க்க அதன் முதல் முயற்சியாகத்தான் வாடகை வாங்கும் சாக்கில் அவன் இங்கு வருவதைத் தடுத்து நிறுத்தியது.

முதல் முயற்சியில் வெற்றி பெற்றுவிட்டோம் என்று டாக்டர் மகிழ்ச்சியடைந்தபோது அந்த மகிழ்ச்சியைத் தகர்ப்பது போல புவனேசனே அங்கு வந்து நின்றான்.

அவன் கோபமாகச் சென்று ஒரு வாரத்துக்குப் பிறகு பார்க்கையில் பவானியின் கண்களில் நீர் மல்கியது. அவன் அறியாமல் அதைத் துடைத்துக் கொண்டு "வாருங்கள்... வாருங்கள்" என்று அவனை வரவேற்று ஹாலில் உட்கார வைத்து பழச்சாறு கொடுத்து உபசரித்தாள். "கோவைக்குச் சென்ற காரியம் என்ன ஆயிற்று" என்று விசாரித்தாள்.

"ம்! வெற்றிதான். ஒத்த மனமுடைய நிறுவனத்தார் நான்கைந்து பேர் சேர்ந்து முயற்சி செய்யப் போகிறோம். அதிருக்கட்டும். நீங்கள் எங்கேனும் வெளியே... வெளியூர் செல்வதாக இருந்ததா?" என்று விசாரித்தான்.

"இல்லையே..." என்று பவானி சொல்லிக் கொண்டு இருக்கும்போதே டாக்டர் அறையிலிருந்து அவசரமாக வெளியே வந்தார்.

"அடடே... புவனனா? வாப்பா. இஇன்று ஒரு டீவி நிகழ்ச்சிக்காக வெளியே போவதாக இருந்தேன். கடைசி நேரத்தில் ரத்தாகிவிட்டது. இல்லாவிட்டால் இப்போது யாரும் வீட்டில் இருந்திருக்க மாட்டோம். ஆனால் நீ எப்படி இன்றைக்கு இங்கே? உன்னை வரவேண்டாம் என்று... அதாவது யாரும் வரவேண்டாம் என்று எழுதியிருந்தேனே" என்று எப்படியோ பூசி மெழுகி விட்டு விசாரித்தார்.

"நான் இந்தப் பக்கம் வேறுவேலையாக வந்தேன். இந்த வீட்டுக்கு வெள்ளை அடிப்பது பற்றி அப்பா பார்த்துவரச் சொன்னார். வெளியே பார்த்தாலேதான் தேவை தெரிந்து விடுமே என்று வந்தேன். வந்து பார்த்தால், என் நல்ல நேரம் எப்படியோ... உங்கள் நிகழ்ச்சி எதிர்பாராத விதமாக ரத்தாகி நீங்களும் இங்கேயே இருக்கிறீர்கள். இப்போது நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் டாக்டர்? வீட்டுக்கு வெள்ளையடிக்க

வேண்டுமா? இல்லையா?'' என்று புவனன் இலகுவாகப் பேசினான்.

வெள்ளையடிப்பதனால் அதை மேற்பார்வை பார்க்க வென்று இவன் அடிக்கடி வந்து நிற்பான். ஒன்றில் இருந்து ஒன்று தொடரக்கூடும் எதற்கு வீண் வம்பு?

“வெள்ளையா? இந்த வீட்டுக்கா? இப்போது தேவையே இல்லையே. அடுத்த ஆண்டு பார்த்துக் கொள்ளலாம் என்று அப்பாவிடம் சொல்லுப்பா. வெளியே கூடப் பளிச்சென்று நன்றாகத்தான் இருக்கிறது.அனாவசியமாக வீண் செலவு பண்ணுவானேன்?'' என்று முடித்தார்.

“பரவாயில்லையே. வீட்டுச் சொந்தக்காரருக்குப் பணத்தை மிச்சப்படுத்திக் கொடுக்கும் முதல் வாடகைதாரர் நீங்களாகத் தான் இருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அப்பாவுக்குத்தான் சற்றுக் கவலை. வாடகைக்கு இருப்பவர் டாக்டர்.சுத்தத்தைப் பெரிதாக நினைப்பார்கள். நம் வீட்டில் வசித்துக் கொண்டு யாரும் குறைப்படக் கூடாது. விரும்பினால் வெள்ளையடிக்க ஏற்பாடு செய்துவிடு என்றார். ஆனால் எனக்குத்தான் ஒரு சந்தேகம் இருந்தது. பார்த்தால் நான் நினைத்த மாதிரியே நீங்கள் சொல்லி விட்டீர்களே. சரி. நீங்கள் இப்படிச் சொன்னதாக அப்பாவிடம் தெரிவித்து விடுகிறேன்'' என்று முறுவலித்தான் புவனன்.

பவானிக்கு ஏதோ மனதைக் குழப்பியது.

டீவி நிகழ்ச்சி ரத்து எல்லாம் அவள் அறியாத விஷயம். டாக்டர் அவளிடம் சொல்ல மறந்திருக்கலாம். அல்லது சொல்லத் தேவையில்லை என்று கூட சொல்லாமல் விட்டிருக்கலாம். இரண்டுமே ஒன்றும் மகாப் பெரிய விஷயங்கள் அல்ல.

ஆனால் புவனன் அதற்கு முக்கியத்துவம் கொடுப்பது போல அவளுக்கு ஏனோ தோன்றியது. வேண்டியதுதானே? என்னவோ, வெள்ளையடிக்கக் கூடாது என்பதற்காக, டாக்டர் சுத்தத்தைக் கூட அலட்சியம் செய்வது போலத் தோன்றும்படி பேசுகிறானே.

ஆனால் சிரித்துக் கொண்டு சாதாரணமாகத்தான் பேசுகிறானோ.

கேலி கிண்டலில் விருப்பம் உள்ள அவன் இப்போது அதைப்போலவேதான் பேசுகிறானோ?

ஏதோ மறைபொருளை வைத்து மட்டம் தட்டுவதாகத் தோன்றுவது, அவளது கற்பனைதானா?

பவானி யோசனையோடு நோக்குகையில் "சுந்தரத்துக்கு ஐஸ் வேண்டுமா என்ற கேட்டுக் கொடு, பவானி. வேண்டாம் என்றாலும் கட்டாயப்படுத்திக் கொடு" என்று அவளை அங்கிருந்து அனுப்பினார் அகல்யாதேவி.

"கட்டாயப்படுத்திக் கொடுப்பதா? இந்த மாதிரித் தாதி வேலைக்குத் தனியாகச் சம்பளம் போட்டுக் கொடுக்கிறீர்களா?" என்று புவனன் கிண்டல் குரலில் கேட்பது, உள்ளே சென்று கொண்டிருந்த பவானியின் காதில் விழுந்தது.

"தாதியா? அவளை இந்த வீட்டுப் பெண்ணாக நினைக்கிறேன்..." என்று டாக்டர் தொடர்ந்து சொன்னதும்தான்.

வீட்டுப்பெண்ணாக.

சம்பளத்துக்கு வேலை பார்க்கிறவள் என்பதே இல்லாமல் எவ்வளவு பிரியமாக இருக்கிறார். அவரிடம் போய் புவனன் பணக்கணக்குப் பேசுவதே நன்றாக இல்லை. அடுத்து அவனைத் தனியாகப் பார்க்கும்போது அவனிடம் சொல்ல வேண்டும்.

ஆனால் அடுத்தமுறை புவனனைத் தனியாகச் சந்திப்பதற்கு அவள் சற்று காலம் காத்திருக்க வேண்டியிருந்தது.

முதல் காரணமாக டாக்டர் அகல்யாதேவி, பவானியின் விடுமுறை நாளை மாற்றிவிட்டார். ஒவ்வொரு வியாழக் கிழமையும் வீட்டுக்குப் போய் வருவது என்று இருந்தது மாறி வசதிப்பட்ட போது செல்வது என்று ஆயிற்று.

சில சமயங்களில் வயதும் வயதுக்கு மீறிய உழைப்பும் பாதித்ததாலோ என்னவோ, டாக்டரால் பழைய மாதிரித்

தொடர்ந்து வேலை செய்ய முடியவில்லை. இடையிடையே நிறுத்தி நிறுத்தி, பவானிக்கு வேலை கொடுத்தார். அதே வேலைதான் என்றாலும், கொஞ்சம் கொஞ்சமாகச் செய்யும் போது எந்த நேரம் செய்வது எந்த நேரம் முடிப்பது என்கிற ஒழுங்கு முறை தவறிப் போயிற்று. வெளியே ஒளிப்பதிவுக்குப் போய்வந்தால், விளக்கொளியால் தலைவலி வந்தது. அசதி ஏற்பட்டது. இதனால் வேலை நேரம் மாறுபட்டது.

இன்னும் சுந்தரவதனத்தின் தேவைகளைக் கவனிப்பதும், வேலைக்குக் குறுக்கே வந்தது.

இப்படிப் பல குறுக்கீடுகளின் காரணமாக பவானி வீட்டுக்குச் செல்வதிலும் குழப்படி ஏற்பட்டது.

'இன்னொருவர் என்றால் எப்படியோ? உன் வீட்டிற்குப் போகாதே' என்று சொல்ல டாக்டர் அகல்யாதேவிக்கு மனம் வரவில்லை. எனவே கிடைத்த நேரத்தில் எல்லாம் பவானியை அவள் வீட்டுக்குச் செல்வதாகவே ஆயிற்று. எனவே இந்த ஏற்பாட்டில் குறையென்று சொல்ல எதுவும் இல்லை.

என்ன முன்னைப்போல நாள் முழுவதும் வீட்டில் இருக்க முடியாமல் அரைமணி, ஒரு மணி நேரத்தில் திரும்பிவர நேர்ந்தது. அவ்வளவே.

அது போலச் செல்லும் நேரங்களில், புவனேசுவரன் நேற்று வந்தார், நாளை வருவார், சென்று ஐந்து நிமிஷங்கள்தான், ஆகிறது என்றெல்லாம் கேட்கும்போது பவானியின் மனம் தவிக்கும்.

ஆனால் அவனைப் பார்க்க வேண்டும்... பேச வேண்டும் என்று அவள், மனம் ஏங்குவதை வாய்விட்டுச் சொல்லும் தைரியம் வராது.

அவனுக்காக ஏங்குவதை எப்படிச் சொல்லுவது? சொன்னால் எப்படி எடுத்துக் கொள்வார்களோ என்ற தயக்கம் வாயைக் கட்டிப் போட்டது. அத்தை சாவித்திரி எவ்வளவோ பிரியமாக இருந்த போதும் அம்மா இருந்திருந்தால் ஒரு வேளை மனம் விட்டுச் சொல்ல முடிந்திருக்குமோ என்று கண் கலங்க

வைத்தது. குறைந்த பட்சம் மன உளைச்சலையேனும் கொட்ட முடிந்திருக்குமே.

மகளின் தவிப்பைப் பார்த்துவிட்டு ஏதோ ஒரு வகையில் புவனனைச் சந்திக்கும் வாய்ப்பை அவளுடைய தாயார் ஏற்படுத்திக் கொடுத்திருக்கவும் கூடும்.

அவன் மனதில் என்ன இருக்கிறது என்றுகூட அறிந்து கொண்டிருக்கலாம்.

இப்படி எதுவுமே முடியாமல் வேதனைப்பட நேர்ந்திராது.

இரு வாரங்கள் இப்படிச் சென்றபின். ஒரு நாள் கார் ஓட்டப் பழகிக் கொள்ளும்படி டாக்டர் பவானியிடம் கூறினார். சுந்தரத்தை அவ்வப்போது பவானியே வெளியே ஒரு டிரைவ் அழைத்துச் செல்லலாம் அல்லவா? வீட்டை விட்டு வெளியே சென்று வந்தால், சுந்தரத்துக்கு இன்னும் அதிக உற்சாகம் உண்டாகலாம்.

லட்சுமணன் நம்பிக்கைக்குரிய ஆள் என்றாலும், பவானியோடு என்றால் டாக்டருக்கு நிம்மதியாக இருக்கும். காரைக் கையிலே கொடு என்று சுந்தரம் சொன்னால் லட்சுமணனால் முடியாதே. அதே சமயம் பவானி சொன்னால் அவருடைய சுந்தரமே கேட்பான்.

அந்த அளவுக்குப் பவானியின் பேச்சுக்கு சுந்தரத்திடம் மதிப்பு இருக்கிறது.

இந்த விஷயத்தில், பவானிக்குச் சந்தேகம்தான். அவள் எவ்வளவோ எடுத்துச்சொன்ன பிறகும், இடையிடையே தாகசாந்தி செய்வதைச் சுந்தரவதனம் இன்னமும் விட வில்லையே.

அவள் அதிகம் சொன்னால் "ஒரேயடியாக விடக்கூடாது பவானி. அப்புறம் நரம்புத் தளர்ச்சி வந்துவிடும். என்னை மாதிரி கொஞ்சம் கொஞ்சமாகத்தான் குறைத்துக் கொண்டே வந்து, நிறுத்த வேண்டும். எல்லாம் இது பற்றிப் படித்த பெரிய பெரிய டாக்டர்கள் சொன்னதுதான். நீ வேண்டுமானால், என்னைக் காட்டிக் கொடுக்காதபடி, அம்மாவிடமே கேட்டுப் பாரேன்.

ஆனால், நீ கேட்டாலே அம்மா சந்தேகப்பட்டு விடுவார்கள். அப்புறம் என்னையும் வெளியே துரத்தி விடுவார்கள். கேட்கப் போகிறாயா?'' என்ற சோகமாகக் கேட்டான் அவன்.

அப்புறம் எப்படி அகல்யாதேவியிடம் இது பற்றிப் பேச முடியும்?

மறு வாழ்வு மையத்தில் சுந்தரவனததைச் சேர்க்க வேண்டும் என்று பவானி சொல்ல இதுவும் ஒரு காரணம். இதற்கென்றே, இந்த மையங்களை நடத்துகிறவர்களுக்கு சுந்தரவதனத்துக்கு என்ன செய்ய வேண்டும் என்று நன்றாகத் தெரியும். நரம்புத் தளர்ச்சி மற்ற எந்த நோயுமே நோயாளியைத் தாக்க அவர்கள் விட்டுவிட மாட்டார்கள்.

அவனை மணக்கும் பெண்ணோடு, அவனையும் காப்பாற்றியதாக ஆகும்.

அவளுக்குப் பல நன்மைகளைச் செய்து வரும் டாக்டருக்கு, அவளால் ஆன சிறு கைமாறு.

கார் ஓட்டப் பயிலுமாறு மருத்துவர் கூறியதும், பவானிக்கும் மிகுந்த மன நெகிழ்வை ஏற்படுத்தியுது.

எல்லா இளம் பெண்களையும் போல அவளும் ஆசைகள் பல உள்ளவள்தான் ஆனால் தெரிந்தே எட்டாக் கனவுகள் காணுகிறவள் அல்ல. உடன் பயின்ற சில பணக்காரப் பெண்கள் வெகு லாவகமாகச் சொந்தக்காரை ஓட்டி வரும்போது தானும் அப்படி ஓட்டுவது போல, ஆசையோடு நினைத்துப் பார்த்திருக்கிறாள்தான். ஆனால் உடனேயே, இது ஒரு காலத்திலும் நம்மால் அடைய முடியாதது, கிட்டாதாயின் வெட்டென மறக்க வேண்டும் என்று பிடிவாதமாக அந்த ஆசையை முளையிலேயே கிள்ளி விடுவாள்.

இது சொந்தக் கார் அல்லதான். ஆனாலும் காரை ஓட்ட வேணும் முடிவது என்றால்... என்னவோ ஒரு பெரிய வரம் கிட்டி விட்டாற்போல மனதிற்கு இதமாக இருந்தது.

பவானிக்குக் கார் ஓட்டக் கற்றுக் கொடுத்தது லட்சுமணன் தான்.

ஆர்வமும், எதையும் திருத்தமாகச் செய்யும் இயல்பும் இருந்ததால் , வெகு விரைவிலேயே மூன்று தினங்களிலேயே பவானி அழகாகக் கார் ஓட்டத் தொடங்கினாள்.

திரும்பி வரும்போது அவளே ஓட்டிக்கொண்டு வந்தாள்.

“நல்லா ஓட்டறீங்கம்மா” என்று லட்சுமணன் பாராட்ட, அந்த மகிழ்ச்சியோடு உள்ளே வந்தால், அந்த வீட்டு வாடகை ஒப்பந்தப் பத்திரமும், வாடகை ரசீதும், மேஜை மேல் இருந்தன.

கார் விஷயமே அடியோடு மறந்துவிட அவைகளை யார் கொண்டு வந்திருக்கக்கூடும் என்று பவானியின் மனம் பரபரக்கத் தொடங்கியது. புவனன் வந்திருப்பானோ, அவனாக வந்த நேரத்தில் வீட்டில் இல்லாமல் போனோமோ என்பதில்தான் பரபரப்பே.

ஆனால் யாரிடம் கேட்பது?

ஒரு வேளை, டாக்டராகச் சொல்லக் கூடும் என்று ஒரு நப்பாசை தோன்ற ஆவலோடு காத்திருந்து பார்த்தாள்.

ஆனால், அகல்யாதேவிக்கு அந்த எண்ணம் இருப்பதாகவே தெரியவில்லை.

மேலும் காத்திருக்க முடியாமல் சும்மா பொதுவாக கேட்பது போல “இஇது என்ன மேடம்?” என்று விசாரித்தாள் அவள்.

“எது...? ஓ இந்த வாடகை ஒப்பந்தப்பத்திரமா? நான் இங்கே வந்து இரண்டு ஆண்டுகள் முடிகிறதில்லையா? ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க, வீட்டுச் சொந்தக்காரர் மிஸ்டர் ஞானலிங்கம் அனுப்பியிருக்கிறார்” என்றார் டாக்டர் அசுவாரசியமாக.

திரு. ஞானலிங்கம்தான், புவனனுடைய தந்தை, அவர் இதை யாரிடம் அனுப்பினார்? புவனனிடமா? அல்லது வேறு யார் மூலமாகவா?

ஆனால் இதை வாய்விட்டுக் கேட்கும் தைரியம் வர மறுத்தது.

யார் வந்தால் என்ன? எதற்குக் கேட்கிறாய்? என்று டாக்டர் கேட்டால் என்ன பதில் சொல்லுவது?

அறிமுகம் ஆனவனே என்றாலும், ஒரு மேல்தட்டு வாலிபனைப் பற்றி விசாரிப்பது சற்று அசுசியாகத் தோன்றக் கூடும் அல்லவா?

ஏனெனில் தெரிந்தவன், இந்த வேலைக்குச் சிபாரிசு செய்தவன் என்பதற்கு மேலாக பெரிதாகச் சொல்லும்படியாக அவர்களுக்கிடையே என்ன இருக்கிறது?

வாயை மூடிக் கொண்டு அடுத்த வேலையைப் பார்த்தாள் அவள்.

மறுநாள் வீட்டை விட்டு வெளியே செல்ல பவானிக்கு மனமே வரவில்லை. டாக்டரும், அவளை அனுப்பவில்லை.

ஆனால் யாரை எதிர்பார்த்துப் பவானி வீட்டில் அடை காத்தாளோ அந்தப் புவனேசுவரனும் வரவே இல்லை.

மறுநாள், அவளைக் கட்டாயப்படுத்தி அனுப்பி வைத்தார் டாக்டர். "கார் ஓட்டப் படித்தால், அதை இடையிடையே விடக் கூடாது. இன்று வெகு தூரம் சென்று நன்றாகப் பயின்றுவிடு. சற்று நேரம் ஆனாலும் பரவாயில்லை. மற்ற வேலைகளைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று அவர் அழுத்தமாகக் கூறியதை மறுக்க மாட்டாமல் காரில் ஏறினாள் அவள்.

ஆனால் டாக்டர் சொன்னதுபோல வெகுதூரமாக எங்கும் செல்லாமல் அந்தச் சாலையிலேயே முன்னும் பின்னுமாகச் சென்று கொண்டிருந்தாள்.

அதனால்தான் அவளால் புவனேசுவரனைச் சந்திக்கவும் முடிந்தது.

அப்போதும், அவளாகப் புவனனைக் கண்டு கொள்ள வில்லை. புதிதாகக் காரோட்டப் பயிலுகிறவள் என்பதால் அடிக்கடி சாலையை விட்டுப்பார்வையை எடுக்க அவளுக்குத் தைரியம் வரவில்லை.

ஆனால் புவனனே அவள் காரை ஓட்டிக் கொண்டு இருப்பதைப் பார்த்துவிட்டு அவனது காரை அருகே கொணர்ந்து அவளை அழைத்துக் காரை நிறுத்தச் செய்தான்.



## 15



**கா**ரை நிறுத்தச் சொன்ன போதும், புவனேசுவரன் முதலில் பேசியது லட்சுமணனிடம்தான்.

"பாருங்கள் லட்சுமணன், என் காருக்குப் புது டயர் வாங்கியது சரியாக செட்டாகவில்லை. இதே ரோடில் இரண்டு கிலோ மீட்டர் உள்ளே போனால் வீல் அலைன்மெண்ட் பார்க்கிற இடம் ஒன்று இருக்கிறது. என் காரைக் கொண்டுபோய்ப் பார்த்துவிட்டு வந்து விடுகிறீர்களா? பவானியுடைய தந்தை, அவளிடம் ஒரு சேதி சொல்லச் சொன்னார். நீங்கள் திரும்பி வருவதற்குள் அதையும் சொல்லிவிட்டு இந்த மேடம் எப்படிக் கார் ஓட்டுகிறார்கள் என்றும் பார்க்கிறேன். திரும்பிப்போய் அவள் அப்பாவிடம் தெரிவித்தால் சந்தோஷப்படுவார். என்ன லட்சுமணன் உங்கள் காரை என் பொறுப்பில் விட்டுப் போகலாம்தானே? அல்லது பயமாக இருக்கிறதா?" என்று வேடிக்கைபோலக் கேட்டான்.

"அய்யோ என்னங்க சார். என்னை விட மேடத்துக்கு நீங்கள் நன்றாகக் கற்றுக் கொடுப்பீர்கள். இப்போது என்னை நம்பி உங்கள் காரைத் தருகிறீர்களே அது தான் பெரிது" என்று வாயெல்லாம் பல்லாகக் காரை விட்டு இறங்கி நின்றார் அந்த ஓய்வு பெற்ற ராணுவ வீரர்.

"ஸ்டெப்னியையும் போட்டுப் பார்த்துவிடுங்கள்" என்று புவனன் கொடுத்த பணத்தை வாங்கிக் கொண்டு அவர் காரை ஓட்டிச் சென்றார்.

காரில் ஏறிப் பவானியின் அருகில் அமர்ந்து கொண்டு "காரைக் கொஞ்ச தூரம் ஓட்டு. லட்சுமணன் திரும்பி வரும்போது இதே இடத்தில் நின்றால் நன்றாக இராது" என்றான் அவன்.

அவன் குற்றம் சொல்லிவிட முடியாதவாறு கவனத்துடன் காரைக் கிளப்பினாள் பவானி.

நேர் சாலையில் கார் ஓடத் தொடங்கியதும், "உங்கள் காரில் மெய்யாகவே பிரச்சனை இருக்கிறதா?" என்ற விசாரித்தாள்.

"இல்லை. ஆனால் உன்னிடம் பேசுவது, இப்போதெல்லாம் லேசில் முடிகிற காரியமாக இல்லையே. விடுமுறை நாள் கண்டபடி மாறுகிறது. இங்கே உன்னைப் பார்க்கவும் வழியைக் காணோம். ஒன்று என்னை வரவேண்டாம் என்கிறார்கள். அல்லது நான் வருகிற நேரத்தில் உன்னை வெளியே அனுப்பி விடுகிறார்கள். இந்த டாக்டர் என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. என்னவோ சதி வேலையாகத் தோன்றுகிறது" என்று வேகமாகப் பேசினான் புவனன்.

"சதியா? நிறைய மர்மக்கதைகள் படிக்கிறீர்களா புவனன்? சதி கிதி என்கிறீர்களே" என்று சிரித்தாள் பவானி.

"இன்னமும் ஏதோ திட்டம் போட்டு, டாக்டர் வேலை செய்வது உனக்குப் புரியவில்லையா பவானி? அல்லது உனக்கும் அது சம்மதம்தானா? முதலில் ஓரமாய் ஒதுக்கிக் காரை நிறுத்து. உன்னிடம் பேச வேண்டும்."

பவானி காரை நிறுத்தியதும் அவள் புறமாகத் திரும்பி அமர்ந்து கொண்டு "நீயும் நானும் சந்தித்துப் பேசுவது டாக்டருக்குப் பிடிக்கவில்லை பவானி. ஆயிரம் விதமாய், அதைத் தடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதை முதலில் புரிந்து கொள்" என்றான் அழுத்தமான குரலில்.

"எப்படிச் சொல்லுகிறீர்கள்?"

"நம் வியாழக்கிழமைச் சந்திப்புகள் தெரிந்ததாலேயே உன் விடுமுறை நாளை மாற்றியிருக்கிறார்கள். வாடகை வாங்க வர

வேண்டாம் என்றது. வாடகை ஒப்பந்தப் பத்திரம் கொண்டு வருகிறேன் என்றதும் உன்னை வெளியே அனுப்பியது... எல்லாம் வேறு என்னவாம்?"

சற்று யோசித்துவிட்டு "இதெல்லாம் காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்த கதைதான் புவனன். மற்றபடி, நீங்களும் நானும் சந்திப்பதில் அவர்களுக்கு லாபமோ, நஷ்டமோ என்ன வர முடியும்? காரணமற்று, அதைத் தடுப்பானேன்? அவர்கள் நல்லவர்கள், புவனன் எல்லோருக்கும் உதவுகிறார்கள். இது போல வக்கிரம் அவர்களுக்கு இருக்க வாய்ப்பில்லை" என்றாள் பவானி.

கிடைத்த வாய்ப்பில் சிரித்துப் பேசிக் கொண்டிராமல், அனாவசியமாக வாதாடிக் கெடுக்கிறானே என்றிருந்தது அவளுக்கு.

"அவர்களது திட்டம் எதையும் நான் கெடுத்துவிடக் கூடும் என்று அஞ்சுகிறார்களோ, என்னவோ. அந்தச் சுந்தர வதனத்துக்கு நீ ஏதேதோ பணிவிடைகள் செய்வதாக உன் அத்தை சொன்னார்கள். அதுவே எனக்குப் பிடிக்கவில்லை. அதற்காகவே, நீ அங்கிருந்து வெளியேற வேண்டும்" என்றான் அவன்.

"என்ன புவனன் இது? டாக்டர் என் அப்பாவுக்கு எவ்வளவோ செய்திருக்கிறார்கள். சிகிச்சை முறை மருந்துகள் எல்லாம் அவர் தந்ததினால் அல்லவா என் அப்பா இப்போது நடமாட முடிகிறது. நீங்கள் வருமானத்துக்கு வழி செய்து பெரும் புண்ணியம் கட்டிக் கொண்டீர்கள். ஆனால் அந்த டாக்டருக்கு எவ்வளவோ பிடிக்கவில்லை என்று சொன்னால், கேட்பதற்குக் கொஞ்சம் கூட நன்றாக இல்லை" என்றுரைத்து முகத்தை வெளிப்புறமாக திருப்பிக் கொண்டாள் அவள்.

இவனைப் பார்க்க வேண்டும் என்று அவள் ஏங்கியது என்ன?

இவன் வீண் வாதம் செய்து அதை வீண்டிப்பது என்ன?

இரண்டு மாதங்களாக இவனது வேடிக்கைப் பேச்சும் சிரிப்பும் இல்லாமல் அவள் எவ்வளவு வாடிப்போய் இருக்கிறாள் என்று அவனுக்கு ஏன் புரியவில்லை?

கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது அவளுக்கு.

சிறு மௌனத்தின்பின் "இதெல்லாம் எங்கே கொண்டு விடப் போகின்றன என்று உனக்குப் புரிய வில்லை பவானி. ஆனால் நீ முட்டாள் அல்ல. விரைவிலேயே புரிந்துவிடும். அதுவரை, வாரம் ஒரு தரம் என்னுடன் டெலிபோனில் பேசு. உனக்கு ஓர் ஆபத்தும் இல்லை என்று நான் அறிந்து கொள்வதற்காகவேனும்" என்றான் அவன்.

அவளது ஆபத்து பற்றிப் பவானி பொருட்படுத்தவில்லை. டாக்டர் வீட்டில் பாதுகாப்புடன் இருக்கும் அவளுக்கு என்ன ஆபத்து வரமுடியும்? ஓய்வு பெற்ற ராணுவ வீரரின் காவல் வேறு.

ஆனால் அவனுக்கு போன் செய்வது பற்றிய தன் பிரச்சினையை அவள் சொன்னாள். "உங்களை ஓர் இடத்தில் என்று பிடிக்க முடிவது இல்லை. அலுவலகம், தொழிற்சாலை. வீடு என்று சுற்றிக்கொண்டே இருக்கிறீர்கள். புவனனோடு பேச வேண்டும். புவனனோடு பேச வேண்டும் என்று பெண் குரல் ஒன்று இந்த இடங்களுக்கு போன் செய்து கொண்டே இருந்தால், உங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள்? என்னைப் பற்றித்தான் என்ன எண்ணுவார்கள்?"

பைக்குள் கையை விட்டு ஒரு சிறு செல்போனை அவளிடம் கொடுத்தான் புவனன்.

"என் செல்போன் நம்பர் தருகிறேன். ஒவ்வொரு வியாழனன்றும் பேசு."

"இது..."

"உன்னைப் பார்க்க முடிந்தால் கொடுத்து வைக்க வேண்டும் என்று வாங்கி வந்தேன். நீ பேசுவது யாருக்கும் தெரியத் தேவையின்றி, உன் அறைக்குள் இருந்தே பேசி

விடலாம். மற்றபடி, அந்த போனில் உன்னிடம் பேச வேண்டும் என்று சொன்னால் டாக்டர் விடுவதே இல்லையே."

"போனில் கூப்பிட்டீர்களா?"என்ற ஆச்சரியத்துடன் கேட்டாள் அவள்.

"பார்த்தாயா? நான் கூப்பிட்டதை, டாக்டர் உன்னிடம் சொல்லக்கூட இல்லைதானே. இரண்டு தரம் அழைத்தேன். குளிக்கப் போயிருக்கிறாள். வீட்டில் இல்லை என்ற சால்ஜாப்பு சொன்னவர், உனக்குத் தகவல் கூடத் தரவில்லை."

"டாக்டர் சொன்ன காரணங்கள் மெய்யாகவும் இருக்கலாம். புவனன், அத்தோடு இளைஞர்கள் கலந்து பழகுவது அவருக்குப் பிடிக்காது என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். அதனாலும், நீங்கள் கூப்பிட்டதைச் சொல்லாமல் இருந்திருப்பார்கள். அவர்கள் குணம் அப்படி, மற்றபடி, டாக்டர் எவ்வளவோ நல்லவர்கள், புவனன் இப்போதுகூட"

"இப்போதுகூட அப்படி என்ன அரும் பெரும் செயல் ஆற்றி விட்டார்களாம்?" என்று கேலி போல, ஏளனமாகக் கேட்டான் புவனேசுவரன்.

அவளும் சொல்லத் துடித்துக்கொண்டுதான் இருந்தாள்.

ஒரு சமயம் அழிந்து போகிற நிலையில் இருந்தது அவளுடைய குடும்பம், அதைத் தடுத்து ஓரளவு நல்ல நிலைக்குக் கொண்டு வந்தவர்கள் இருவர். இந்த இருவருமே, பரஸ்பரம் நன் மதிப்போடு இருக்க வேண்டும் என்று பவானி ஆசைப்பட்டாள்.

அகல்யாதேவி, அவளுக்குச் சம்பளம் கொடுக்கிறவர். வயதிலும் முந்திய தலைமுறை, அவரது புவனனைப் பற்றி மோசமாக எதுவும் சொன்னதில்லை. எனவே அவரது அபிப்ராயத்தை மாற்ற வேண்டிய அவசியமும் இருக்கவில்லை.

ஆனால் புவனனின் கருத்தை மாற்ற வேண்டியிருந்தது.

எனவே, "பாருங்கள், புவனன், நம் டாக்டருக்கு ஒரே மகன், முன்பு எப்படியோ இப்போது திருந்தி வந்திருப்பவர்.

இன்னொருவர் என்றால் என்ன செய்வார்கள்? மகனை 'ஜிம்'முக்கு அனுப்பி நன்றாக மேக்கப் செய்து காட்டி, கிட்டத்தட்ட அவர்கள் நிலையிலேயே ஒரு பெண்ணைப் பார்த்து, ஓசைப்படாமல் திருமணமும் செய்து வைத்து விடுவார்கள். ஆனால் டாக்டர் அப்படியல்ல யாராவது ஒன்றுமே இல்லாத ஏழைப் பெண்ணைப் பார்த்து கல்யாணம் செய்து வைத்து அந்தக் குடும்பத்தையும் நிலை உயர்த்தி நல்லபடியாக வாழ வைக்கப் போகிறார்களாம். அதற்குமுன் மறுவாழ்வு மையத்தில் சேர்த்து முழுவதாகக் குணப்படுத்தவேண்டும் என்று யோசனை சொன்னேன். அதற்குக்கூடச் சரியென்றார்கள். பெண் வீட்டில் எதையும் மறைக்கும் எண்ணம்கூட, அவருக்கு இல்லை. எவ்வளவு நல்லவர்கள் பாருங்கள்'' என்றாள் அவள்.

ஆனால், ''டாக்டர் மகனுக்குத் திருமணமா? பாவம். அந்தப் பெண்.'' என்றான் புவனன்.

''இப்போதைக்குப் பாவம் இல்லை என்று சொல்ல முடியாது, ஆனால் மறுவாழ்வு மையத்துக்குப் போய் வந்த பிறகு திருமணம் என்றால், டாக்டரின் திட்டம் அந்த ஏழைக் குடும்பத்துக்கு அதிருஷ்டம்தானே?''

புவனனின் முகம் அவன் அப்படி நினைப்பதாகக் காட்டவில்லை.

ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தவன், மீண்டும் அவளை நோக்கி, ''உன் அப்பா இப்போது தேவைக்கு நன்றாகவே சம்பாதிக்கிறார் என்று டாக்டருக்குத் தெரியுமா?'' என்று விசாரித்தான்.

யோசித்துப் பார்த்துவிட்டு, 'இல்லை' என்று தலையசைத்தாள் பவானி. ''நானாக அதுபற்றி அவர்களிடம் ஒன்றும் சொன்னதில்லை, புவனன், அதைத் தெரிவிப்பது என்றால், உங்கள் உதவியைப் பற்றிக் கூற வேண்டும். நீங்கள் முதலிலேயே எச்சரித்தபடி; முடிந்தவரை நானாக உங்களைப் பற்றி டாக்டரிடம் பேசுவது இல்லை. தொலைக்காட்சிப் படப்பிடிப்புக்குத் தவிர, டாக்டருக்கு எங்கும் செல்வது இல்லை.

எங்கள் வீட்டுக்கும் அப்படித்தான். அதனால் அவருக்குத் தெரிய வாய்ப்பில்லை.'' என்றாள்.

திரும்பி அவனை நேராக நோக்கி, "டாக்டர் அகல்யாதேவி குறிப்பிடும் ஏழைப் பெண் நீயாக இருக்கலாம் என்று நீ நினைத்துப் பார்த்ததே இல்லையா, பவானி?" என்று நிதானமாகக் கேட்டான் அவன்.

ஒரு கணம் திகைத்துப் போனாள் பவானி. இப்படிச் சொல்லி விட்டானே.

சட்டென முகம் சிவக்க, "என்னைப் பார்த்தால், அப்படி ஒன்றுமே. இல்லாத ஏழைப் பெண் போலவா தெரிகிறது?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

கண்களில் ஓர் ஒளி தோன்றி மறைய, "ஊகூம்" என்றான் புவனன். "எனக்கு அப்படித் தோன்றியதே இல்லைதான். ஆனால் டாக்டரம்மா அப்படி நினைத்திருக்கலாம் அல்லவா? நம்மிடம் சம்பளம் வாங்குகிறவள்தானே என்று..."

சற்று சமாதானமடைந்து, "ஒரு போதும், டாக்டர் அப்படி நினைத்திருக்கவே மாட்டார்கள். அவர்கள் எனக்குத் தரும் ஊதியமே, எவ்வளவு. அதற்கு மேல் என்னை ஏழைப் பெண்ணாக எப்படி நினைக்க முடியும்? மேடம் என்னோடு என்னென்ன விஷயங்கள் பேசுவார்கள் தெரியுமா? வயதிலும் அனுபவத்திலும், வாழ்க்கை நிலையிலும் இவ்வளவு பெரியவர்கள், நம்மைச் சம நிலையில் வைத்து இதையெல்லாம் பேசுகிறார்களே என்று நானே பலமுறை நினைத்து வியந்திருக்கிறேன். . நீங்களானால் புவனன், வெளிநாடு போய் வந்த பிறகு தொழிலை மட்டும்தான் தீவிரமாக நினைக்கிறீர்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. மற்றதில் எல்லாம், உங்களுக்கு ஒரே குழப்பம். அதனால்தான் நல்லவர்கள் என்று நீங்கள் அத்தாட்சி கொடுத்த டாக்டரைக் கெட்டவர்கள் என்கிறீர்கள். பாதுகாப்பான இடம் என்று சேர்த்துவிட்ட இடத்தை விட்டு வெளியேறு என்கிறீர்கள். எல்லாம் பயங்கரக் குழப்பம்" என்று முடித்தாள் பவானி.

“உலகில் உள்ள எல்லாமே, ஒரு நிலையில் மாறுகின்றவை தான் பவானி. உதாரணத்துக்கு... தண்ணீரை எடுத்துக் கொள். நூறு டிகிரிக்குச் சூடாகிற வரை தண்ணீராகவே இருக்கிறது. அதற்கு மேல் சூடுபடுத்தினால் நீராவியாகி அடியோடு உருமாறி, வாயு நிலைக்குப் போய்விடுகிறது. மனித மனமும் அதே போலத்தான். டாக்டராக இருந்த அகல்யாதேவி, இப்போது சுந்தர வதனத்துடைய அம்மாவாக மாறியிருக்கிறார்கள். இரண்டு பேருக்கும் உள்ள வேறுபாடுகளை நான் என்னதான் எடுத்துச் சொன்னாலும், இப்போது நீ ஒத்துக் கொள்ளப்போவது இல்லை என்று தெரிகிறது. சரி அதைப் பற்றி பேசி இப்போது நேரத்தை வீணாக்க வேண்டாம். லட்சுமணன் எப்போது வேண்டுமானாலும் வந்து விடலாம். இப்போது...”

“பவானி, நீ எனக்கு ஒரு சத்தியம் செய்து தருவாயா? இங்கே எப்போது என்ன நடக்கும் என்று எதுவும் சொல்ல முடியாது. அதனால் வழக்கத்துக்கு வேறுபாடாக எது நடந்தாலும் அதை உடனே எனக்குத் தெரிவிக்க வேண்டும். முக்கியமாகத் திருமணம் பற்றிப் பேச்சு வந்தால் என்னிடம் கலந்து பேசாமல் நீ எந்தப் பதிலும் சொல்லிவிடக்கூடாது. பொறு. நான் சொல்லி முடித்து விடுகிறேன். உனக்கு என்ன மாதிரி ஆபத்து வரக்கூடும் என்று என்னாலும் சரியாகச் சொல்ல முடியவில்லை. ஆனால் ஏதோ நிச்சயமாக நடக்கப் போகிறது என்று என் மனம் சொல்லுகிறது. இதுவரை என் மனம் தவறாக வழி காட்டியது இல்லை. அதனால்... பவானி எதற்கும் நீ எனக்குத் தினமும் போன் செய்கிறாயா? உன் குரல் கேட்டால் எனக்கு நிம்மதி என்ன? செய்கிறாயா?” என்று ஏந்தினாற்போலக் கையை நீட்டினான் புவனேசுவரன்.

அவள் வியந்த பார்வையுடன் சற்றே தயங்கவும், “எப்படி நன்றிக்கடன் தீர்ப்பேனோ என்பாயே. இதை உன் நன்றிக்கடன் தீர்ப்பதாக வைத்துக் கொள். செய்கிறாயா?” என்று மறுபடியும் கேட்டான்.

முகத்தில் வியப்பு மாறாவிட்டாலும் சரி, உன்னிஷ்டம் போல முக பாவனையோடு பவானி தன் கையை அவனது கை மீது வைத்தாள்.

தன் பெரிய கரத்தால் அவளது கையை அவன் இறுக மூடியபோது, தூரத்தில் அவனது காரின் ஹார்ன் ஒலி மெல்லக் கேட்டது.

புவனன் அவள் கரத்தை விடுவிக்க பவானி காரை மீண்டும் ஓட்டத் தொடங்கினாள்.



## 16



புவனேசுவரன் சொன்ன ஆபத்தில், பவானிக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லை.

ஆனால் தீவிரமும் வேகமுமாக அதை அவன் சொன்னவிதம், அவள் மனதில் பதிந்தது. திரும்பத் திரும்ப நினைக்க வைத்தது. நினைத்து நினைத்துப் பரவசமுறச் செய்தது.

புவனன் அவ்வளவு சொன்னான் என்றால் அது சரியோ, தப்போ சொன்னது அவளுக்காக அல்லவா? அவ்வளவு அக்கறை அவள் மேல் இருப்பதால் அல்லவா, சொன்னான்.

அதிலும் அவளது திருமண விஷயத்தில்.

சும்மா ஒரு நண்பனாக இருந்தும் அக்கறை காட்டலாம்தான். ஆனால் நண்பனின் அக்கறைக்கு ஓர் எல்லை இருக்கிறது. வேலை வாங்கித் தரலாம். வருமானத்துக்கு வழி காட்டலாம். நல்லது கெட்டது பற்றி ஆலோசனைகள் கூறலாம்.

ஆனால் திருமண விஷயத்தில் தலையிட முடியாது. அதுவும் அனுமதியின்றி.

அவளது திருமணம் பற்றிப் புவனன் இந்த அளவு ஈடுபாட்டுடன் சிந்தித்துப் பேசுகிறான் என்றால் அவன் மனதில் வேறு எண்ணம் இருக்கிறது என்றுதானே அர்த்தம்?

அத்தோடு அந்த செல்போன்.

அவனுக்கும் அவளுக்கும் இடையே மற்றவர் அறியாத ஒரு ரகசியப் பாலத்தை அல்லவா தந்துவிட்டுப் போயிருக்கிறான். அதுவும் முன்கூட்டியே திட்டமிட்டு வாங்கி வந்திருக்கிறான்.

'உன்னை ரொம்பவே நினைக்கிறேன்' என்று அவளுக்கு அறிவிக்கும் அடையாளமாகவே அது அவளுக்குப்பட்டது.

அன்றைய அணைப்புகூட, அவள் ஆத்திரப்பட்டு நினைத்ததுபோல, வெறும் எடுத்துக்காட்டு மட்டுமானது அல்ல. அவனும் உணர்ச்சி வசப்பட்டுத்தான் இருந்திருக்கிறான்.

அதனால்தான் கலியுக அர்ஜுனனாக வாழ்ந்த சுந்தர வதனத்தைக் கண்டதும் அந்த வீட்டிலேயே அவள் இருக்கக் கூடாது என்றிருக்கிறான். டாக்டர் அவள் மனதைக் கரைத்து மகனுக்குத் திருமணம் செய்து வைத்து விடுவார்களோ என்றெல்லாம் தப்புத் தப்பாகக் கற்பனை செய்து கலங்குகிறான்.

இருக்கட்டும், இன்னும் கொஞ்ச நாள் சுந்தரவதனம் சாரை, மறுவாழ்வு மையத்தில் சேர்த்து முழுமையாகக் குணப்படுத்தி அவருக்கு ஏற்றபடி ஒரு திருமணத்தையும் செய்து வைத்து விட்டால், அப்புறம் அவளுக்கு விடுதலை.

அதுவரை டாக்டருக்குச் செய்ய வேண்டிய நன்றிக்கடன் இருக்கிறது. தாய், மகன் இருவருமே அவளையே நம்பிக் கொண்டும் இருப்பதால் அந்தப் பணியைச் செய்துதான் ஆக வேண்டும்.

அதன் பிறகு, 'ஏற்றுக் கொண்ட பணியை முடித்து விட்டேன். இனி உங்கள் சித்தம். என் பாக்கியம். நீங்கள் என்ன சொன்னாலும் அதன்படி நடக்கிறேன்' என்று புவனனிடம் போய்ச் சொல்ல வேண்டும்.

அப்போது அவன் என்ன சொல்லுவான்?

உன்னைக் காதலிக்கிறேன் என்று புவனன் வெளிப் படையாக ஒரு தரம்கூடச் செல்லவில்லையே என்று பவானியின் மனம் ஒரு கணம் துணுக்குற்றது.

ஆனால் கைப்பையுள் இருந்த 'செல்'லைத் தொட்டுப் பார்த்ததுமே, அந்தத் துணுக்கம் மறைந்தது.

இதுவரை சொல்லாமல் சொன்னான். இனி வெளிப்படை யாகவே சொல்லுவான் என்று நிச்சயமாக நினைத்தாள்.

தன் யோசனையிலேயே மூழ்கியிருந்ததால், அன்றாட வேலைகளில் பவானி கோட்டை விட்டாள் என்று சொல்ல முடியாது. ஆனால் அவளது கவனம் சிதறியது நன்றாகவே தெரிந்தது.

கரு விழிகளில் கனவையும், முகத்தில் ஒரு பொலிவையும் கவனித்த அகல்யாதேவி சற்று யோசித்துவிட்டு லட்சுமணனை அழைத்துப் பேசினார்.

பிறகு, மகனின் அறைக்குள் சென்றார்.

அன்றிலிருந்து சுந்தரவதனம் காரில் 'டிரைவ்' போகத் தொடங்கினான்.

காரை ஓட்டியது பவானிதான் என்றாலும் லட்சுமணனும் கூடவே வந்தார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு லட்சுமணனுக்கு வேறு வேலைகள் இருந்ததால் பவானி தனியாகவே காரை ஓட்டிச் சென்றாள்.

"நீதான் நன்றாக ஓட்டுகிறாயே. அத்தோடு சுந்தரத்துக்கு லைசன்ஸ் இருப்பதால் அவன் மட்டும் கூட இருந்தாலே போதும். இருவருமாகப் போய் வாருங்கள்" என்றார் டாக்டர்.

ஒவ்வொரு நாளும் குளித்து உடைமாற்றிவிட்டு அறையிலிருந்து வெளியே வருமுன் புவனனோடு பவானி பேசுவாள்.

இடையூறின்றி, அதே சமயம் அடுத்தவர் அறியாது அவள் பேசக் கூடிய நேரம் அதுதான். ஆனால் அவனும் வேலைக்குக் கிளம்பிக் கொண்டு இருப்பானே. அதனால் வெறும் நலம் அறிதல், அறிவித்தலோடு பெரும்பாலும் பேச்சை முடித்து விடுவாள். அதிகப்படியாகக் காரை ஓட்டுவது சொல்லுவாள்.

சுந்தரவதனம் அவளோடு கூடப் போவது. அவனுக்குப் பிடிக்கவில்லைதான். ஆனாலும் பவானியால் மறுத்துக் கூற முடியாது என்பது அவன் அறிந்ததே. பவானியுமே, மறுப்பது அவசியம் என்று நினைக்கவில்லை என்பதும் தெரிந்திருந்ததால், எச்சரிக்கையோடு இருக்குமாறு கூறியதோடு புவனன் நிறுத்திக் கொண்டான்.

அத்தோடு ஓடுகிற காரில் கூட இருப்பதால் என்ன கெடுதல் நேர்ந்து விடப்போகிறது? வேண்டாத பேச்சு பேசக்கூடும் அவ்வளவே. அந்தப் பேச்சே பவானிக்கு வெறுத்துவிட்டால், ரொம்ப நல்லது.

இப்படி இரண்டு நாட்கள் சென்ற பிறகு அன்று சற்று அதிகம் தூரம் செல்ல, சுந்தரவதனம் பிரியப்பட்டான். கொஞ்ச காலமாக வீட்டுக்குள்ளேயே கிடந்ததற்கு, சுத்தமான காற்று முகத்தில் மோதுவது ரொம்பவும் சுகமாகவும், உற்சாகமூட்டுவதாகவும் இருக்கிறதாம்.

அப்படியே சற்று தூரத்தில் புதிதாகக் கட்டப்பட்டிருந்த ஆடம்பரக் குடியிருப்பில் வசித்துவரும் நண்பன் ஒருவனை எட்டிப் பார்த்துவிட்டு வரவும், சுந்தரவதனம் ஆசைப்பட்டான்.

இதைப் புவனனிடம் பவானி சொன்னதும், அவள் எதிர்பார்த்தது போலவே, "நீண்ட டிரைவும், நண்பன் வீடுமா? போகாதிருக்க முடியாதா, பவானி?" என்று கேட்டான் அவன்.

"இனி மறுத்தால் நன்றாக இருக்குமா? அவர்கள் கார், கார் ஓட்டக் கற்றுக் கொடுத்திருப்பதே இதுபோல ஓட்டுவதற்காகத் தான். உங்கள் டிரைவர் நீங்கள் சொல்லுகிற இடத்துக்குக் காரை ஓட்ட மறுத்தால் ஒத்துக் கொள்வீர்களா?"

"அதில்லை... இந்த நண்பன் வீட்டு சமாச்சாரம்தான் கொஞ்சம் உறுத்துகிறது..."

"தேவையே இல்லை, புவனன். அந்த நண்பனைப் பார்த்து, இங்கே அம்மாவோடு இருப்பதாகத் தெரிவித்து, அவ்வப்போது வந்து போகுமாறு அழைக்க மட்டும்தான். அது ஒன்றும் தனி

வீடும் அல்ல. ஃப்ளாட்தான். கவலையே படாதீர்கள்'' என்று குரலில் முறுவலுடன் கூறினாள் அவள்.

அவளுக்காக என்னமாய்க் கவலைப்படுகிறான். சுந்தரவதனத்தின் சொங்கித்தனத்தைப் பார்த்த பிறகும் அனாவசியமாக என்ன கவலை?

"ஓகே... நீ சென்று வருவதற்கு சுமார் எவ்வளவு நேரம் ஆகக் கூடும்?"

"சுமார் ஒன்றரை அல்லது இரண்டு மணி நேரம். ஏன்? வந்ததும், போன் பண்ணித் தகவல் கொடுக்க வேண்டுமா?" என்று கேட்டபோது அவள் குரல் தழைந்து குழைந்தது.

"தகவல் நான் தருகிறேனா, நீ தருகிறாயா என்று பார்க்கலாம்'' என்ற புதிரோடு பேச்சை முடித்தான் அவன்.

நண்பனுக்குக் கொடுக்க என்று ஒரு சிறு பெட்டியோடு, சுந்தரவதனம் காரில் ஏறினான்.

செல்லும் வழி நெடுக, அகல்யாதேவியின் மருத்துவ மனையைப் பற்றி, விவரித்துக் கொண்டே வந்தான் சுந்தரவதனம்.

ஒரு சிறு கிளினிக்காகத் தொடங்கி, கைராசியினால் பெரிய டாக்டராகி நிறைய சம்பாதித்து இந்த மருத்துவமனையை டாக்டர் எப்படிக் கட்டினார் என்று ஒரு கதை மாதிரிச் சொன்னான். "மருத்துவமனை இருக்கும் இடமே இப்போது மூன்று கோடி ரூபாய் பெறும் பவானி. முதலில் ஒரு தளத்தில் தொடங்கியது. இப்போது நாலு தளங்கள். அந்த இடத்து பஸ் நிறுத்தத்தையே அகல்யாதேவி ஆஸ்பத்திரி நிறுத்தம் என்றுதான் சொல்லுவார்கள். அந்த அளவுக்குப் பெயரும் புகழும், அம்மாவுக்கு உண்டு."

அந்த மாதிரிப் பெயரையும் புகழையும், பிடித்தமான தொழிலையும் விட்டுவிட்டு, ஒரு குற்றவாளியைப் போல டாக்டர் அகல்யாதேவி தலை குனிந்து ஓடி வந்தது தன்னால்தானே என்று என்றேனும் இந்த மனிதன் எண்ணிப் பார்த்திருப்பானா என்ற எண்ணம் முதல் முதலாகப் பவானிக்குத் தோன்றியது.

அப்படி எண்ணிப் பார்த்திருந்தால் அந்த மருத்துவ மனையைப் பற்றி இப்படி விலாவரியாக அளக்க முடியுமா?

பாவம் டாக்டர். ஆனால் என்னதான் தப்பு செய்திருந்தாலும் பெற்ற மகன். பாசம் விடவில்லை. இப்போது மீண்டும் மகன் நன்றாகி விட வேண்டும் என்று தவிக்கிறார்.

பிள்ளை முகம் பார்த்ததும், பிரசவ வலி மறந்து போகுமாமே. அதுபோல இந்த மகனால் பட்ட துன்பங்களை மறந்துவிட்டு அவன் நலம் பேண ஆனதைச் செய்கிறார்.

இந்த வாய்ப்பை விடக்கூடாது என்று கருதி, "அவ்வளவு பெயரும் புகழுமாக இருந்தவர்கள் வனவாசம் மாதிரி இங்கே வந்து தனியே வசிக்கிறார்களே. பாவமில்லை?" என்று கேட்டாள்.

சுந்தரவதனத்தின் பார்வை தன் மீது படிவதைப் பவானியால் உணர முடிந்தது.

பிறகு, "அதற்குப் பிராயசித்தம் செய்யத்தான் துடித்துக் கொண்டு இருக்கிறேன் பவானி. அம்மாவின் விருப்பம் போல நடந்து அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கப் போகிறேன்" என்றான் சுந்தரவதனம்.

"பின்னே அம்மாவுக்குத் தெரியாமல் இன்னமும் குடிக்கிறீர்களே." என்று வருத்தத்துடன் கேட்டாள் அவள்.

"ஆனால் அம்மா சொல்படி மறுவாழ்வு மையத்துக்குப் போய் அதை அடியோடு குணப்படுத்திக் கொள்ளப் போகிறேனே" என்று அவன் கூறவும், பவானி ஆறுதல் அடைந்தாள்.

மறுவாழ்வு மையத்துக்குப் போக மாட்டேன் என்று அடம் பிடிப்பானோ, அப்படி அடம் பிடித்தால் அவன் குடிப்பது பற்றி டாக்டரிடம் சொல்ல நேருமே என்று எண்ணிக் கொண்டு இருந்தவள் அவள். இப்போது அவனாகவே மையம் செல்வது பற்றி ஒப்புதலாகப் பேசவும் நிம்மதியாயிற்று.

அதுபற்றி அவள் கூறவும், சுந்தரவதனம் சிரித்தான். "வெறும் நிம்மதி மட்டும்தானா? இன்னும் பார். அம்மாவுக்கும் உனக்கும் உள்ளம் அப்படியே குளிரும்படி, நான் என்னென்ன சொல்லப் போகிறேன் தெரியுமா?"

"சொல்லுங்களேன்" என்றாள் பவானி மகிழ்ச்சியோடு.

"இதோ சொல்லுகிறேன். ஆனால் அதை நீ காரை ஓட்டிக் கொண்டே பாதி கவனத்தில் கேட்டுப் பயனில்லை. அதோ அந்தத் திருப்பத்தில்தான் நண்பன் ஃப்ளாட் இருக்கிறது. வலப்புறமாகக் காரைத் திருப்பு."

சுந்தரவதனத்துடைய நண்பனின் வீட்டுக்குப் போவது, ஏற்கனவே திட்டமிட்டதுதான்.

எனவே அவன் சொன்னபடி திருப்பிச் செலுத்தி அங்கிருந்த பெரிய கேட்டின் முன் காரை நிறுத்தினாள் பவானி.

"நீ காரிலேயே இரு. நண்பனிடம் பேசிவிட்டு இதோ வருகிறேன்" என்று காரை விட்டிறங்கி, கேட்டைக் கடந்து சுந்தரவதனம் உள்ளே சென்றான்.

மூன்று அடுக்கு வீடுகள். இரு புறமுமாக ஒவ்வொரு கட்டிடத்திலும், ஆறு ஃப்ளாட்டுகள். 'ப' வடிவில் மொத்தம் நாலு கட்டிடங்கள். நடுவில் நீச்சல் குளம். தரை மட்டத்துக்குக் கீழே உள்ள தளத்தில கார்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

எல்லாம் விலை உயர்ந்த கார்கள்.

அத்தனை வீடுகளிலும் ஏசி தலையை நீட்டிக் கொண்டு இருந்தன.

பணக்காரர்கள் மட்டும் வசிக்கும் இடம் என்பது காரோடும் பாதையிலிருந்து உயரே விசித்திரமான வடிவில் அமைக்கப் பட்டிருந்த தண்ணீர்த் தொட்டிவரை நன்றாகத் தெரிந்தது.

சுந்தர்வதனம் சீக்கிரமாகவே வந்து விட்டான்.

"மாது வீட்டில் இல்லை, பவானி. ஆனால் வெகு சீக்கிரமாக வந்து விடுவதாகவும் உள்ளே போய் உட்கார்ந்திருக்கும் படியாகவும் சொல்லி, வீட்டுச் சாவியைக் கொடுத்துவிட்டுப்

போயிருக்கிறான். வருகிறாயா? உள்ளே உட்கார்ந்திருக்கும் நேரத்தில் என் திட்டமெல்லாம் சொல்லுகிறேன்" என்று அவளை அழைத்தான்.

வெளிச்சத்தில் திரும்பி வந்துவிட வேண்டும் என்பதற்காக முன் மாலையிலேயே கிளம்பியிருந்தார்கள். வெயிலின் காட்டம் குறைந்திராததால், வெளியே காருக்குள் புழுக்கத்தில் அமர்ந்து வேர்த்து வடிவதைக் காட்டிலும், வீட்டினுள் இருப்பது மேல் என்றே பவானிக்கும் தோன்ற காரைப் பூட்டிக் கொண்டு சுந்தரவதனத்துடன் சென்றாள்.

இரண்டாவது தளத்தில் அந்த நண்பனின் வீடு. 'லிஃப்ட்'டே அவ்வளவு அழகாக இருந்தது. வீடும் அப்படித்தான் சலவைக் கல் தளம். ஷாண்டிலியர், சுவரில் அழகான சித்திரங்கள்.

ரசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தவளை அழைத்து, "அதையெல்லாம் அப்புறம் பார்த்து ரசிக்கலாம். முதலில் என் பேச்சைக் கேட்டு ரசிக்க வா." என்று அழைத்தான் சுந்தரவதனம். அவனது நண்பனுக்காகக் கொணர்ந்தது என்று பவானி நினைத்த பெட்டியைத் திறந்தபடி.

பெட்டியினுள்ளிருந்து அவன் ஒரு மதுபாட்டிலை எடுக்கவும், பவானி திகைத்தாள்.

கிட்டத்தட்ட அதே சமயத்தில், "உங்களிடம் பேச வேண்டும் டாக்டர்" என்றபடி எதிரே வந்து அமர்ந்த புவனேசுவரனைப் பார்த்து டாக்டர் அகல்யாதேவியும் திகைத்து தான் நின்றார்.



## 17



டாக்டரின் திகைப்பு, புவனேசுவரன் எதிர்பார்த்ததுதான். கூடவே அவர் மறைக்க முயன்ற கலக்கமும் அவன் கண்ணில் படாமல் இல்லை.

தன் சந்தேகங்கள் உறுதியாகிவிட, அவன் சற்று அழுத்தத் தோடு பேசினான். "என்ன டாக்டர், முகம் கொஞ்சம் வெளுத்தாற் போலத் தெரிகிறது. சுகமாக இருக்கிறீர்கள் அல்லவா?" என்று நலம் விசாரித்தான்.

அகல்யாதேவியும் சுதாரித்துக் கொண்டு, "என்னப்பா டாக்டர் நான் கேட்க வேண்டிய கேள்வியை நீ கேட்கிறாய்? நீதானே என்னைப் பார்க்க வந்திருக்கிறாய்? சொல்லு உடம்புக்கு என்ன?" என்று பதில் விசாரணை செய்தார்.

நல்ல கேள்வி கேட்டீர்கள் என்று எண்ணிக் கொண்டு, "டாக்டர், பொது மருத்துவமும் பார்த்தாலும், பிரசவம், தாய் சேய் நலத்தில்தான் தனித்தேர்ச்சியும் சிறப்பும் பெற்றவர்கள், நீங்கள் மருத்துவ ஆலோசனை கேட்டு நான் உங்களிடம் வருவது என்றால், என் மனைவி தாயாகிற நிலையில்தான் வருவேன். இல்லையா? சொல்லப் போனால், இப்போதும் அது சம்பந்தமாகத்தான் வந்திருக்கிறேன்." என்று தொடங்கினான் புவனன்.

"திருமணமே ஆகா..." என்று தொடங்கிவிட்டுச் சட்டென வாயை மூடிக் கொண்டார் டாக்டர்.

புவனன் என்ன சொல்ல வருகிறான் என்பது புரிந்தாற்போல, அவர் முகம் இறுகியது.

"நீங்கள் சொல்வது சரிதான் டாக்டர். திருமணமே ஆகாமல், மனைவியோ மனைவிக்குத் தாயாகிற நிலையோ எப்படி வர முடியும்? அதற்காகத்தான் என் திருமண விஷயமாகத்தான் உங்களிடம் கலந்து பேச வந்திருக்கிறேன்."

"உன் திருமண விஷயமாக முதலில் உன் பெற்றோரிடம் பேசுப்பா. அவர்களுக்குப் பிடித்த மாதிரியான, உன் குடும்பத்துக்குத் தகுந்தவளாக அந்தஸ்துக்கு ஏற்றவளாக யார் மனமும் நோகாமல் இருக்கும்படியாக..."

புவனேசுவரன் லேசான முறுவலுடன் தலையசைக்கவும், அவரது பேச்சு நின்றது.

சிறு அமைதியின் பின், "உனக்கு எத்தனையோ பெண்கள் கிடைப்பார்கள். ஏன், இவளை விடச் சிறந்த பெண்ணே கிடைப்பாள். ஆனால் என் மகனுக்குப் பணத்துக்காக அல்லாமல் இப்படிக் கடமை உணர்வும், பொறுப்புணர்ச்சியும் உள்ள எவள் கிடைப்பாள் சொல்லு. தயவு செய்து இதைக் கெடுத்து விடாமல் விலகிக் கொள்ளப்பா..." என்று கெஞ்சும் குரலில் கேட்டார் அகல்யாதேவி.

"கிடைக்கவே மாட்டாள். ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனால் யோசித்துப் பாருங்கள். நீங்களே ஒரு மருத்துவர். உங்கள் மகனின் உள்ளுறுப்புகள் இப்போது எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கும் என்பது உங்களுக்கு மிக நன்றாகத் தெரியும்."

"அது தெரிந்திருப்பதால்தானே, அவன் நிலையறிந்து அவனைப் பொறுமையோடு ஏற்றுக் கொள்ளும் ஒருத்தியைத் தேடிக் கண்டுபிடித்தேன். அதைக் கெடுக்காதேப்பா." என்று மீண்டும் கெஞ்சினார் டாக்டர்.

"நான் கெடுப்பது இருக்கட்டும் பவானியைப் போல உங்களுக்கு ஒரு பெண் இருந்தால் அவளை மிஸ்டர் சுந்தரவதனத்தைப் போல ஒருவருக்குப் பலியிடுவீர்களா? அதுவும் என்னைப் போல ஆரோக்கியமும், வசதியும் உள்ள ஒருவன் அவளை மணக்க முன்வரும் போது?"

"சொல்லாதேப்பா. சொல்லாதே. சுந்தரத்தைப் பற்றிப் பவானியிடம் நானே பேசியிருக்கிறேன். அவளுக்கும் சம்மதம் தான். முதலில் மறுவாழ்வு மையத்தில் சேர்த்து. முழுமையாகக் குணப்படுத்த வேண்டும் என்று யோசனை கூடச் சொன்னாள். அதை எடுத்துச் சொல்லி மையத்தில் சேர சுந்தரத்தைச் சம்மதிக்கவும் வைத்திருக்கிறேன். அவனும், இப்போது எவ்வளவோ மாறி விட்டான். குடிப்பது இல்லை. வேலைக் காரர்களுடன் கூட நன்றாகப் பழகுகிறான். ஜோக்கடிக்கிறான். அவர்களோடு உலாவக்கூடப் போய் வருகிறான். மனம், உடம்பு எல்லாம் நன்றாகிக் கொண்டு இருக்கிறது. எல்லாம் கூடி வருகிற நேரம், போட்டு உடைத்து விடாதே. ப்ளீஸ்."

முகத்தில் இரக்கத்துடன், மறுப்பாய்த் தலையசைத்தான் புவனன். "அவள் தந்தைக்கு உதவினீர்கள் என்று உங்களிடம் பவானிக்கும் நன்றி உணர்ச்சி அதிகம் உண்டு. அந்த நன்றிக் கடனாகத்தான் அவள் உங்கள் மகனுக்குப் பணிவிடை செய்தது. ஏழைப் பெண் பற்றி நீங்கள் சொன்னதை யாரோ ஒரு பெண்ணாக எண்ணி, அந்தப் பெண்ணின் வாழ்வு பட்டுப் போகக் கூடாது என்று அவள் சொன்ன யோசனைதான் மறுவாழ்வு மையமே. யோசியுங்கள், டாக்டர். இதையெல்லாம் அவள் என்னுடன் கலந்து பேசுகிறாள் என்றால் பவானியின் மனம் உங்களுக்குப் புரியவில்லையா? இன்னமும் விலகிப் போய்விடு என்பீர்களா?"

தரையில் பார்வையைப் பதித்தவாறு அசையாமல் அமர்ந்திருந்த டாக்டர், சுவர்க் கடிகாரம் ஒலிக்கவும் சற்றுப் பொறுத்து மெல்ல நிமிர்ந்தார்.

"பவானி திரும்பி வருகிற நேரம்தான். இருந்து அவளைப் பார்த்துப் பேசிவிட்டுப் போப்பா." என்றார் மெதுவாக. "சுந்தரத்துக்குத் திருமணம் செய்வது, அவ்வளவு சரியில்லை தான். இருக்கட்டும். அவன் இப்படியே இருந்து விட்டுப் போகட்டும்."

புன்னகை மலர, "உங்களிடம் நான் இதைத்தான் எதிர் பார்த்தேன் டாக்டர்." என்றான் புவனேசுவரன். "உங்களுக்கு இன்னும் ஒரு செய்தியும் இருக்கிறது. டாக்டர் சோர்வு நீங்கி நடமாடும் அளவுக்கு பவானியுடைய தந்தையைக் குணப் படுத்தி விட்டீர்கள் அல்லவா? வீட்டிலிருந்தபடியே இப்போது அவர் நன்றாகச் சம்பாதிக்கிறார். பவானியின் சம்பளம், அவள் அத்தையின் பென்ஷன், எல்லாமே சேமிப்பாகத்தான் மாறிக் கொண்டு இருக்கின்றன" என்று விவரம் சொன்னான்.

"உன் வேலை என்று சொல்லு. மாமனார் நிலையை உயர்த்தி விட்டுப் பெண் கேட்கப் போகிறாய். கெட்டிக்காரன். அவர் சம்பாதிக்கும்வரை, பவானி திருமணம் செய்து கொள்ள மாட்டாள் என்று உன்னிடம் சொன்னபோதே, இதை நான்

எதிர்பார்த்திருக்க வேண்டும்'' என்று சொன்னபோது அகல்யாதேவி முகத்திலும் புன்னகை இருந்தது.

அதன்பின், முன்னர் இருந்தது போல, இருவரும் சகஜமாகப் பேசிக் கொண்டு பவானி சுந்தரவதனம் வருகைக்காகக் காத்திருக்கலாயினர்.

ஆனால் நேரம் போய்க் கொண்டு இருந்ததே தவிர, அவர்கள் இருவரும் திரும்பி வரவே இல்லை.

முதல் அரை மணிநேரத் தாமதத்தை இருவருமே பெரிதாக நினைக்கவில்லை.

திட்டமிட்டதைவிட, அதிகத் தூரம் சென்றிருக்கலாம். சுந்தரவதனத்துடைய நண்பன் வீட்டில், பேச்சில் கூடக் கொஞ்ச நேரம் கழிந்திருக்கலாம்.

இப்படியெல்லாம் காரணம் கற்பித்துக் கொண்டு கவலைப்படாமலே காத்திருந்தனர்.

"நீ வந்திருக்கிறாய் என்று தெரிந்தால் பாதி தூரத்திலேயே, பவானி திரும்பி வந்திருப்பாள்." என்று அகல்யாதேவி ஜோக்கடிக்க புவனன் வாய்விட்டுச் சிரித்தான்.

ஆனால் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக, அவர்கள் வரவில்லை என்றானதும், அவர்கள் வரவுக்காகக் காத்திருந்த இருவருக்கும், உள்ளூரக் கலக்கம் உண்டாயிற்று.

சுந்தரவதனம் மது பாட்டிலை வெளியே எடுக்கவும், பவானிக்குத் திகைப்புடன் கோபமும் வந்தது.

"என்ன இது சுந்தரம் சார்?" என்று ஆத்திரமாகக்-கேட்டாள் அவள்.

"ரொம்பக் கஷ்டமான கேள்வி கேட்கிறாயே, பவானி. இது என்னது?" என்று மது பாட்டிலைத் தூக்கி பிடித்து, இப்படியும் அப்படியுமாகத் திருப்பிப் பார்த்து ஆராய்வது போல, நடித்து விட்டு "நான் பார்த்த அளவில் இது ஒரு மதுப்புட்டி மாதிரிதான் தெரிகிறது. எதற்கும் குடித்துப் பார்த்தே சொல்லி விடுகிறேனே" என்று கூறி பாட்டிலைத் திறந்து அப்படியே வாயில் கொஞ்சம் ஊற்றிக் கொண்டான் சுந்தரவதனம்.

பவானி ரொம்பவே பிரமித்துப் போனாள்.

தாயின் மகிழ்ச்சிக்காகக்குடிப்பதை விட்டுவிடப் போவதாக இங்கு வரும் வழியில் கூட இந்த சுந்தரவதனம் சொன்னதென்ன? நேர் மாறாக, இப்போது மொடாக் குடியனைப் போலத் தண்ணீர் கூடச் சேர்க்காமல் அப்படியே குடிப்பது என்ன?

"என்ன சுந்தரம் சார், வரும்போது என்னிடம் என்ன சொன்னீர்கள்? இதை அடியோடு விடுவதற்காக மறுவாழ்வு மையத்தில் சேர்வதாகச் சொல்லவில்லை? இப்போது..."

"அம்மாவும் நீயுமாகச் சேர்ந்து மறுவாழ்வு மையத்துக்கு என்னை அனுப்பிவிட முடிவு செய்து விட்டீர்கள். அதில் சேர்ந்த பிறகு இதைத் தொடக்கூட முடியாதே. அதனால் இன்று ஆசை தீரக் குடித்து முடித்துவிடப் போகிறேன்" என்று சொல்லி இன்னும் கொஞ்சம் குடித்தான் அவன்.

"அம்மாவின் மகிழ்ச்சிக்காக வாழப் போவதாகச் சொல்லிவிட்டு, நீங்கள் இப்படிக் குடிப்பதைப் பார்த்தால், உங்கள் அம்மாவுக்குச் சந்தோஷமாகவா இருக்கும்?" என்று எரிச்சலோடு கேட்டாள் பவானி.

"ஆகா, முழுசாகக் குடித்து முழுக்க மறந்து விடுவதற்குள் நல்ல வேளையாக நினைவுப்படுத்தினாய். அம்மாவின் மகிழ்ச்சிக்கான என் திட்டத்தைச் சொல்லுகிறேன் என்றேன் இல்லையா? வா. வந்து உட்கார். உட்கார்ந்து என் திட்டத்தைக் கேள்." என்று அவன் அமர்ந்திருந்த சோஃபாவில் அருகே உட்காருமாறு சைகை செய்தான்.

"முதலில் அந்த பாட்டிலைக் கீழே வையுங்கள்." என்றவள், அவனது சைகையை அலட்சியம் செய்து இன்னோர் இருக்கையில் அமர்ந்தாள்.

அவள் பேச்சை அலட்சியம் செய்து இன்னொரு மிடறு இறக்கினான் அவன்.

"இதைக் கவனி பவானி. என் அம்மாவின் மருத்துவமனை பற்றி சொன்னேனில்லையா? அந்த இடத்தின் மதிப்பு இன்று

மூன்று கோடி ரூபாய், அந்த மருத்துவமனை... எப்படியும் எட்டுப் பத்துக்கோடி பெறும். அதற்கு மேலாக மருத்துவமனைக்கு டாக்டர் அகல்யாதேவி சம்பாதித்து வைத்திருக்கும் நல்லெண்ணத்தின் மதிப்பு வேறு. இரண்டு மூன்று கோடி தேறும். மொத்த மதிப்பு கிட்டத்தட்டப் பதினைந்து கோடி என்ன? அடேயப்பா, என்று வாயைப் பிளக்கத் தோன்றுகிறதா?"

அவள் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்க, அவன் தொடர்ந்தான். "இந்தப் பதினைந்து கோடிக்கும் வாரிசு நான்தான். நான் மட்டுமேதான். எனக்கும் என்னை மணந்து என்னோடு குடும்பம் நடத்துகிறவளுக்கும் என்ன நாக்கு ஊறுகிறதா?"

"உங்களுக்குச் சொத்து வந்தால் எனக்கு நாக்கு ஊறுவானேன்? முதலில் உடம்பை நேராக்கிக் கொண்டு...."

பவானி மேலே பேசுமுன், "ஊறித்தானடி ஆக வேண்டும்" என்று சோஃபாவை ஒரு குத்து குத்தினான் சுந்தரவதனம்.

பவானி அதிர்ந்து நோக்க, "உனக்கு நாக்கு ஊறித்தான் ஆக வேண்டும்" என்று திருப்பிச் சொன்னான் சுந்தரவதனம்.

என்ன உளறல் இது என்று அவள் பார்வையில், அவன் மேலும் பேசினான். "பதினைந்து கோடி. இதை நம்பித்தானே இவளிடம் மறுபடியும் வந்து சேர்ந்தேன்.. இப்போது பார்த்தால் என்னைப் பெற்ற பிசாசு, சொத்தை எனக்குத் தர மாட்டாளாம். எனக்குப் பிறக்கிற பிள்ளை பேரில்தான் சொத்து இருக்குமாம். அதாவது நீ எனக்குப் பெற்றுத் தருகிற பிள்ளை பேரில்..."

"என்ன உளறுகிறீர்கள்...?" என்றாள் அவள் பொறுக்க மாட்டாமல்.

டாக்டரை, சுந்தரவதனம் பிசாசு, அவள் இவள் என்றதனால் வந்த அதிர்ச்சி வேறு.

"உளறலே கிடையாது. நான் சொன்னதெல்லாம் உண்மை. உண்மையைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்று சத்தியம் வேணுமானால் பண்ணட்டுமா? நான் சொன்னது நிஜம்தாண்டி. அந்த ராட்சசி, அப்படியேதான் எழுதி வைத்திருக்கிறாளாம்.

வந்த ஆத்திரத்துக்கு குத்திக் கொலை பண்ணிவிடலாமா என்று கூடத் தோன்றியது. ஆனால் அதனால் சொத்து வராதே. அதனால் அந்த எண்ணத்தை விட்டுவிட்டேன். இதோ பார். உனக்கு ஒரு கோடி ரூபாய் தருகிறேன். ஒரு கோடி என்றால் எவ்வளவு தெரியுமா நூறு லட்சம். ஒரு லட்சம் எண்ணிப் பார்த்திருப்பாயா? நூறு மடங்கு தருகிறேன். என்னை மணந்து கொள். பிறகு எப்படி வேண்டுமானாலும்... இல்லை. ஒரு பிள்ளையைப் பெற்றுத் தந்து விட்டுப்போ. இன்றைக்கு அச்சாரமாய்... "

பிள்ளை பெறுவதா? இவனுக்கா?

அருவருப்பு அவள் முகத்தில் தெரியவும், "கவலைப் படாதே. குடித்துவிட்டால் நான் காதல்மன்னன் பதினேழு வயதில் தொடங்கி, கிட்டத்தட்ட இருபது ஆண்டு அனுபவம். உன்னை சுகப்படுத்த எனக்குத் தெரியும்" என்று பீற்றத் தொடங்கினான் சுந்தரவதனம்.

ஆத்திரமுற்று, "முதலில் உன் சுகம் நிலைக்குமா என்று பார். ஓங்கி இரண்டு அறை விட்டேன் என்றால் தாங்க மாட்டாய். அதை யோசித்துப் பேசு" என்று அதட்டினாள் பவானி.

சுந்தரவதனம் மௌனமாகக் குடித்துக்கொண்டிருக்கவும், "மரியாதையாக எழுந்து வீட்டுக்கு வாருங்கள், சுந்தரம் சார், அல்லது... நீங்கள் வேண்டுமானால் இங்கே இருந்து குடித்து முடித்துவிட்டு வாருங்கள். நான் போகிறேன்" எழுந்தாள்.

"போக முடியாது" என்றான் அவன் அலட்சியமாக. "சாவியில்லாமல், இந்தக் கதவை உள்ளிருந்தும் திறக்க முடியாது. வெளியே இருந்தும் அப்படித்தான்" என்றவன், ஒரு சொட்டு மீதமின்றி பாட்டிலில் இருந்த மது முழுவதையும் குடித்து முடித்தான்.

சுந்தரவதனம் பொய் சொல்லுகிறானோ என்று அவன் மீது ஒரு கண்ணை வைத்தபடி, வேகமாகசென்று கதவைத் திறந்து பார்த்தாள் பவானி. திறக்க முடியவில்லை. ஆக இவன் இந்த விஷயத்தில் பொய் சொல்லவில்லை.

ஆனால் ஏன் இந்த மடத்தனம்? இதனால் அவனுக்கு என்ன லாபம்? ஏனெனில், அப்படி ஒன்றும் அவளை அவன் மடக்கிவிட முடியாது.

“உங்களால் என்னை ஒன்றும் செய்து விட முடியாது. அப்படியிருக்க எதற்காக இந்த மடத்தனம்?” என்று அலட்சியமாகக் கேட்டாள்.

ஏன் அவன் சொன்னான். அதுவும், ரத்தத்தைச் சில்லிட வைக்கும் விதத்தில்.

குடித்து முடித்த காலி பாட்டிலை அருகே வைத்துவிட்டு, நன்றாகச் சோம்பல் முறித்தான் சுந்தரவதனம்.

பவானியை நோக்கி, “உன்னிடம் பேசி, கல்யாணத்துக்கு ஒத்து கொள்ளச் செய்யும்படி, என்னைப் பெற்ற அந்த முட்டாள் சொன்னாள். சரியான மடச்சி, பெரிய டாக்டராம். கொஞ்சமாவது அறிவு இருந்தால் அப்படிச் சொல்லுவாளா? முட்டாள், முட்டாள்” என்று தாய்க்கு அர்ச்சனை செய்தபடி மெல்ல எழுந்தான்.

சுற்றும்முற்றும், பார்த்தவன் கண்களில் அறையின் நடுவில் போடப்பட்டிருந்த அழகாக சலவைக் கல் மேஜைப்பட்டது. காலி பாட்டிலை எடுத்துக் கொண்டு, மேஜையை நோக்கி நடந்தான்.

என்ன செய்யப் போகிறான் என்று பவானி கவனத்துடன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே, பாட்டிலைத் தூக்கி மேஜை விளிம்பில் ஓங்கி அடித்தான்.

பாதியளவில், கோணலும், மாணலுமாக பாட்டில் உடைந்தது.

அதை உயரே தூக்கி அழகு பார்த்துவிட்டு, “உன்னை ஒத்துக் கொள்ள வைத்துவிடுவதாகச் சொல்லி விட்டுத்தான் வந்தேன். ஆனால் என் வழியில்” என்று பவானியின் புறம் திரும்பினான் சுந்தரவதனம்.

பாட்டிலை நீட்டிக் காட்டினான்.

“பார்த்தாயா? உடம்பில் எங்கே பட்டாலும் அங்கங்கே கீறி விடும். இப்போது என்ன சொல்லுகிறாய்? என் விருப்பம் போல

நடக்கப் போகிறாயா? அல்லது உடம்பெல்லாம் ரத்தக் கோலம் போட்டுக் கொள்ளப் போகிறாயா? முக்கியமாக முகத்தில்'' என்று கேட்டுவிட்டு பாட்டிலை நீட்டியவாறு அவளை நோக்கி நடந்தான் அவன்.

உடைந்த பாட்டிலின் கூர் முனைகள் ஓநாயின் கோரைப் பற்களாய் பவானியை நெருங்கி வந்தன.



## 18



ஒரு சில கணங்கள், நெருங்கி வந்து கொண்டிருந்த கோரைப் பற்களிடமிருந்து விலகிச் செல்வது தவிர பவானிக்கு வேறு எதுவும் தோன்றவில்லை.

பிறகு புவனனின் நினைவு வந்தது.

சுந்தரவதனம் வசிக்கும் வீட்டில் இருக்க வேண்டாம் என்றானே. இவன் இப்படிப்பட்டவன் என்று அறிந்துதானே சொல்லியிருக்கிறான். அவளது நன்மைக்காகச் சொன்னதை அப்போது அவள் காதில் போட்டுக் கொள்ளவில்லை. இப்போது...

இப்போதும், சுந்தரவதனத்திடம் இருந்து தப்ப முடியாது போய் விடும் என்று அவள் அடியோடு நம்பிக்கை இழந்து விடவில்லை. ஆனால் யார் முன்பும், எவ்வித அவமானமும் இன்றி வந்தது போலவே திரும்பிப் போக முடியாதோ என்பதுதான் பெரும் கவலையாக இருந்தது.

பின்னடையும்போதே, அவள் பார்வை அங்குமிங்கும் சுழலுவதைக் கண்ட அவன் சிரித்தான்.

''இங்கிருந்து வேறே எந்த வழியிலும், வெளியே போக முடியாதும்மா. ஏதாவது அறைக்குள் புகுந்து, உள்ளே தாளிட்டுக் கொண்டு போரடிப்பாயோ என்று எல்லா அறைகளையும் பூட்டிவிடச் சொன்னேன். மாதுவும், நானும் சேர்ந்து

அமெரிக்காவில் என்னவெல்லாம் செய்திருக்கிறோம் தெரியுமா? அதெல்லாம் பிறகு சொல்லுகிறேன். கேட்டால், வாயைப் பிளப்பாய், எல்லாவற்றுக்கும் ஆயுதம், இந்த பாட்டில்தான். எல்லாம் மனோதத்துவம். உன்னை மாதிரிப் பெட்டை நாய்களைப் பற்றி எனக்குத் தெரியும்டீ. அதாலே, கன்னத்திலே ஒரு கீறல் என்றால் என்ன வேணுமானாலும் செய்வீர்களே. என்ன போனாலும் அழகு அழியலாமா? போ.. போடீ.. எல்லாவற்றையும் கழற்றிப் போட்டுவிட்டு அந்தத் திவானில் ஏறிப்படு. சீக்கிரம். ஜல்தி." என்று அவளை விரட்டினான் சுந்தரவதனம்.

முதல் முறையாக பவானிக்கு மெய்யாகவே அச்சம் தோன்றியது.

சேதமின்றி இவனிடமிருந்து தப்பிக்க முடியுமா?

அவள் கலங்கி நிற்கவும், அவனுக்கு எக்காளமாக இருந்தது. "என்ன பயந்து விட்டாயா? என்ன நடக்கும் என்று இப்போது புரிந்து விட்டதில்லையா?போ.. சொன்னதைச் செய்... சும்மா மரம் மாதிரி நின்று என் பொறுமையைச் சோதிக்காதே. இரண்டாவது பாட்டில் போட்டேன் என்றால், நான் மிருகம் ஆகி விடுவேன். அப்புறம், உனக்குதான் கஷ்டம் மரியாதையாக வந்துவிடு!" என்று மிரட்டினான்.

இவனிடம் பயத்தைக் காட்டக் கூடாது திமிர் ஏறுகிறது.

இல்லாத துணிச்சலை முகத்தில் காட்டி, "பெரிய கீறல், இந்தக் காலத்தில் அதற்குப் பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொள்ளலாம், தெரியுமா?" என்றாள் அலட்சியமாக. "அதற்குப் பயந்து கண்ட அசிங்கத்துக்கு உடன்படுவார்களா? சீச்சீ!"

இந்த மாதிரிப் பதிலைச் சுந்தரவதனம் சற்றும் எதிர் பார்க்கவில்லை போலும்.

அடுத்துச் சொல்வது, செய்வது அறியாமல் அவன் திகைத்த போது, பவானியின் கைப்பையுள் இருந்த 'செல்போன்' கிணுகிணுக்கத் தொடங்கியது.

பவானியின் முகம் பளிச்சென்று மலர்ந்தது.

புவனன், அவளுடைய புவனன். அவளுக்கு ஆபத்து என்று எப்படியோ உணர்ந்து, அவளோடு தொடர்பு கொள்ள முயற்சிக்கிறான். இருக்கும் இடத்தை அவனிடம் சொன்னால், உடனே வந்து காப்பாற்றி விடுவான்.

ஆனால், இடையில் நந்தியாக நிற்கும் இந்த வில்லனைத் தாண்டி, மேஜை மேல் இருக்கும் கைப்பையைத் திறந்து, செல்லை எடுத்துப் பேசுவது எப்படி?

பவானியின் கைப்பையினுள் 'செல்' இருப்பதைச் சுந்தரவதனமும் ஊகித்துவிட, அவன் முகம் செங்குரங்காய் மாறியது. "கழுதை, உனக்கு 'செல்' வேறேயாடீ? எவண்டீ கொடுத்தான்?" என்று உறுமினான்.

செயலற்றுப் பார்த்துக் கொண்டிருந்த பவானியின் மேல் ஒரு கண்ணை வைத்தபடி அவளது கைப்பையைத் திறந்து 'செல்போனை' எடுத்தவன், அதைக் காலின் கீழ் போட்டு, ஓங்கி மிதித்தான்.

மேஜைக்கடியில் அதைக் காலாலேயே தள்ளிவிட்டவனுக்குக் கைகள் லேசாக நடுங்கத் தொடங்கின. அவசரமாக, அருகில் இருந்த பெட்டியைத் திறந்து அதிலிருந்த இன்னொரு பாட்டிலை எடுத்தான்.

அவனது மிரட்டல் நினைவு வர, "வேண்டாம் சுந்தரம் சார். இதற்கு மேல் குடிக்க வேண்டாம்." என்றாள் அவசரமாக.

"அப்படித்தாண்டி குடிப்பேன்" என்று கத்திவிட்டு, பாட்டிலைப் பல்லால் கடித்துத் திறந்து பாதி வெளியே வழிய, அவசரமாகக் குடித்தான் சுந்தரவதனம்.

சற்றே நிதானமுற்று, "ஏண்டி கண்ணு, ஏன் குடிக்கக் கூடாது? ஓகோ. இரண்டாவது பாட்டில் பற்றி நான் சொன்னது நினைவு வந்து விட்டதா? புரியுதா? என்ன நடக்கும் என்று தெரியுதா? இனியானும், நான் சொல்றபடி நட, இனிமேல், நான் பொறுமையாக இருக்க மாட்டேன். சொல்லு. ஒழுங்காக வரியா?

அல்லது குத்துப்பட்டுச் சாகிறியா?'' என்று சிறு குழறலுடன் அவளைப் பயமுறுத்த முனைந்தான்.

பவானி அவசரமாக யோசித்தாள்.

வீட்டுக் கதவைச் சுந்தரவதனமாகத் திறந்து விடாமல் இங்கிருந்து தப்புவது கடினம்.

இந்த 'செல்' விஷயமாக அவளுக்கு ஒரு சிறு நம்பிக்கை இருந்தது.

எப்படியாவது சுந்தரவதனத்துக்குத் தெரியாமல், அதை எடுத்துப் பேச முடிந்தால்...என்று அதற்கு வழி தேடி யோசித்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் இப்போது இந்த முரடன் மிதித்த மிதியில், 'செல்' நாசமாகிப் போயிருக்கும்.

'செல்'லை அவள் எடுக்கவே இல்லையே. என்ன ஆபத்தோ என்று யோசித்து, புவனன் செயல்படக் கூடும். ஆனால் அவள் இருக்கும் இடம் தெரியாமல் அவனும்தான் என்ன செய்ய முடியும்?

அப்போது, அவளாகத்தான் எப்படியாவது தப்ப வேண்டும்.

மேலும் மேலும் குடித்து இருந்த கொஞ்ச அறிவையும் இழந்து கொண்டிருந்த சுந்தரவதனத்தைப் பார்த்ததும், அவளுக்கு ஒரு யோசனை தோன்றிற்று.

"சாவதற்கு நான் அஞ்சவில்லை. ஆனால் என்னைச் சாகடிப்பதற்கு நீங்கள்தான் பயப்பட வேண்டும்!'' என்றாள் தெளிவாக.

"ஏன்? பழைய படங்களில் வருகிற மாதிரி, உன் சாவுக்குப் பழி வாங்க என்று ஏதாவது பிள்ளை கிள்ளை இப்போதே பெற்று வைத்திருக்கிறாயா? அல்லது எவனாவது காதலன் என் மண்டையை உடைக்க வருவானா?'' என்று ஏளனமாகக் கேட்டான் சுந்தரவதனம்.

"இரண்டும் இல்லை. ஆனால் போலீஸ் வரும். வீட்டில் உங்கள் அம்மாவிலிருந்து இங்கே உள்ள வாட்ச்மேன் வரை, எல்லோரும் உங்களுக்கு எதிராக சாட்சி சொல்லுவார்கள். வழக்கு எவ்வளவு காலம் நடக்குமோ? தூக்குத் தண்டனை இப்போது அநேகமாகக் கொடுப்பது இல்லை. ஆனால் ஆயுள் தண்டனை நிச்சயம். பதினாலு ஆண்டுகள். அதிலிருந்து தப்பவே முடியாது."

"பயமுறுத்திப் பார்க்கிறாயா?"

"இல்லை. நிஜத்தைச் சொல்லுகிறேன். இந்தப் பதினாலு ஆண்டுகளும், வயிறு வாடாமல், களி கிடைத்து விடும். ஆனால் இது?" என்று குடிப்பது போலச் சைகை காட்டினாள் பவானி. "அங்கே இது ஒரு சொட்டு கூடக் கிடைக்காதே. ஆக மறுவாழ்வு மையத்துக்கே போகாமல், குடிப்பழக்கம் நிற்கப் போகிறது. மையத்தில் சிகிச்சை எடுத்துக் கொண்டு ஒழுங்காய் வெளியே இருந்திருக்கலாமே, என்று 'ஓ' என்று அழப் போகிறீர்கள்" என்று கிண்டல் போலக் கூறி முடித்தாள் பவானி.

கூடக் கொஞ்சம் நிதானமாக இருந்திருந்தால், சுந்தரவதனம் எப்படி நடந்து கொண்டிருப்பானோ? தொடங்கியதை நிறுத்த முடியாமல் குடித்துக் கொண்டு இருந்தவன், அது இல்லாமல் போகக்கூடும் என்றதும் நிலையிழந்து, "ஏய், என்னடீ சொன்னாய்? உன்னை இன்று விடுவதில்லை" என்று கண்களில் கொலை வெறியுடன் அவளை விரட்டத் தொடங்கினாள்.

இதயம் தொண்டையில் வந்து துடிக்க, அவள் ஓட அவன் விரட்ட இது கொஞ்ச நேரம் நடந்தது.

ஒரே அறைதான் என்றாலும், அந்தப் பெரிய அறையில் கிடந்த சோஃபாக்களும் மேஜை, டீபாய்களும், கூடவே அவளது ஆரோக்கியமும் பவானிக்குத் துணை புரிந்தன.

அப்போதும் கூட, அவளுக்கு ஒரு கையில் சிறு கீறல் விழுந்து விட்டது. லேசான ரத்தக் கசிவு.

அவனுக்கு அதுவே திருப்தியாகி, கெக்கலித்தான் நின்று மூச்சு வாங்கியபடி, "பார்த்தாயா? இப்படித்தான் நடக்கும்.

இனிமேல் இன்னும் அதிகமாக மாதுப் பையனின் கார்ப்பெட்டில் ரத்தக் கறையாகி விடக்கூடாது என்று இத்தோடு விட்டேன். இனியாவது நான் சொன்னபடி செய்'' என்று உத்தரவிட்டு விட்டு மீண்டும் தாகசாந்தி செய்து கொண்டான்.

உள்ளூர, இப்போது பவானிக்கு நடுக்கம்தான்.

அந்த உடைந்த பாட்டில் சுந்தரவதனத்தின் கையில் இருக்கும்வரை, அவளுக்கு ஆபத்துதான்.

உள்ளே போயிருக்கும் மதுவின் சக்தியோ, என்னவோ அவள் எதிர்பார்த்ததை விட, அதிக வேகம் அவனிடம் இருந்தது. இதுவும் அபாயமே.

இப்போது அவளுக்கு மீந்திருக்கும் ஒரே வழி, அந்த பாட்டிலைக் கைப்பற்றுவதுதான். அதைக் கையில் வைத்துக் கொண்டு, அவளை மிரட்டிக் கதவைத் திறக்கச் செய்து, இங்கிருந்து வெளியேற வேண்டும்.

வழி ஒன்றைக் கண்டுபிடித்ததும், அதை நிறைவேற்ற முனைந்தாள் பவானி.

அந்த அறையில் அங்கங்கே வைக்கப்பட்டிருந்த பூஜாடிகள், கலைப் பொருட்கள் போன்றவற்றை எடுத்து சுந்தரவதனத்தின் மேல் எறியத் தொடங்கினாள். முடிந்தவரை அவன் கையைக் குறி வைத்துதான் எறிந்தாள். ஆனால் தன் நோக்கத்தை அவன் கண்டு கொள்ளக் கூடாது என்பதற்காக மொத்தமாக அவனைத் தாக்குவது போலக் காட்டி கொண்டாள்.

முதலில் அவள் பொருட்களை எறியத் தொடங்கியதும் ஆத்திரத்துடன் ''ஏய், என்ன செய்கிறாய்? அதெல்லாம் என்ன விலை தெரியுமா? எல்லாம் பழங்காலப் பொருட்கள். உடைத்து நாசமாக்கி விடாதே. அப்புறம் உன்னைச் சும்மா விட மாட்டேன்'' என்று கத்திய சுந்தரவதனம், ஒரு பேப்பர் வெயிட், அவன் தோளில் 'நச்' சென்று விழவும் வலியில் துள்ளிக் குதித்தான்.

அதற்குப் பிறகு அவனுக்கு அவன் நண்பனின் பொருட்கள் மேல் அக்கறை இருக்கவில்லை, தன்னைக் காத்துக் கொள்வதில்

மட்டுமே அவனது கவனம் செல்ல, பவானி வீசிய பொருட்கள் தன் மீது படாமல், இங்கும் அங்குமாக ஓடிக் கொண்டிருந்தான்.

விரைவிலேயே அவனது வேகம் குறைந்துவிட, பவானியின் தாக்குதல் அதன் இலக்கைச் சரியாக எட்டியது. வலியால் சுந்தரவதனத்தின் கைப்பிடி தளர்ந்து அவனது ஆயுதம் கீழே விழுந்தது.

ஆனால் பவானி என்னதான் வேகமாக ஓடிச்சென்று பாட்டிலை எடுத்தபோதும், அவனும் அவளது நோக்கத்தை உடனே ஊகித்து பாட்டிலைக் கைப்பற்ற முயற்சித்தான்.

இருவருக்கும் இடையே நடந்த சிறு போராட்டத்தின் முடிவில் பாட்டில் பவானியின் கைக்கு வந்துவிட்டபோதும், அவளது மணிக்கட்டில் கண்ணாடி ஆழமாகக் கீறி, ரத்தம் சிந்தத் தொடங்கியது.

மணிக்கட்டில் வெட்டு, ரத்தம் தானாக நிற்காது. ரத்தம் கொட்டுவதை நிறுத்தாவிட்டால் உயிருக்கே ஆபத்து. இதெல்லாம் பவானிக்குத் தெரியும்.

ஆனால் அந்த மாதிரி முயற்சி ஏதும் செய்ய முனைந்தால் காரியம் அடியோடு கெட்டுவிடும் என்பதை உணர்ந்து கைக்காயத்தை அப்படியே அலட்சியம் செய்து சுந்தர வதனத்தை மிரட்டினாள்.

“போங்கள். மரியாதையாக உடனே போய்க் கதவைத் திறவுங்கள். இல்லாவிட்டால் நீங்கள் என்னை மிரட்டினீர்களே அது போலக் கோடு உங்கள் மேல் விழும். ம். சீக்கிரம்” என்று அதட்டியபடி, அவனை விரைந்து நெருங்கினாள்.

பவானியிடமிருந்து ரத்தம் சொட்டுவதைச் சுந்தரவதனமும் கவனித்தான். அவளது உயிருக்கு அபாயம் நேரக்கூடும் என்று அவன் எண்ணவில்லை. ஆனால் அவளால் அதிக நேரம் முழு பலத்துடன் தாக்குப் பிடிக்க முடியாது என்பதும் அவனுக்குப் புரியாமல் இல்லை. ஆனால் அவள் மனதில் வேகம் இருந்தது.

அது தந்த வலு. அவள் உடம்பில் இருந்தது. அப்போதைக்கு அவனிடம் இல்லாதது.

தன் சக்தியை எல்லாம் திரட்டி, அவள் அவனைக் குத்திவிட்டால்?

காயம் வலியைத் தாங்குகிற உடம்பு அவனது இல்லையே. அடுத்தவர் ரத்தத்தை அலட்சியமாக நினைக்கிறவன்தான். ஆனால் தன் உடம்பிலிருந்து ரத்தம் வரக்கூடும் என்ற எண்ணமே அவனை நடுங்க வைத்தது. எனவே, "பொறு, பொறு. அவசரப்பட்டுக் குத்தி விடாதே" என்றபடி, தன் கைப்பெட்டியில் இருந்து சாவியை எடுத்தான்.

அப்போதும் குயுத்தியோடு சாவியை மெள்ளவே எடுத்தான்.

கதவைத் திறக்கும்போதும், கை நடுங்குவது போல நடித்து நேரம் போக்கினான்.

பவானி சோர்வதும், அவள் கையிலிருந்து பாட்டில் நழுவுவதும் தெரிய எக்களிப்புடன் நிமிர்ந்தவன் கண் முன்னே கதவு திறக்கவும் திகைத்தான்.

திறந்த கதவின் வழியே உள்ளே வந்தவர்களை பார்த்ததும், அவனுக்கும் முழி பிதுங்கிப் போயிற்று.

முதலில் உள்ளே வந்த அகல்யாதேவி, மகனைக் கண்டதும், "ஆக நீ திருந்தவே இல்லை. திருந்தியது போல நடித்தாய். அப்படித்தானே?" என்று கசப்புடன் கேட்டார். "லட்சுமணன், இவனைப் பிடித்து இழுத்துப் போய் நம் காரில் உட்காரவை" என்று பணியாளிடம் உத்தரவிட்டார்.

அதற்குள், "டாக்டர் இங்கே பவானியைப் பாருங்கள்" என்று பதற்றத்துடன் புவனேசன் அழைக்க அங்கே திரும்பினார்.

அகல்யாதேவி மருத்துவராக இருந்ததால், பவானி பிரச்சினையின்றிப் பிழைத்தாள் எனலாம்.

"ரத்தம் அப்படியொன்றும் அளவு மீறிச் சேதமாகி விட வில்லை. கொஞ்சம் ரத்தம் ஏற்றினால் போதும். நாமே பார்த்து

விடலாம். அவள் வீட்டில் தெரிவித்து, வீணாக அவர்களைக் கலவரப்படுத்த வேண்டாம்'' என்று தன் மருத்துவ மனையிலேயே பவானியைச் சேர்த்து சிகிச்சை செய்தார்.

அவளைத் திரும்ப வீட்டுக்குக் கூட்டி வரும் பொறுப்பைப் புவனனிடம் ஒப்படைத்து விட்டு, திரும்பினார். வீட்டில் இருக்கும் கோடரிக்காம்பை என்ன செய்வது என்று பார்க்க வேண்டுமே.

மருத்துவமனையிலிருந்து பவானியைப் புவனன் வீட்டுக்கு அழைத்து வந்த தினம் விசித்திரமான விதமாக ஒரு வியாழக் கிழமையாக இருந்தது.

காரை ஓட்டிக் கொண்டிருந்த புவனன் திடீரென்று "நம் திருமணத்தைக் கூட ஒரு வியாழக்கிழமைதான் வைத்துக் கொள்ள வேண்டும்'' என்று சொல்ல, தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு நிமிர்ந்து அமர்ந்தாள் பவானி.

"என்னது?''

காரை ஓரமாக நிறுத்தி அவளைப் பார்த்துப் புன்னகை செய்தான் புவனேசுவரன். "திருமணம் பவானி திருமணம். இந்த மேளம் கொட்டி மந்திரமெல்லாம் சொல்லித் தாலி கட்டுவார்களே, அது. நாம் கூடச் செய்து கொள்ளலாம் என்று நினைத்தேன். அவ்விடத்து அபிப்பிராயம் எப்படி?'' என்று புருவம் உயர்த்திக் கேட்டான்.

இதழ்கள் எழிலாக வளைய, ஓர் ஆறுதல் மூச்சுடன் அவன் தோளில் சாய்ந்து கொண்டாள் அவள். "நீங்கள் சொல்லச் சொல்லக் கேளாமல், எப்படிப் போய் மாட்டிக் கொண்டேன் பாருங்கள்'' என்றாள் மெல்லிய குரலில்.

அவள் முதுகை மெல்ல வருடிக் கொடுத்தபடி, "யாருமே சுந்தரவதனத்தை இந்த அளவு வில்லனாக நினைத்துப் பார்க்கவே இல்லையே. டாக்டரைப் பார். மருத்துவத்திலேயே இத்தனை ஆண்டு அனுபவம் இருந்தும், அவராலும் கண்டு கொள்ள முடியவில்லையே'' என்றான் அவன்.

"மேடத்துக்குப் [illegible]''

“உனக்கு நன்றிக்கடன்.” என்று அவளுக்காகச் சமாதானம் சொன்னான் அவன்.

நிமிர்ந்து, அவன் முகத்தைப் பார்த்து அமர்ந்து, “சரியான சமயத்தில் எப்படி வந்தீர்கள், புவனன்? செல்லில் கூடப் பேச முடியவில்லையே” என்று பவானி விவரம் கேட்டாள்.

“செல்லில் பேசாவிட்டாலும், நீ ஆபத்தில் இருக்கிறாய் என்று காட்டியது அதுதான். நான் டாக்டரிடம் பேசிக் கொண்டிருந்தபோது...” என்று தொடங்கி அந்த உரையாடல் பற்றி அவளிடம் சொன்னான் அவன்.

“ரொம்ப நேரமாகி விட்டது என்று இரண்டு பேருக்குமே கொஞ்சம் கவலை தோன்றவும்தான். உன் செல்லுக்குப் போட்டேன். முதலில் எடுக்கவே காணோம்.பிறகு தட் தட் என்று...”

“சுந்தரவதனம் அதை மிதித்து, உடைக்க முயன்றார்” என்றாள் பவானி.

“ஓகோ. அப்படியா விஷயம்?” என்று சிரித்தான் புவனன்.

“ஆனால் அவர் மிதித்த விதத்தில் எப்படியோ, ‘ஆன்’ பட்டனை அழுத்தியிருக்கிறார். அப்படியே கிடந்து அங்கே நடந்ததை முழுமையாக எங்களுக்கு ஒலிபரப்பிவிட்டது கேட்கக் கேட்க, இருவரும் நடுங்கிப் போனோம். ஆனால் நீ மாட்டிக் கொண்டு இருப்பது தெரிந்ததே தவிர, நீ எங்கே இருக்கிறாய் என்று தெரியவில்லை.”

“அது தெரிய வழியில்லையே என்று நானும் கலங்கினேன்” என்றாள் பவானி.

“நல்ல வேளையாக சுந்தரவதனம் வேலையாட்களுடன் பழகுவது பற்றி டாக்டர் சொன்னது எனக்கு நினைவு வந்தது. கூப்பிட்டுக் கேட்டதும், லட்சுமணன் விஷத்தைக் கக்கி விட்டார். அவரை விட்டுத்தானே, அந்த ஃப்ளாட் சாவியை சுந்தரவதனம் வாங்கியதாம்.”

“ஓகோ. அப்படியா விஷயம்? இங்கே என்னிடம் அவருடைய சினேகிதன் சாவியைக் கொடுத்துவிட்டுப்

போயிருப்பதாகவும், விரைவில் வந்துவிடுவதால் ஃப்ளாட்டில் சற்று நேரம் உட்காருமாறு கேட்டிருப்பதாகவும், சொன்னார். ஆக எல்லாம் முன்கூட்டியே, பயங்கரமாய்த் திட்டம் போட்டுவிட்டு, எங்களிடம் சாது மாதிரி நடித்திருக்கிறார். எல்லோருமே எப்படி ஏமாந்துவிட்டோம். நீங்கள் மட்டும்தான் சுந்தரவதனத்தை நம்பாதது."

"நானும் இந்த அளவுக்கு எதிர்பார்க்கவில்லை, பவானி" என்றான் புவனன்.

பிறகு பழைய கதையைத் தொடர்ந்தான். "நீ இருக்கும் இடம் தெரிந்ததும், விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்தோம் ஃப்ளாட் பொறுப்பாளரைப் பார்த்து விவரம் சொல்லி, அவசர நேரத்துக்குப் பயன்படுத்த வைத்திருக்கும் மாஸ்டர் கீயுடன் வந்து திறக்கும்வரை, உயிரைக் கையில் பிடித்திருந்தோம், தெரியுமா?" என்றவன், சட்டென அவளை இழுத்து இறுக அணைத்தான். "கொஞ்ச நேரம் என்ன பயம் பயந்து விட்டேன், தெரியுமா? உன்னை பார்ப்போமா, என்று சே..."

அந்த நினைவில், அவனது உடல் சிலிர்ப்பதை உணர்ந்த பவானி, வியப்புடன் தலையை உயர்த்தி அவனைப் பார்த்தாள்.

அவளது நெற்றி மீது விழுந்த கூந்தல் சுருளை ஒதுக்கி விட்டபடி, "என்னடா?" என்று மென்மையாக வினவினான் புவனன்.

"இவ்வளவு அன்பை மனதில் வைத்துக் கொண்டு என்னிடம் ஒன்றுமே சொல்லவில்லையே."

"எப்படிச் சொல்லுவது? எந்த வகையில் தொடங்கினாலும், உன்னிடம் பிரதிபலிப்பே இல்லையே" என்றவன் அவள் புரியாமல் கேள்வியாய் விழி அகல நோக்கவும், லேசாக முறுவலித்து, "ஆமாம். இப்போதும் கண்ணை விரி. உன் விடுமுறை நாளை அறிந்து, காரோடு வந்து காத்திருந்தேனே. ஏன் என்று ஒரு வார்த்தை கேட்கக் கூட, உனக்குத் தோன்றவில்லையே" என்று குறைப்பட்டான் அவன்.

கண்கள் மலர, "ஐயோ, அன்றைக்கு எனக்கு மண்டை வெடித்து விடுகிறமாதிரி, எப்படி வந்தது தெரியுமா? கேட்டால் தப்பாக நினைப்பீர்களோ என்று எவ்வளவு கஷ்டப்பட்டு அடக்கினேன்" என்று அவள் கூறிய விதத்தில் அவனுக்குச் சிரிப்பு வந்தது.

அவள் மூக்கைப் பிடித்து ஆட்டிவிட்டு, "அன்றைக்குச் சாக்குக் கிடைத்தது என்று அணைத்தேனே. அன்று கொஞ்சம் நம்பிக்கைதான். ஆனால் உடனேயே முறுக்கிக் கொண்டாயா? சொத்தென்று ஆகிவிட்டது." என்று தொடர்ந்தான் அவன்.

"பின்னே? நீங்கள் அதை வெறுமனே 'மாதிரிக்கு ஒன்று' என்றீர்களே. நெஞ்சே வெடித்துவிடும் போல், எனக்கு எப்படி இருந்தது தெரியுமா?"

"தெரியாதே... நீ தெரியவிடவில்லையே" என்று சிரித்தான் அவன்.

"பிறகு, 'செல்போன்' தந்தேனே. அதில் நீ பேசத் தொடங்கிய பிறகுதான் எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாக நம்பிக்கை வந்தது."

ஆச்சரியமாக நோக்கி, "எனக்கும், அதன் பிறகு தான் நம்பிக்கை வந்தது" என்று சொல்லிச் சிரித்தாள் பவானி.

"ஆமாமாம். மகா பொருத்தம்" என்று கூடச் சேர்ந்து சிரித்தான் புவனன். "எப்படியோ, அதன் பிறகுதான் தைரியமான என் பெற்றோரிடம் உன்னைப் பற்றிச் சொன்னேன், அவர்களுக்கு ரொம்ப சந்தோஷம். பவானி என்றால் பராசக்தியின் அழகிய வடிவமாமே. அம்மா சொன்னார்கள். பெயரில் கூட உனக்கும் அவளுக்கும் எவ்வளவு பொருத்தம் என்று பூரித்துப் போனார்கள். இருவரும் உன்னைப் பார்க்கத் துடித்துக் கொண்டு இருக்கிறார்கள். இப்படியே போய் வருவோமா?" என்று கேட்டான்.

"இப்படியேவா? நான் ஒழுங்காக உடுக்கக் கூட.... இப்போது எப்படியோ... இருக்கிறேனே..." என்று ஓர் இனிய படபடப்புடன் தயங்கினாள் அவள்.

தலையைச் சற்றே பின்னுக்குத் தள்ளி, அவளை ஏற இறங்கப் பார்த்தான் அவன். "எப்படியோவா? இல்லையே. எப்போதும் போல ரதியாகத்தானே இருக்கிறாய்?"

மருத்துவமனையிலிருந்து வந்து கொண்டிருக்கிறாள். நலுங்கிய உடை, கலைந்த கூந்தல், கண், முகம் எங்கும் சிறு ஒப்பனை கூடப் போடப்படாத முகம். இதையே ரதி என்றானானால்...

சட்டென எம்பி, அவன் கன்னத்தில் முத்தமிட்டாள் அவள்.




தண்ணீரிலே
தாமரைப்பூ
ரமணிசந்திரன்